ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருக்கோளூரம்மாள் வார்த்தை

## திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்

## விவரணம்




**Dr. V. V ராமாநுஜன்**

(ஆசிரியர், யதிராஜ பாதுகா)



**யதிராஜ பாதுகா**

**திருவல்லிக்கேணி, சென்னை.**

வெளியீடு—1993

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# திருக்கோளூரம்மாள் வார்த்தை

## திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்

விவரணம்

Dr. V. V. ராமாநுஜன் M.A., M Sc., Ph.D
(முன்னாள் பேராசிரியர், சென்னை பல்கலைக் கழகம்)
ஆசிரியர், யதிராஜ பாதுகா

This book is published with financial assistance from
TIRUMALA TIRUPATI DEVASTHANAMS
Under their scheme Aid to Publish Religious Books

வெளியீடு :
யதிராஜ பாதுகா
68, டி. பி. கோயில் தெரு,
திருவல்லிக்கேணி, சென்னை-5

பதிப்பு 1993
காபிரைட் உரிமை
ஆசிரியருக்கே
1000 ப்ரதிகள்

விலை ரூ. 12-00

அச்சிட்டோர்
குரு அச்சகம்
திருவல்லிக்கேணி
சென்னை - 5
போன்: 844371

ஸ்ரீ:

# திருக்கோளூரம்மான் வார்த்தை

## முன்னுரை

எம்பெருமானார் வாழ்க்கையில் நடந்துள்ள சில நிகழ்ச்சிகள் சிறியதாய்த் தோன்றினாலும் நம்மை மெய்சிலிர்க்கவும் சிந்திக்கவும் வைக்கின்றன. ஜகதாசாரியராயிருப்பினும் அவர் குழந்தையுள்ளம் படைத்தவராகவும் எளிமையே உருவானவராகவும், பேதைக்கும் பெண்ணுக்கும் கிட்டுபடியாகவும் வாழ்ந்தார். ஒரு சமயம் ஸ்ரீரங்கத்தில் வீதியில் தெரு மண்ணில் "பெருமாள் விளையாட்டு" விளையாடிக் கொண்டிருந்த சிறுபிள்ளைகள் மண்ணிலே பெருமாள், கோயில் திருவோலக்கம், பிரஸாதம் எல்லாவற்றையும் கற்பித்து விளையாடி மகிழ்ந்திருக்க, அங்கு ஸ்வாமி அகஸ்யாத்தாக வரக் கண்டு "ஜீயா! இதோ உமது பெருமாள்! இதோ ப்ரஸாதம்! பெற்றுக் கொள்ளும்" என்று ஒரு பிள்ளை மண்ணை முகந்து கொடுக்க, இவரும் தண்டனிட்டு, 'தந்யோஸ்மி? என்று அம் மண்ணைத் தமது காஷாயத்தில் பெற்றுக் கொண்டு அப்பிள்ளைகளை மகிழ்வித்துத் தாமும் மகிழ்ந்ததாக அறிகிறோம்.

இன்னுமொரு சமயம், பாண்டிய நாட்டு யாத்திரையில் திருப்புளிங்குடி காய்சினவேந்தப் பெருமாளை ஸேவித்து விட்டு ஆழ்வார் திருநகரிக்குச் செல்ல வேண்டியவர் அங்கு கண்ட இரண்டு இளம்பெண்களை திருக்குருகூர் எவ்வளவு தூரமுள்ளது? என்று வினவ, அவர்கள் இவரை இன்னாரென்று அறியாமையால் துடுக்காக "ஸ்வாமிக்குத் திருவாய்மொழி தெரியாதோ? *கூவுதல் வருதல் செய்திடாய் [9-2-11] என்று ஆழ்வார் பாடியுள்ளாரே?" என்ன, திருப்புளிங்குடிக்கு திருநகரி கூப்பிடு தூரம் என்று அவர்கள் இப்படி சொல்வதைக் கண்டு அவர்களிடம் ஒரு பெரிய பாடம் கற்றவராக மகிழ்ந்து அவர்களை விழுந்து வணங்கியதாக நூல்களில் சரித்திரம் காண்கிறோம்.

ஸ்வாமி ஆழ்வாரைச் சென்று வணங்கிவிட்டு வைத்தமாநிதிப் பெருமாள் பள்ளிகொண்டுள்ளதும் மதுரகவியாழ்வாரின் அவதார ஸ்தலமுமான திருக்கோளூருக்குச் சென்று கொண்டிருக்கையில் ஒரு பெண்பிள்ளை வந்து தண்டனிட அவளை "எங்கு நின்றும் வந்தாய் பிள்ளாய்? எங்கு செல்வது?" என்று வினவ, "திருக்கோளூரினின் றும் செல்கிறேன். எங்குச் சென்றாலும் ஒன்றே" என்று விரக்தி யுடன் பதிலளிக்க "இன்னமென் இளமான் புகுமூர் திருக்

கோளூரே (6-7-1) என்னும் புகுமூர் ஊக்குப் புறப்படுமூராவதே எப்பாடுபட்டாவது இவ்வூரில் இருப்பதல்லவோ தக்கது?'' என்ன, அப்பெண்பிள்ளை ''முசல்புழுக்கை வரப்பிலிருந்தாலென்ன? வயிலிலிருந்தாலென்ன? ஞானசூன்யமான இவ்வடியாள் எங்கிருந்தாலென்ன? ஸ்வாமி போல்வார் வைத்தமாநிதியை மங்களாசாஸனம் பண்ணிஞல் அவனைச்வர்யமும் பெருமையும் பெருகும்'' என்று கூறி இதற்குச்சான்ருக ''அழைத்து வருகிறேன் என்றேனே? அக்ரூரரைப் போலே?'' என்று தொடங்கி 81 வாக்கியங்களை விண்ணப்பித்ததாகச் சரித்திரம் 12000ப்படி குருபரம்பரா ப்ரபாவம் எனும் நூலில் காண்கிறது. இவ்வாக்கியங்களில் பலரும் நன்கறிந்த இதிஹாஸ புராண நிகழ்ச்சிகளும் ஆசாரியர்களின் சரித்திரங்களில் காணும் நிகழ்ச்சிகளும் உண்டு; எளிதில் புரியாத சில வசனங்களும் உண்டு. உடையவர் வாழ்க்கை நிகழ்ச்சிகள் தொடர்புள்ள சில வாக்கியங்களும் காணப்படுகின்றன. ஒன்றிரண்டு (76, 78) பிற்கால நிகழ்ச்சிகளாகத் தோற்றுகையால் பிற்சேர்க்கையோ என ஐயுற இடமுண்டு.

இத்தொடர்பில் திருமலை அநந்தாழ்வான் வார்த்தை ஒன்றும் அறியத்தக்கது. அவர் திருக்கோளூருக்கு பெருமாளை மங்களாசாஸநம் பண்ண எழுந்தருளியபோது ஒருவன் மூட்டை முடிச்சுடன் வெளியேறுவது கண்டு அவனை அழைத்து விசாரித்து அவன் பிழைப்புதேடி வெளியூர் செல்வதறிந்து ''கழுதை மேய்த்தாவது இவ்வூரில் வாழப்பார்க்காமல் ஊரை விட்டு போவதே'' என்று வருந்திக்கூறியதாக வரலாறு.

இவ்வாக்கியங்கள் ஒவ்வொன்றயும் அடியேனுடையதாயார் ஆராய்ந்து விளக்கி, குறிப்புகளும் எழுதிவைத்து தமது நண்பர்களிடையே பிரசாரம் செய்து வந்தார். இது சுமார் 40-50 ஆண்டுகளுக்கு முன் நடந்தது. அடியேனுடைய ஸம்ப்ரதாய ஞானத்துக்கு அக்கோலியவர் அடியேனுடைய தாயாரே, அவருக்கு ஸ்ரீராமாயணம். மஹாபாரதம், திவ்யப்ரபந்தங்ள், பல புராணங்கள் யாவற்றிலும் நல்ல அறிவு இருந்தது. அவர் வாழ்நாளில் இந்த வாக்கிய விளக்கத்தில் அடியேன் அதிக ஆர்வம் காட்டாதது பெருங்குறையே. பின்னர் திருவல்லிக்கேணியில் அடியேனுடைய பழையமாணவர் ஒருவரின் பெற்றோரான ஸ்ரீ T. K. ராமாநுஜதாஸரும் ஸ்ரீமதி ஸ்ரீதேவி அம்மையாரும் ''திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்' என்றொரு நூல் வெளியிடுவதறிந்து என்னிடமுள்ள குறிப்புகளைப்பற்றி அவர்களிடம் சொன்னேன், அவர்களும்

"சில வாக்கியங்களுக்குப் பொருளே விளங்கவில்லை உங்கள் தாயாருடைய குறிப்புகளைத் தந்துதவுங்கள்" என்று கேட்க, அக் குறிப்புகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளும்படி கொடுத்தேன். இதை அவர்கள் 1976ல் வெளியிட்ட நூலில் நன்றி கூறுவதாகக் குறிப்பிட்டுள்ளனர். பல வாக்கியங்களுக்கு அடியேன் தாயார் குறிப்பிலுள்ள விஷயங்களைப் பயன்படுத்தியுள்ளனர்.

அடியேன் தாயார் எழுதி வைத்திருந்த கையெழுத்துப்ரதியைப் பரிசீலித்து, பரிஷ்கரித்து விரிவாக்கி எழுதி இப்போது வெளியிடுகிறேன் அடியேன் செய்துள்ள சில மாற்றங்களை அவர் உகந்து ஏற்பார் என்றே நம்புகிறேன். எப்போதோ செய்திருக்க வேண்டியதை இப்போதாவது செய்யப் பெறுகிறோமே என்ற மன நிறைவுடன் இதை அவர் திருவடிகளில் நினைவஞ்ஜலியாக ஸமர்ப்பித்து வெளியிடுகிறேன்.

அடியேன் தாயார் திருநாமம் வெங்கடாபுரம் ரங்கநாயகி அம்மாள் என்பது திருவல்லிக்கேணியில் ஒரு ஆசார அநுட்டானம் மிக்க குடும்பத்தில் மூத்த குமாரத்தியாகப் பிறந்தவர், அக்காலத்தில் ஆரம்பப்பள்ளிக்குமேல் அவர் படிக்க வாய்ப்பில்லை, சிறுவபதிலேயே சிங்கப் பெருமாள் கோவிலையடுத்த வெங்கிடாபுரம் என்ற கிராமத்தில் வாழ்க்கைப்பட்டு அங்கேயே குடியேறி குடும்பம் நடத்தினர். ஸ்ரீ பார்த்தஸாரதிப் பெருமாளிடம் ஆழ்ந்த பக்தியுள்ளவர் ஒழிந்த நேரத்திலெல்லாம் பலவித நூல்களையும் ஆர்வத்துடன் படிப்பார், பட்டணம் வரும்போதெல்லாம் மஹான்களின் உபன்யாஸங்களையும் கேட்பார். அவருடைய பாக்யம் அவர் தகப்பனார் ஸ்ரீ N L. ஸ்ரீநிவாஸாசாரியர் ஸ்ரீராமாயணம், மஹாபாரதம், புராணங்கள், ஸ்ரீ P-B A. ஸ்வாமி அருளிய திவ்ய ப்ரபந்த திவ்யார்த்த தீபிகை போன்ற பல நூல்களையும் அவருக்கு வாசிக்க வாய்ப்பளித்து, ஊக்குவித்தார். அம்மா அவர்கள் "ரங்கப்பிரியா" என்ற பெயரில் "பக்தன்" முதலான சில பத்திரிகைகளுக்கு விஷயதானம் செய்ததுண்டு. அவர் தமது முதிய ப்ராயத்தில் பரமபதித்து 20 ஆண்டுகளாகின்றன. அம்மா திருக்கோளூரம்மாள் வார்த்தைகளுக்குப் போலியாய் திருவல்லிக்கேணி அம்மாள் வார்த்தை என்ற ஒருசிறு நூலையும் எழுதியுள்ளார். திருக்கோளூரம்மாள் வார்த்தைகளை விளக்கத்துடன் வெளியிடுவதில் மிகவும் பெருமை கொள்கிறேன் இவ்வெளியீட்டுக்கு நிதியுதவியளித்த திருமலை திருப்பதி தேவஸ்தானத்தினருக்கு அடியேன் நன்றிக்கடமைப்பட்டுள்ளேன்

**ஸ்ரீவைஷ்ணவ பாததூளி V. V. ராமானுஜன்**

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:



# திருக்கோளூரம்மாள் வார்த்தை

**பன்னீராயிரப்படி குருபரம்பராப்ரபாவத்திலுள்ள மூல பங்க்திகள்**
திருக்கோளூருக்கு எம்பெருமானாரெழுந்தருளும்போது திருக்கோளூரில் நின்றும் ஒரு பெண் பிள்ளையெதிரே வந்து தண்டனிட்டு நிற்க, "பெண்ணே! நீ எங்கு நின்றும் விடை கொண்டாய்?" என்று கேட்டருள, அப்பெண்ணும் திருக்கோளூரில் நின்றும் விடை கொண்டேனென்று விண்ணப்பஞ் செய்ய, அதனைத் திருச்செவி சாத்தியருளிய எம்பெருமானார், "ஒருவர் கூறையை (உடுதுணியை) எழுவர் உடுத்தி, காய்கிழங்கு சாப்பிட்டு (இப்படி மிகவும் சிரமப்பட்டாவது) *திண்ணமென் இளமான் புகுமூர் திருக்கோளூரே என்கிறபடியே எல்லாருக்கும் புகுமூர் உனக்குப் புறப்படுமூராயிற்றே?" என்றருளிச் செய்தார். அதைக் கேட்ட அந்தப் பெண்பிள்ளை, அடியேன் நாயன்தே—நாயன்தே!

1! அழைத்து வருகிறேன் என்றேனோ அக்ரூரரைப் போல.
2 அகமொழித்து விட்டேனோ விதுரரைப் போலே
3. தேஹத்தை விட்டேனோ ருஷி பத்னியைப் போலே
4. தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப் போலே
5. பிணமெழுப்பி விட்டேனோ தொண்டைமானைப் போலே
6. பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப் போலே
7. தாய்க்கோலஞ் செய்தேனோ அநஸூயையைப் போலே
8. தந்தையெங்கேயென்றேனோ துருவனைப் போலே
9. மூன்றெழுத்துச் சொன்னேனோ க்ஷத்ரபந்துவைப் போலே
10. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப் போலே
11. பிஞ்சாய்ப் பழுத்தேனோ ஆண்டாளைப் போலே
12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரான் போலே
13. ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் போலே
14. நான் (அவன்) சிறியனென்றேனோ ஆழ்வாரைப் போலே
15. ஏதேனுமென்றேனோ குலசேகரர் போலே
16. யான் ஸத்தியமென்றேனோ க்ருஷ்ணனைப் போலே
17. அடையாளஞ் சொன்னேனோ கபந்தனைப் போலே
18. அந்தரங்கஞ்சொன்னேனோ த்ரிஜடையைப் போலே
19. அவன் தெய்வமென்றேனோ மண்டோதரியைப் போலே

20. அஹம்வேத்மி என்றேனோ விசுவாமித்திரரைப் போலே
21. தேவுமற்றறியே(னென்றே)னோ மதுரகவியார் போலே
22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியார் போலே
23. ஆழிமறையென்றேனோ வஸுதேவரைப் போலே
24. ஆயனை(யும்) வளர்த்தேனோ யசோதையாரைப் போலே
25. அநுயாத்ரஞ் செய்தேனோ அணிலங்களைப் போலே
26. அவல் பொரியை ஈந்தேனோ குசேலரைப் போலே
27. ஆயுதங்களீந்தேனோ அகஸ்தியரைப் போலே
28. அந்தரங்கம் புக்கேனோ சஞ்ஜயனைப் போலே
29 கர்மத்தாற் பெற்றேனோ ஜனகரைப் போலே
30. கடித்தலனைக் கண்டேனோ திருமங்கையார் போலே
31. குடை முதலானதானேனோ அனந்தாழ்வான் போலே
32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப் போலே
33. இளைப்பு விடாய் தீர்த்தேனோ நம்பாடுவான் போலே
34. இடைகழியில் கண்டேனோ முதலாழ்வார்களைப் போலே
35. இருமன்னர்(ரைப்) பெற்றேனோ வால்மீகியைப் போலே
36. இருமாலையீந்தேனோ தொண்டரடிப்பொடியார் போலே
37. அவனுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சியார் போலே
38. அவன் மேனியானேனோ திருப்பாணர் போலே
39. அனுப்பிவையுமென்றேனோ வசிஷ்டரைப் போால
40. அடிவாங்கினேனோ கொங்கிற்பிராட்டியைப் போலே
41. மண்பூவையிட்டேனோ குருவநம்பியைப் போலே
42. மூலமென்றழைத்தேனோ கஜராஜனைப் போலே
43. பூசக்கொடுத்தேனோ கூனியைப் போலே
44. பூவைக்கொடுத்தேனோ மாலாகாரரைப் போலே
45. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே
46. வைத்தவிடத்திருந்தேனோ பரதனைப் போலே
47. அக்கரைக்கே விட்டேனோ குஹப்பெருமாளைப்போலே
48. அரக்கனுடன் பொருதேனோ பெரியவுடையார் போலே
49. இக்கரைக்கே சென்றேனோ விபீஷணனைப் போலே
50. இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே
51. இங்குமுண்டென்றேனோ ப்ரஹ்லாதனைப் போலே
52. இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப் போலே
53. காட்டுக்குப் போனேனோ பெருமாளைப் போலே
54. கண்டு வந்தேனென்றேனோ திருவடியைப் போலே
55. இருகையும் விட்டேனோ திரௌபதியைப் போலே
56. இங்கு பால் பொங்குமென்றேனோ வடுகநம்பியைப் போலே
57. இருமிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப் போலே
58. நில்லென்று(னப்) பெற்றேனோ இடையாற்றூர் நம்பியைப் போலே

59. தெருத்தூரம் போனேனோ நாதமுனியைப் போலே
60. அவன் போனானென்றேனோ மாருதியாண்டான் போலே
61. அவன் வேண்டாமென்றேனோ ஆழ்வானைப் போலே
62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானாரைப் போலே
63. அருளாழி(முன்) கண்டேனோ நல்லானைப் போலே
64. அனந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே
65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வாரியாண்டான் போலே
66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே
67. அநுகூலஞ் சொன்னேனோ மால்யவானைப் போலே
68. கள்வனிவனென்றேனோ லோககுருவைப் போலே
69 சடலோசையென்றேனோ பெரியநம்பியைப் போலே
70. சுற்றிக் கிடந்தேனோ மாலையாண்டான் போலே
71. சூளுறவு கொண்டேனோ கோட்டியூரார் போலே
72. உயிராய பெற்றேனோ ஊமையைப் போலே
73. உடம்பை வெறுத்தேனோ நறையூராரைப் போலே
74. என்னைப் போலென்றேனோ உபரிசரனைப் போலே
75. யான் சிறியனென்றேனோ திருமலை நம்பியைப் போலே
76. நீரில் குதித்தேனோ கணபுரத்தாளைப் போலே
77. நீரோருகங்கொண்டேனோ காசிசிங்கனைப் போலே
78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப் போலே
79. வாயிற்கையிட்டேனோ எம்பாரைப் போலே
80. தோள்காட்டி வந்தேனோ பட்டரைப் போலே
81. துறைவேறு செய்தேனோ பகவரைப் போலே

இத்யாதியின்படியே *மைந்நின்றவரை போலும் திருவுருவு வாட்டாற்றுக்கு எந்நன்றி செய்தேனோ என்னெஞ்சில் திகழ்வதுவே? என்கிறபடி இப்படிப்பட்ட ஜ்ஞானங்களுடைய ஜ்ஞானத்திலே பொருத்தமுடைய ஜ்ஞானம் அடியேனுக்குண்டாகில் திருக்கோளூரில் விடைகொள்ளலாம, அந்த ஜ்ஞானம் அடியேனுக்கில்லை முசல்புழுக்கை வயலிலே கிடந்தென்? வரப்பிலே கிடந்தென்? தேவரீர் எழுந்தருளி மங்களாசாஸனம் செய்தருளினால் வைத்த மாநிதிக்கும மதுரகவிக்கும நித்யோத்ஸவ பக்ஷோத்ஸவ, மாஸோத்ஸவ ஸம்வத்ஸரோத்ஸவாதிகளுமுண்டாகும்" என்று விண்ணப்பஞ் செய்ய அத்தைத் திருச்செவி சாத்திப் போரவுகந்தருளி அந்த பெண் பிள்ளையின் திருமாளிகைக்கெழுந்தருளி தளிகைபண்ணச் சொல்லி தாமமுது செய்தருளி தளிகை ப்ரஸாதமும் ஸ்ரீபாததீர்த்தமும் அப்பெண்பிள்ளைக்கு ஸாதித்தருளினாரென்று திருவாய்மொழிப்பிள்ளையருளிச் செய்தாரென்று பெரிய வானமாமலை ஜீயர் அருளிச் செய்தருளினார்.

ஸ்ரீ

# திருக்கோளூரம்மாள் வார்த்தை விவரணம்

## 1. அழைத்துவருகிறேனென்றேனோ அக்ரூரரைப்போலே?

*ஒருத்தி மகனாய்ப் பிறந்து ஓரிரவில் ஒருத்தி மகனாய் ஒளித்து வளரத் தரிக்கிலானாகித் தான் தீங்குநினைத்த கஞ்சன் என்கிறபடியே வசுதேவ தேவகிகளுக்குப் பிள்ளையாய்ப் பிறந்த க்ருஷ்ணன் ஆய்ப்பாடியில் யசோதை-நந்தகோப குமாரனாய் வளர்வதறிந்த கம்ஸன், அவன் தனக்கு எமன் என்பதால் அவன் அதிகம் வளரு முன்னரே முடித்துவிட சூழ்ச்சி செய்தான். அதாவது விற்பெறு விழவு என்று ஒரு பெருவிழாவை ஏற்பாடு செய்து அதற்குக் கண்ணன் பலராமன் நந்தகோபன் யாவரையும் அழைத்துவரச் செய்து, கண்ணன் பலராமன் இருவரையும் வஞ்சனையாகக் கொல்ல எண்ணினான், அதற்காக வசுதேவரின் நெருங்கிய உறவினரும்யாதவ குலத்தவருமானஅக்ரூரரைய ழைத்து, "அக்ரூரரே! நீர் ஆய்ப்பாடிக்குச் சென்று நந்தனையும் அவன் பிள்ளைகளையும் நான் நடத்தவிருக்கும் தநுர் யாகத்துக்கு அழைத்துவரவேணும். அப் பிள்ளைகளை முடிக்க பட்டத்து யானையான குவலயாபீடமும், ராஜமல்லர்களான சாணூரன் முஷ்டிகன் இருவரும் ஸித்தமாக இருப்பார்கள். அப்பிள்ளைகளை முடித்தால்தான் நான் நிம்மதியாக வாழமுடியும். நீர் தேரில் சென்று அவர்களிடம் நல்வார்த்தை சொல்லி இங்கு அழைத்து வாரும்" என்று கட்டளைபிட்டான். அக்ரூரர் கண்ணனிடம் மிகவும் அன்பு பூண்டவர்; அறிவுமிக்கவர்; கண்ணன் பரமபுருஷனான நாராயணனின் அவதாரம் என்பதை யறிந்தவர். கம்ஸனின் தூதனாய்ச்சென்று கண்ணனையும் பலராம னையும் கண்ணாறக்கண்டு களிக்கலாம். அவன் ஸ்பர்சத்தைப் பெற்று இன்புறலாம் என்று ஆவல் கொண்டார். கம்ஸனால் கண்ணனை கொல்லமுடியாது என்றறிந்திருந்த அவர் 'நான் சென்று அழைத்து வருகிறேன்" என்று ஒப்புக்கொண்டு கோகுலம் சென்றார். வழியெல்லாம் "கண்ணனைக் காணப் போகிறேன்" என்று எண்ணி மகிழ்ந்துகொண்டே சென்று கண்ணனால் நன்கு ஸத்கரிக்கப்பட்டு அவர்களை மதுரைக்கு அழைத்து வந்தார். "ஸௌந்தர்ய ஸௌசீல்ய ஆவிஷ்க்ரேந அக்ரூரமாலாகாராதீந் பரமபாகவதாந் க்ருத்வா" என்று எம்பெருமானார் அருளியபடி கண்ணனுடைய பூரண அருளையும் பெற்றார். "ஸர்வேச்வரனை ஸேவிக்கும் ஆவலில் அக்ரூரர் செய்ய முற்பட்டதை நான் செய்ய

வல்லேனோ?'' என்கிறாள் திருக்கோளூரான். (ஸ்ரீ விஷ்ணு புராணம், ஸ்ரீ பாகவதம்)

## 2. அகமொழித்துவிட்டேனோ விதுரரைப்போலே?

விதுரர் கௌரவ அரசனான திருதிராஷ்ட்ரனுடைய தம்பியும் மந்திரியுமாவார். நீதி சாஸ்த்ரத்தில் மிக்க அறிவு பெற்றவர். வியாஸருடைய குமாரராய் ''மஹாமதி'' என்று ஜ்ஞானம் மிக்கவராய் விளங்கியவர். நான், எனது என்ற எண்ணத்தை அறவே யொழித்த ஸாத்விகர். க்ருஷ்ணனிடம் மிகவும் பக்தியுள்ளவர். மஹாபாரத வரலாற்றில் விதுரர் போன்ற குணவானைப் பார்ப்பரிது. பிதாமஹரான பீஷ்மர் ஆசாரியரான துரோணர் முதலானோர் தர்மத்தில் நிலைநின்ற பாண்டவர்களிடம் மிக்க அன்புள்ளவராயினும் தர்மத்தைப் பற்றிய கலக்கத்தினால் அஸ்திநபுரத்தரசனும் மிகவும் துஷ்டனுமான துரியோதனனிடம பக்ஷபாதம் காட்டினர் இதனால் பாண்டவர்களுக்கு எதிரிகளாயினர் பாண்டவர்களோ. க்ருஷ்ணாச்ரயா:, க்ருஷ்ணபக்தா: க்ருஷ்ணநாதா:'' என்று கண்ணனையே எல்லாமாக நினைத்தவர்கள். விதுரர் தன்னலமற்றவராய், ராஜஸபையில் மந்திரியாயிருந்துகொண்டு பாண்டவர்களையும் மறைமுகமாக ஒருவிதமாக ஆதரித்து வந்தார்

பாண்டவர்களின் ராஜ்யத்தை சூதாட்டத்தில் அபகரித்த துரியோதனன் 13 ஆண்டுகளுக்குப் பின் அதைத் திரும்பித்தர வேண்டிய நிலையில் திரும்பித்தர மறுத்தான். இந்தநிலையில் க்ருஷ்ணன் பாண்டவர்களின் தூதனாய் ராஜ்யத்தின் தலைநகரான அஸ்திநபுரம் சென்றான். பாண்டவர்களுக்கு எதிரியான துரியோதனனையும் அவன் பக்ஷத்திலிருந்து மற்றவரையும் நெருங்க விரும்பாத க்ருஷ்ணன் நேரே விதுரர் வீட்டிக்குச் சென்றான். இதனால் விதுரருக்கு மட்டற்ற மகிழ்ச்சி, அவரில்லம் மற்றவர்களது போன்ற அரண்மனையல்ல சாதாரண வீடு. அங்கு க்ருஷ்ணனை விதுரன் பரபரப்புடன் வரவேற்று க்ருஷ்ணனுடைய பெருமைக்குச்சேர தங்க வசதிகள் செய்து உபசரித்தார். ''க்ருஷ்ணா! சிறியேனுடைய வீடு தேடி வந்தனையே! எனது பரபரப்பு ஒன்றுதான் நான் உனக்கிடும் பூஜை'' என்று தனது அளவற்ற அன்பைக்காட்டி உபசரித்தார்: ''விதுராந்நாநி புபுஜே ஶுசீநி குணவந்தி ச'' என்கிறார் வியாசர். தன்னலமற்ற தூய அன்புடன் இடப்பட்ட உணவாகையால் கண்ணன் அதை மிகவும் விரும்பிப் புசித்தான். இம்மாதிரி அன்பும் பரிவும் பண்பும் நான்

காட்டவில்லையே?'' என்கிறாள் திருக்கோளூர் அம்மையார் (மஹா பாரதம்). விதுரர் தனது தூய உள்ளமாகிய அகத்தை கண்ணனிடம் ஸமர்ப்பித்துவிட்டார் என்றும் கூறலாம்.

### 3. தேஹத்தை விட்டேனோ ரிஷிபத்நியைப்போலே?

இதுவும் க்ருஷ்ணாவதாரத்தில் நடந்த நிகழ்ச்சியே. இடைப்பிள்ளைகளுடன் கண்ணன் காட்டு ப்ரதேசத்தில் பசுமேய்த்துக் கொண்டு போனபோது ஒரு நாள் தாங்கள் கொண்டுசென்ற உணவையெல்லாம் உண்டும் அவர்களுக்குப் பசியும் களைப்பும் மேலிடவே அப்பிள்ளைகள் கண்ணனிடம் தங்களுடைய பசியைச் சொல்லி உணவு அருளித்துக் கொடுக்கும்படி வேண்டினர். அருகில் ஒரு ஆச்ரமத்தில் வேதங்களை நன்றாகக்கற்ற அந்தணர்கள் ஒரு யாகத்தைச் செய்து கொண்டிருந்தனர் இந்த பிராம்மணர்களே இவ்வாக்யத்தில் ரிஷிகளாகக் குறிப்பிடப்படுகின்றனர். கண்ணன் ''அந்த அந்தணர்களிடம் சென்று நான் இங்குப் பசியுடன் இருப்பதாகவும் உணவு கேட்பதாகவும் சொல்லுங்கள்'' என்று சொல்லி அனுப்பினான். அவர்களும் அப்படியே சென்று கேட்க; அவர்கள் இவர்களுக்கு பதிலேதும் சொல்லவில்லை; இவர்களைக் காணாததுபோல் வாளாவிருந்துவிட்டார்கள். இடைப்பிள்ளைகள் மிகவும் வருந்திக் கண்ணனிடம் மீண்டும் வந்து நடந்ததைச் சொல்ல, கண்ணன் அவர்களிடம் ப்ராம்மண பத்நிகளைக்கிட்டி, ''கண்ணனும் பலராமனும் பசியுடன் இருக்கிறார்கள். உங்களிடம் அன்னம் கேட்கிறார்கள்'' என்று சொல்லும்படி அனுப்ப, இவர்களும் அப்படியே அப்பெண்மணிகளிடம் சொல்ல, அவர்கள் கண்ணனையும் பலராமனையும் காண மிகவும் ஆவல் கொண்டு பலவித உணவுகளையும் எடுத்து வந்தனர். இவர்களை அந்த பிராம்மணர்கள் தடுத்தும் கேளாமல் நேரே கண்ணனிடம் வந்து அவனை க்கண்ணுறக் கண்டு ஸேவித்து மகிழ்ந்து உணவுகளையும் ஸமர்ப்பித்தனர். க்ருஷ்ணன் அவ்வுணவுகளை உகப்புடன் ஏற்றுக்கொண்டு அவர்களை ''உங்கள் கணவர்களிடம் சென்று யாகத்தை அவர்கள் முடிக்க உதவுங்கள். நீங்கள் பயப்படவேண்டாம். அவர்கள் உங்களை ஏற்பார்கள்'' என்று அனுப்பினான். கண்ணன் பேச்சைத் தட்டமுடியாமல் அவர்களும் செல்ல கணவன்மார்களும் தங்கள் மனைவிகளை ஒன்றும் சொல்லாமல் ஏற்றுக் கொண்டனர். ஆனால் அவர்களில் ஒருவர் மட்டும் தன் மனைவியை ஏற்கவில்லை. ''தத்ரைகா வித்ருதா பர்த்ரா பகவந்தம் யதாச்ருதம், ஹ்ருதோபகுஹ்ய விஜஹௌ

நேரும் கர்மநிபந்தநம்'' (ஸ்ரீ பாகவதம் 10-23-34) அவள் கண்ணனை தன்னிதயத்தில் பூட்டிக் கொண்டு கர்ம வசமாய் கணவனுக்கு அடிமைப்பட்ட உடலை விட்டாள், பிறகு அந்த அந்தணர்களும் தங்கள் தவறை உணர்ந்து வருந்தி கண்ணனையே சரணடைந்தனர். கண்ணன் சோற்றை எதிர்ப்பார்த்துக் காத்திருந்த இடம் பத்நிவிலோசநம் என்று அழைக்கப் படுகிறது (நாச்சியார் திருமொழி 12-6 பாசுரம் காண்க). அந்த ரிஷி பத்நி போல கண்ணனிடல் மனம் லயிக்கப் பெறவல்லேனோ நான்? என்கிறார் அம்மையார்.

## 4, தசமுகனைச் செற்றேனோ பிராட்டியைப்போலே?

தசமுகன் என்பது இராவணனை. பிராட்டி என்பது சீதா பிராட்டியை செற்றல் என்பதற்கு முடித்தல், வெறுத்தல் என்று இருபொருள்கள் உண்டு பிராட்டி ராவணனை முடித்ததாகவோ அவன் முடிவுக்குக் காரணமாக இருந்ததாகவோ சொல்வது உசிதமன்று, விட்டில் பூச்சி விளக்கில் தானாக வந்து விழுந்து மாய்ந்தால் விளக்கைக் குறை சொல்லலாமா? மேலும் ''இவள் ஸன்னிதியால் காகம் தலைபெற்றது, அதில்லாமையால் ராவணன் முடிந்தான்'' என்று நமதாசிரியர்கள் தீர்மானித்தருளிச் செய்கின்றனர். ராவணனை தனது கற்பெனும் நெருப்பால் கொளுத்தவல்லவளாயினும் தனது இயல்புக்குச்சேர அவனை முடிக்க முயலவில்லை. ''பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள்,' என்பது ரஹஸ்ய க்ரந்தங்களில் காணும் ஒரு முடிவு எதற்கும் சரண்யன் கையையே எதிர்நோக்கவேணும் என்றிருந்தபடி பெருமாள் வந்து ராவணனை முடித்துத் தன்னை அழைத்துச் செல்வதேதக்கது. தத்தஸ்ய ஸத்ருஸம் பவேத்-என்று பொறுத்திருந்தாள் பிராட்டி.

லங்கேச்வரனையும் அவனுடைய ''திருவடி (அநுமான்) மதித்த ஐச்வர்யம்'' என்னப்படும் வியக்கத்தக்க ஐச்வர்யத்தையும், அவன் ஆசை காட்டிய இன்பங்களையும் 'பிராட்டி மிகவும் வெறுத்தாள். அவனைவெறுத்துதுரும்பெனமதித்து பயமின்றிஇகழ்ந்து பேசினாள். தனிச்சிறையில் அரக்கிகள் துன்புறுத்தலையும் பொறுத்தனளே யொழிய ராவணனுக்கு இணங்கவில்லை. தனதுயிரும் உடலும் பெருமாளுடையவை என்று தன்னை முடித்துக் கொள்ளவுமில்லை. பெருமாளையே மனதில் எப்பொழுதும் கொண்டு அவர் வரவுக்குக் காத்திருந்தாள். தன்னாலானவரை ராவணனுக்கு நல்வார்த்தை சொல்லித் திருத்தவும் முயன்றாள். இப்படிப்பட்ட மஹேந்திடம்

இயல்பில் சஞ்சல மனம் படைத்த சாமான்யப் பெண்களிடம் காண்பதரிதாகையால் பிராட்டியைப் போல என்போல்வராலே நக்கப்போமோ? என்று கேட்கிறார் திருக்கோளூர் அம்மையார்.

## 5 பிணமெழுப்பிவிட்டேனோ தொண்டைமானைப்போலே?

தொண்டை மண்டலத்தரசன் தொண்டைமான் என்ற பேரரசன் இவன் திருவேங்கடமுடையானிடம் அதிமாத்ரமான பக்தியுள்ளவன். திருவேங்கடவனுடைய பூரண அருளுக்குக் கொள்கலமானவன். திருமங்கையாழ்வார் * துளங்குநீள் முடியரசர் தம்குரிசில் தொண்டை மன்னவன் திண்திறலொருவற்கு உளங்கொளன்பினோடு இன்னருள் சுரந்து'' என்று அரசர்க்கரசனான இவன் தோள்வலியையும் பெருமைகளையும், இறையருக்குப் பூரணபாத்திரமாயிருந்ததையும் போற்றியருளிச் செய்கிறார் (திருமொழி 5-8-6). இவன் வழிவந்த மற்றுமொரு மன்னவன் * தென்னன் தொண்டையர்கோன் என்று திருவல்லிக்கேணி விஷயமான பதிகத்தில் (2-2 10) போற்றப்படுவது காணலாம்

கூர்மன் என்ற பெயருள்ள வேதவாய்மொழி அந்தணனொருவன் காசியில் சென்று தனது உடலைவிட்டுஅங்கே கங்கையில் சேர ஆசைப்பட்டான், ஆனால் அவன் அவ்வாசை நிறைவேறாமல் தனதூரிலேயே இறந்தான், அவன் பிள்ளையான க்ருஷ்ணசர்மா என்பான் தந்தையின் அஸ்தியை 'எலும்புகளை) காசியில் கங்கையில் சேர்த்துவிட விரும்பி அரசனான தொண்டை மன்னவனை அணுகித் தன்மனைவி மக்களை அவனிடம் ஒப்படைத்துவிட்டுக் காசிக்குச் சென்றான் அவர்களை அரசன் தன் பணியாளர்களிடம தக்கபடி பாதுகாக்கும்படிக் கட்டளையிட்டு ஒப்படைத்தான் ராஜ்ய காரியங்களில் ஈடுபட்டிருந்தமையால் அவர்களை மறந்தே விட்டான் அவன் பணியாளர்கள் அப்பெண் பிள்ளையையும் மக்களையும் சரியானபடி கவனியாதலால் அவர்கள் பசிப்பிணியால் இறந்தனர்

க்ருஷ்ணசர்மா கங்கையாடித் திரும்பி வந்து அரசனிடம் தன் மனைவிமக்களை அனுப்பும்படி வேண்ட, அப்போதுதான் அவர்களைப் பற்றிய நினைவு வந்த அரசன் அநதப்புரம் சென்று பார்க்க அவர்கள் இறந்து பிணமாய்க் கிடந்தது கண்டு மிக்க அதிர்ச்சியும் வருத்தமுமடைந்து என்செய்வது என்று அறியாமல் குழம்பி, திருவேங்கடவனையே புகலாக நம்பி, அவ்வந்தணனிடம் ''அவர்கள் திருவேங்கடம் சென்றுள்ளனர். இரண்டொரு நாட்களில் திரும்பி

கிடுவார்கள். அமர்கள் வந்ததும் உண்மையுணர்ந்து உம்மிடம் அவர்களை ஒப்புவிக்கிறேன் என்று சொல்லி அனுப்பிவிட்டான்.

திருவேங்கடவன் ஸந்நிதிக்கும் அரசன் மாளிகைக்குமிடையே ஒரு சுரங்கப்பாதையுண்டு. அவ்வழியே உடனே சென்று திருவேங்கடவனை அடிபணிந்து தன்நிலையை விண்ணப்பித்து, "புகலொன்றில்லா இச்சிறுவனை ஆபத்பாந்தவனான நீயே ரக்ஷித்தருள வேண்டும். இல்லையேல் கடமையில் தவறின இவனையும் உன் திருவடி சேர்த்துக்கொள்" என்று உள்ளமுருக வேண்டினான். அரசனிடம் மிகவும் அன்பு பூண்டிருந்த பெருமானும் அருள் சுரந்து தனது தீர்த்தத்தை அப்பிணங்களின்மேல் தெளித்து அவர்களை எழுப்பி விடும்படி வரம் தந்து அனுப்பி வைத்தான். இறையருளை நினைந்து உருகிய அரசன் அப்படியே செய்து அப்பிணங்களை உயிர்ப்பித்து அப்பெண்ணையும் மக்களையும் கூட நிறைய பொருள்களையும் அவ்வந்தணனிடம் ஸமர்ப்பித்து மகிழ்ந்தான். இம்மன்னவனுக்குத் திருவேங்கடமுடையான் தனது திருவாழி திருச்சங்குகளைப் படைத்துணையாகத் தந்து பலகாலம் தன் திருக்கரங்களில் அவையின்றியே இருந்தான் என்ற வரலாறும் அறியத்தக்கது. திருவேங்கடவனின் நிகரில் புகழான வாத்ஸல்ய குணத்தை இங்குக் காண்கிறோம். (பவிஷ்யோத்தர புராணத்தில் வேங்கடாசல மஹாத்மியம்)

"திருவேங்கடவனிடம் பேரன்பு பூண்டு அவனருளுக்கு நான் பாத்திரமானேனோ?" என்று கேட்கிறார் அம்மையார்.

### 6, பிணவிருந்திட்டேனோ கண்டாகர்ணனைப்போலே?

கண்டா கர்ணன் என்பான் ஒரு பிணம் தின்னும் பிசாசமாம். சிவபிரானிடம் ஆழ்ந்த பக்தியுடையவனாகையால் நாராயண நாமம் காதில் படக்கூடாது என்று காதில் மணிகட்டித்திரிந்தான். அக்காரணம் பற்றி அவன் கண்டாகர்ணன் என்று பெயர் பெற்றான். அவன் ஒரு சமயம் கயிலையில் சிவபெருமானைக்கிட்டி "பிரானே! என்னை இப்பிசாச ஜன்மத்திலிருந்து விடுவித்து நித்யானந்தமான மோக்ஷத்தையருள வேணும்" என்று வேண்டினான். தன்னிடம் மிகவும் அன்பு பூண்ட அந்த பிசாசத்தைக் கரையேற்ற நேரே தன்னால் இயலாதென்று அவனிடம் சொல்லி, "நான் சொல்லுவதுபோல செய்தாயானால் உன் விருப்பம் தலைக்கட்டும். உனக்கு வேண்டியதைத் தரவல்லவன் எம்பிரான் நாராயணனொருவனே

அவன் இப்போது க்ருஷ்ணனாக பூமியில் அவதாரம் செய்துள்ளான். அவனிடம் அவன் எனதிருப்பிடமான கயிலைக்கு வந்து என்னிடம் வரமொன்று வேண்டிப்பெற்று என்னைப் பெருமை படுத்தவேண்டுமென்று நான் வேண்டிக் கொண்டுள்ளேன். அப்படியே அவன் வர இசைந்துள்ளான். அவன் வரும்போது அவனை சேவித்துப் பூஜித்து வேண்டினால் உன் விருப்பத்தை நிறைவேற்றுவான்'' என்று நல்வார்த்தையும் சொன்னான். க்ருஷ்ணனை அடையாளம் கண்டுகொள்ளும்படி அவன் உருவ அமைப்பையும் அப்பிசாசத்தினிடம் சொன்னான்.

அதுகேட்ட அப்பிசாசமும் சிவபிரானுக்கு நன்றிகூறிவிட்டு, தன் காதிலிருந்த மணிகளையகற்றிவிட்டு க்ருஷ்ணன் உருவத்தையும் அவன் திருநாமத்தையுமே மனதில்கொண்டு வெகுநாட்கள் தவமிருந்து கண்ணன் வரவையே நோக்கியிருந்தது. ஒருநாள் கண்ணன் அவ்வழிவரக் கண்ட கண்டாகர்ணன் அவனை தூரத்திலேயே அடையாளம் கண்டுகொண்டு அங்குத் தவமிருந்த ஒரு ரிஷியைத் தன் சூலத்தால் குத்தி அப்பிணத்தையெடுத்துக்கொண்டு ஓடிவந்து கண்ணனை நிறுத்தி, ''நீதான் மோக்ஷம் தரவல்ல மேலான தெய்வமென்று சிவபிரானருளால் அறிந்துகொண்டேன். இது ருஷிப் பிணம் இப்போது உனக்கேயென்று கொன்றது. ''நவம் ஸவமிதம் புண்யம்வேதபாரகமச்யுத,யஞ்ஞஸீலமஹாப்ராஜ்ஞப்ராஹ்மணம் ஸவமுத்தமம்'' இதையிட்டு உன்னைப் பூசிக்கிறேன். இதை ஏற்க வேண்டும்'' என்று மனப்பூர்வமாக வேண்டினான், ''யதந்ந: புருஷோபவதி ததந்நஸ்தஸ்ய தேவதா:- ஒருவன் தன்நிலைக்குச்சேர்ந்த எந்த உணவை உண்பனோ அதை அவன் தான் பூசிக்கும் தெய்வத்துக்கு இட்டு பூசிக்கக் கடவன்'' என்ற விதிப்படி கண்டாகர்ணன் தான் தின்னும் பிணத்தை கண்ணனுக்கு விருந்தாகப்படைத்தான். கண்ணனுக்கே என்று அநந்யார்ஹமாக இடப்பட்டதாகையால் கண்ணனும் அப்பூசைக்கு மகிழ்ந்து கண்டாகர்ணனுக்கு மோக்ஷமளித்தான். கண்டாகர்ணன் தனது தம்பிக்கும் மோக்ஷமளிக்கும்படி கண்ணனை வேண்ட, அவன் எத்தகையவன் என்று கூட விசாரியாமல் அவனுக்கும் மோக்ஷமளித்தான். இதனால் கண்ணன் பூசைக்கெளியவன்; பக்தியுடன் அநந்யார்ஹமாக இட்டது கொண்டு மகிழ்கிறான் என்பதும், தன் அபிமானத்துக்குப் பாத்ரனுமிட்ட பாகவதன் அபிமானித்த ஒருவனுக்கும் அருள் புரிபவன் என்பதும் புலப்படுகின்றன இப்படி நான் இறைவனைப் பூசிக்கவல்லேனோ? என்பது அம்மையாரின் கேள்வி. [ஒரு பாகவதனால் பகவானுக்கென்று கொல்லப்பட்டுக்ருஷ்ணனுடைய திருக்கண்நோக்குக்கு விஷயமான

ருஷியும் நற்கதியடைந்தாரென்பது சொல்லாமலே விளங்கும்] ஹரிவம்சம்)

## 7. தாய்க் கோலம்செய்தேனு அநசூயையைப் போலே?

பித்ருவாக்ய பரிபாலநம் (தந்தைசொற்படி நடத்தல்) என்ற தர்மத்தில் நிலைபெற்ற ராமபிரான் * சிற்றவை பணியால் முடி துறந்தான் என்கிறபடியே, "இது உன் தந்தையின் விருப்பம். நீ நாட்டைத் துறந்து 14 ஆண்டுகள் வனவாஸம் செய்ய வேண்டும்" என்று கைகேயி சொல்ல அப்படியே சீதை• லக்ஷ்மணன் இவர்களுடன் தவக்கோலம் பூண்டு வனம் சென்று முதலில் சித்ரகூடம் என்ற வனப்ரதேசத்தில் வசித்து வந்தான்! அப்போது கைகேயி குமாரனான பரதன் அங்கு வந்து "அண்ணா, நான் மாமா வீட்டிலிருக்கையில் நானறியாமல் பெரும்பாபம் நிகழ்ந்துவிட்டது தந்தைக்குப்பின் மூத்த மகனான நீயே அரசனாக வேண்டும். நான் உனக்காகத் தந்தை சொற்படி வனவாஸம் பண்ணுகிறேன்" என்று நிர்ப்பந்திக்க, அதற்திணங்காத ராமன் பரதனிடம் தனது பாதுகைகளைத் தந்து நீ இவற்றை என்னடையாளமாக வைத்து ராஜ்யத்தையாள்வாய் பிறகு நான் வந்து ஏற்றுக் கொள்கிறேன் என்று அவனை அனுப்பி வைத்தான்.

பரதன் தன்னை மிகவும் பணிந்து யாசித்தபடி செய்ய முடியாதது பற்றி ராமனுக்கு மிகவும் வருத்தமாயிற்று. பரதனுடைய நினைவு அங்கு அடிக்கடி வந்து வருத்தியதால் சித்திர கூடத்தை விட்டு வேறொரு வனம் செல்ல முடிவுசெய்து மூவரும் அவ்வனத்தை விட்டுப் புறப்பட்டு முதலில் அத்ரி முனிவருடைய ஆசிரமத்தையடைந்துஅவரையும்அவர் தர்மபத்நியான அநசூயையையும்வணங்கினர். அத்ரி முனிவர் சீதைக்குத் தமது மனைவியும் மஹா தபஸ்வினியுமான அனசூயையை அறிமுகம் செல்வித்து, ' மஹாபதிவ்ரதையான இவ்வனசூயை தர்மாநுஷ்டானத்தில் மிகவும் சிறந்தவள்; முன்பொருகால் பலவாண்டுகள் மழையில்லாமல் பஞ்சமேற்பட்ட போது காய் கிழங்குகளை தானே ஸ்ருஷ்டித்து கங்கையையும் இங்கு பெருக்ச்செய்தாள் இவளைத் தாயென கௌரவித்து வணங்குவாய்" என்றார். ராமனும் அப்படியே சொல்ல ஸீதை அநசூயை வலம் செய்து வணங்கி நலம் விசாரித்தாள். அநசூயை மிகவும் மகிழ்ந்து "சீதே! எல்லா ராஜபோகங்களையும் விட்டு கணவன் பின் காட்டுக்கு வந்துள்ளதை நான் பாராட்டுகிறேன். கணவனுடைய கஷ்டத்திலும் பின் தொடரும் புத்நியே சிறந்தவள் கணவனே பரம தெய்வம். உனக்கு எல்லா மங்களங்களும் பெருகுக என்று ஆசீர்வதித்தாள்.

தொடரும்

சீதையைத் தன் மனைவியே மனதில் கொண்டு அவளை ஒருபோதும் அழுக்கடையாத நல்ல அழகுள்ள பூமாலைகளாலும் உயர்ந்த ஆடை ஆபரணங்களாலும் அலங்கரித்து உயர்ந்த பரிமளமுள்ள சாந்தை பூசி அழகு பார்த்து, அவளுடைய வரலாறு முழுதும் கேட்டு மகிழ்ந்து, பொழுது சாய்ந்ததும், "மதுரமான வாக்குடையவளே! உன் பேச்சினால் மிகவும் மகிழ்ந்தேன். இருட்டிவிட்டபடியால் நீ உன் கணவனிடம் செல்வாய்" என்று அனுப்பி வைத்தாள். சீதையும் அவளைத் தன் தாயாகவே எண்ணி அணைத்து வணங்கி ராமனிடம் சென்றாள். ராமபிரானும் அனசூயை மிக்க தாயன்புடன் பிராட்டியை அலங்கரித்துள்ளது கண்டு மிகவும் உகந்து அன்றிரவை அந்த ஆச்ரமத்தில் இனிதே கழித்தான் (ஸ்ரீராமாயணம் அயோத்யா காண்டம் முடிவு) இப்படி பிராட்டியிடம் தான் தாயைப்போல அன்புகாட்டவல்லேனோ? என்று அம்மையார் கேட்டபடி,

## 8. தந்தை எங்கே என்றேனோ துருவனைப் போலே?

நான்முகனான பிரமனின் உடலிலிருந்து தோன்றிய ஸ்வாயம்புவமனு சதரூபை என்ற மனைவியையடைந்து ப்ரியவ்ரதன், உத்தானபாதன் என்று இருபிள்ளைகளைப் பெற்றான். உத்தானபாதன் அரசபதவியை ஏற்று பூமியை ஆண்டு வந்தான். அவன் சுநீதி சுருசி என்று இரண்டு மனைவிகளை மணந்தான். இந்த இரு மனைவிகளிடம் இரண்டு பிள்ளைகளைப் பெற்றான். சுநீதி மகன் துருவன். சுருசி மகன் உத்தமன். அரசன் இளையாளான சுருசியிடம் அதிகமான அன்புகொண்டு மூத்தவளான சுநீதியை அநாதரித்து வாழ்ந்தான். ஐந்து பிராயமுள்ள துருவன் தன் தந்தையைக் காண விரும்பி தன் அன்னையை என் தந்தை எங்கே? என்று கேட்டு அவன் வசித்த அரண்மனையைத் தெரிந்து கொண்டு அங்கு சென்றான். இளையவள் மோகத்தில் மூழ்கியிருந்த அரசன் மூத்தாள் மகனை ஊரார் போல அலட்சியப்படுத்தி; இளையாள் மகன் உத்தமனை மடியில் வைத்துக் கொஞ்சினான். துருவன் தன் தந்தையைக் கிட்டக் கண்ட சுருசி, "என் வயிற்றில் பிறக்கும் பாக்யமில்லாத நீ அரசனிடம் செல்லக் கூடாது" என்று தடுத்து மேலும் கொடும் சொற்களை வீசி அவனைத் துரத்தி விட்டாள். அரசனும் ஒன்றும் சொல்லாமல் மௌனமாயிருந்து விட்டான்.

துருவன் உடனே வருத்தத்துடனும் கோபத்துடனும் தன் தாயிடம் சென்று நடந்ததைச் சொல்ல, சுருசியும், "பாபம் செய்து

பிறந்த என் வயிற்றில் பிறந்ததால் அரசகுமாரனுயினும் நீ துக்கப் படும்படியாயிற்று. எல்லா உலகுக்கும் முந்தைத் தந்தையான வாசுதேவனைப் பூசித்து அறவாழ்க்கை வாழ்ந்தால் மிக்க உயர் பதவிகளையும் அடையலாம்'' என்றாள், துருவன் ஜகத்பிதாவான வாசுதேவனைக் காணும ஆவலுடன் வனம் சென்று அங்கு தவத்தில் ஊன்றியிருந்த ஸப்தரிஷிகளின் அருளைப்பெற்று அவர்களிடம் 12 அக்ஷரமுள்ள வாசுதேவ மந்த்ரத்தை உபதேசமாகப் பெற்று [நாரதரிடம் உபதேசம் பெற்றதாகவும் சொல்வதுண்டு], அம் மந்த்ரத்தை ஸதா தியானித்துக் கடுந்தவமிருந்து வாசுதேவனே (நாராயணன்,விஷ்ணு) தன் முன்வரப்பெற்றான். அப்பெருமானரு ளாலே ஞானம் பெற்று அவனைத் துதித்து மகிழ்வித்து அவனரு ளால் நக்ஷத்ர மண்டலத்தில் நிலையான இடத்தைப் பெற்றான். துருவசரித்திரம் ஸ்ரீ விஷ்ணு புராணத்திலும் ஸ்ரீபாகவத புராணத் திலும் பரக்கப் பேசப்பட்டுள்ளது.

துருவனுடைய திடசித்தமும் உலகுக்கோர் முந்தைத் தந்தையை எங்கே? என்று கண்ட ஆழ்ந்த பக்தியும்எனக்குண்டோ என்று கேட்கிறார் அம்மையார்.

### 9. மூன்றெழுத்து சொன்னேனோ க்ஷத்ரபந்துவைப்போலே?

க்ஷத்ரியருள் அதமன் (மிகத்தாழ்ந்தவன், இகழத்தக்கவன்) என்று இப்பெயருக்குப் பொருள். சூரியவம்சத்து அரசரில் விச்வரதன் என்னுமரசனுடைய மகனை இவன் இயற்பெயர் தெரியவல்லை. மிகக் கொடிய நடத்தையுடையவனுதலால் க்ஷத்ர பந்து என்றே அழைக்கப்பட்ட இவனை நாட்டிலிருக்க வொட் டாமல் நாட்டாரனைவருமாகக் காட்டுக்குத் துரத்தி விட்டனர். அங்கும் ஜீவஹிம்ஸையே போதுபோக்காக வாழ்ந்திருந்தான். ஒரு நாள் பெருந்தவத்தினரான ஒரு முனிவர் வழிநடந்து செல் கையில் வழிதவறி க்ஷத்ரபந்து வசித்த காட்டுக்குள் வந்தார். கடும் வெய்யிலிலே நடந்ததால் களைத்து, மிக்க தாகத்தால வருந்திய அவர் அங்கிருந்த ஒரு குளத்தில் இறங்கப் போய் அதில் விழுந்து விட்டார் இதைக் கண்ட க்ஷத்ரபந்துவுக்குத் தன்னையுமறியாமல் அவர் பேரில் கருணைபிறக்க, அவரைக் கரையில் சேர்த்து தாமரைக் கிழங்குகளை உண்ணக் கொடுத்து அவர் கால் கைகளைப்பிடித்து விட்டுக் களைப்பையும் போக்கினான். அம்முனிவரும்க்ஷத்ரபந்துவை அன்புடன் நோக்கி அவன் வரலாற்றையும் அக்கொடிய வனத்தில் அவன் வசிக்கும் காரணத்தையும் கேட்க இவனும் எதையும் ஒளிக் காமல் தனது வரலாற்றையும் தனது கொடுந்தொழிலையும் அவரிடம் விரிவாகச் சொன்னான். அம்முனிவர் இவனைத்திருத்த

வேணும் என்ற நல்லெண்ணத்துடன் புத்திமதிகள் வழங்க, இவன் "பெரியோய்! என்னுடன் பிறந்த கொடுமை என்னை விட்டகலாது. என்னைத் திருத்த முயலுவதில் பயனில்லை" என்று சொல்லிவிட, அப்பெரியவரும் **கோவிந்த** என்ற மூன்றெழுத்துடைய திருநாமத்தை உபதேசித்து "நீ தீயசெயல் செய்தாலும் இதைத் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டே செய்; உனக்குநன்மைஉண்டாகும்" என்று சொல்லிப் போனார். க்ஷத்ரபந்துவும் அப்படியே சொல்லிக் கொண்டிருந்ததனால் அவன் மரணமடைந்தபின் முன்பிறவி நினைவுடன் உத்தம பிராம்மணக் குடியில் பிறந்து கோவிந்தனையே ஆராதித்து பராங்கதியான பரமபதத்தை யடைந்தான் இவன் சரித்திரத்தை தொண்டரடிப்பொடியாழ்வார் பகவந்நாம வைபவத்தைப் பேசும் வகையில் 'மொய்த்த வல்வினையுள் நின்று மூன்றெழுத்துடைய பேரால் க்ஷத்திரபந்துவன்றே பராங்கதி கண்டு கொண்டான் (திருமாலை-4) என்று பாடியுள்ளார் [இச்சரித்தின் புராண மூலம் தெரியவில்லை. வல்லார் வாய் கேட்டறிக]

கோ-விந்-த என்ற மூன்றெழுத்துக்களை எப்போதும்சொல்லிப் போதைக் கழித்தேனோ க்ஷத்ரபந்துவைப் போலே? என்று அம்மையார் கேட்கிறார்.

## 10. முதலடியைப் பெற்றேனோ அகலிகையைப் போலே?

**முதலடி** என்பது உலகமுதல்வனான எம்பெருமானுடைய திருவடியைக் குறிக்கிறது. கௌதம மஹரிஷியின் பத்னியான அஹல்யை தமது கணவரால் சபிக்கப்பட்டு, பின்னர் நாராயணனின் அவதாரமான ராமபிரானின் திருவடி ஸ்பர்சத்தால் சாப விமோசனம் பெற்றாள். இவள் சரிதம் ஸ்ரீராமாயணம் பால காண்டத்தில் சொல்லப்பட்டுள்ளது தேவேந்திரன் பேரழகியான அஹல்யையை கௌதம முனிவர் சிற்றஞ்சிறுகாலையில் ஸ்நானஞ் செய்யச் சென்றிருந்த போது அவருருவில் வந்து தீய எண்ணத்துடன் புணர்ந்தான் அஹல்யையும் புத்திகலங்கி அதற்கிணங்கினாள். இந்திரன் திரும்பிச் செல்லு முன்னர் முனிவர் திரும்பி வந்து விட்டார். தேவேந்திரனின் அடாத செயலைக்கண்டு அவனை "நீ ஆண்மையை இழப்பாயாக" என்று சபித்து, தமது மனைவியை "நீ ஆயிரமாண்டுகள் இவ்வாசிரமத்திலேயே யார் கண்ணிலும் படாமல் சாம்பலில் நுண்ணுருவில் மறைந்திருந்து தவம் செய்திரு. ஸ்ரீமந்நாராயணன் சக்ரவர்த்தி திருமகனாக அவதாரம் செய்து இங்கு விச்வாமித்ரரால் அழைத்து வரப்படுவான். அப்போது

அவன் திருவடிபட்டு நீ தூய்மை பெற்று என்னுடன் கூடுவாய் என்று சொல்லிப் போய்விட்டார்.

பின்னர் ஜகத்காரணனான பரமபுருஷன் தசரதமன்னவன் குமாரனாய் ஸ்ரீராமனாய் அவதரித்தபோது விச்வாமித்ரர் தமது யாகத்தைக் காப்பதற்காக அவனைத் தம்முடன் அழைத்து வந்தார். வேள்வி முடிந்தபின்னர் விச்வாமித்ரர் ராமபிரானை மிதிலாபுரிக்கு அழைத்துச்செல்லும்போது கௌதமரின் ஆச்ரமத்துக்கு வந்தான். அப்போது அவன் திருவடி ஸ்பர்சத்தால் அஹல்யை சாபவிமோசனம் பெற்று தூயவளானாள். கௌதமரும் அங்கு அப்போது வந்து ராமனால் பூசிக்கப் பெற்று அகல்யையை மீண்டும் ஏற்றார். அஹல்யை கல்லுருவில் இருந்ததாகச் சொல்வதுமுண்டு. இங்கு எழுதப்பட்டது வால்மீகி ஸ்ரீராமாயணத்திலுள்ள வரலாறு.

அஹல்யை போல வழிமுதல்வன் திருவடி ஸ்பர்சம் பெறும் பாக்யம் எனக்குண்டோ என்று கேட்கிறார் அம்மையார்.

## 11. பிஞ்சாய்ப்பழுத்தேனோ ஆண்டாளைப் போலே?

ஸ்ரீபூமிப் பிராட்டியாரின் அவதாரமான ஆண்டாள் விஷ்ணுசித்தர் என்ற பரமபாகவதோத்தமருடைய துளசி நந்தவனத்தில் அயோநிஜையாகப் [கர்ப்பவாசம் பண்ணாமல் பிறப்பு] பிறந்தார். பட்டர் பிரான் என்றும் அழைக்கப்படும் விஷ்ணுசித்தர் அக்குழந்தையைத் தமது மகளாகவே வளர்த்தார். 'திருத்துழாய்ப் பணைத் துடனே முளைக்குமாபோலே' ஆண்டாளும் க்ருஷ்ண பக்தியுடன் பிறந்து, க்ருஷ்ண பக்தியில் திளைத்த ஆழ்வாரால் வளர்க்கப்பட்ட படியால் குழந்தைப் பருவம் முதலே க்ருஷ்ண பக்தியில் ஊற்றமாயிருந்தாள். இவர் தமிழ்ப் பாமாலையாகப் பாடிய இரு திவ்ய ப்ரபந்தங்களுள் திருப்பாவை இவரால் ஐந்து வயதில் பாடப் பட்டதாக பெரியோர் கூறுவர். இப்ரபந்தத்தில் 'குறைவொன்றுமில்லாத கோவிந்தா! உன் தன்னோடுறவேல நமக்கிங்கு ஒழிக்க வொழியாது' என்றும் 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன் தன்னோடு உற்றோமே யாவோம் உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்றும் கண்ணனிடம் நிச்சயித்துக்கூறி, மேலே நாச்சியார் திருமொழியின் ஆரம்பத்திலேயே 'அவரைப்பிராயம் தொடங்கி என்றுமாதரித்தெழுந்த என் தடமுலைகள் துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத் தொழுது வைத்தேன் [துவரைப் பிரான்—துவாரகாதீசனான கண்ணன்]' என்றும் 'உள்ளிடையாழி சங்கு உத்தமர்க்கென்று உன்னித்தெழுந்த என் தடமுலைகள் மானிடவர்க்கென்று

பேண்பட்டவுடன் வாழுகிலேன் என்றும் தமது நிலையைத் தெரிவித்தார். 'அஞ்சுகுடிக்கொரு சந்ததியாய்—ஆழ்வார்கள் தஞ்செயலை விஞ்சிநிற்கும் தன்மையளாய்—பிஞ்சாய்ப்பழுத்தாளை ஆண்டாளைப் பக்தியுடன் நாளும் வழுத்தாய் மனமே மகிழ்ந்து' என்ற உபதேச ரத்தினமாலை [24] பாசுரம் இத்தொடரில் நினைத்தற்குரியது.

ஆண்டாள் போல சிறுபிராயத்திலேயே க்ருஷ்ண பக்தியில் பழுத்து விளங்கினேனோ? என்று கேட்கிறார் திருக்கோளூர் அம்மையார்.

## 12. எம்பெருமான் என்றேனோ பட்டர்பிரானைப் போலே?

பட்டர்பிரான் என்ற ப்ராஹ்மணோத்தமர்—வேதம் வல்லவன் என்றபடி. *பொங்கும் பரிவாலே வில்லிபுத்தூர் பட்டபிரான் பெற்றான் பெரியாழ்வார் என்னும் பெயர் [உப ரத்.மாலை] என்கிறபடியே பகவானிடம் மட்டற்ற பரிவுள்ளவர் இவர். ஸ்ரீவில்லிபுத்தூரில் ஒரு நந்தவனமமைத்து அவ்வூரில் கோயில் கொண்டுள்ள வடபெருங்கோயிலுடையானுக்கு மாலைகள் கட்டி ஸமர்ப்பிப்பதில் ஈடுபட்டிருந்தவர் இவ்வாழ்வார். அந்நாட்டு மன்னவனான வல்லபதேவன் உண்மைப் பரம் பொருள் யார்? என்ற கேள்விக்கு மெய்யான விடை தேடி இக்கேள்விக்குத்தக்க விடை கூறும் மெய்யறிவாளருக்கு 1000 பொற்காசுகளைப் பரிசாக அறிவித்தான். வடபெருங்கோயிலுடையான் இவர் கனவில் தோன்றி "பட்டர் சித்தரே! நீர் ராஜஸபை சென்று நாமே பரம பொருள் என்று நிலைநாட்டி பொற்கிழியைப் பெற்று வாரும்" என்று நியமித்தான். கேவலம் கைங்கர்ய நிஷ்டராய் கல்வியறிவு அதிகமில்லாத இவரை *எயிற்றில் மண்கொண்டவெந்தை இராப் பகலோது வித்து என்னைப் பயிற்றிப்பணி செய்யக் கொண்டான் [பெரியா திரு 5-2-3] என்று இவரே கூறும்படி மஹாவித்வானாக்கி ராஜஸபைக்கு அனுப்ப இவரும் அறிவாளர்களிடையே நின்று *வேண்டிய வேதங்களோதி விரைந்து கிழியறுத்தான் என்னும் படி "ஸ்ரீமந்நாராயணனே முழுமுதற்கடவுள். ஒப்பாரும் மிக்காருமில்லாத பரம்பொருள்" என்பதை வேதவாக்யங்களைக் கொண்டு யாரும் மறுக்கமுடியாதபடி ஸ்தாபித்து பொற்கிழியை வென்றார். அரசனும், வித்வான்களுடன் இவரைப் பட்டர் பிரான் என்று அழைத்து பட்டத்து யானைமேல் இருத்தி நகர்வலம் வரச் செய்தான் இக்காட்சியைக் காண பரமபுருஷனான நாராயணன் கருடாரூடனாகவந்து காட்சியளிக்க, ஆழ்வார் கண்டு "மணிவண்ணா! இவன் இப்படித் தோன்றுவதே! ஒரு தீங்கும் வாராதிருக்க

வேணுமே'' என்று ''உன் சேவடி செவ்வி திருக்காப்பு என்று பல்லாண்டுபாடி, அடியார்களைக் கூட்டிக் கொண்டு, 'எந்நாள் எம்பெருமான்! உன்தனக்கடியோமென்று எழுத்துப்பட்ட அந்நாளே அடியோங்கள்அடிக்குடில் வீடுபெற்றுய்ந்தது என்று அவனுடைய திருபாதிகஸ்வாமித்வத்தையும் தமது ஸஹஜமான தாஸ்யத்தையும் அவனிடமே விண்ணப்பஞ் செய்தார். [திருப்பல்லாண்டு—10].

இப்படி ஸ்வரூபம் உணர்த்தப் பெற்று அவர்க்கடிமைப் பட்டேனோ நான்? என்கிறார் அம்மையார்.

13 ஆராய்ந்து விட்டேனோ திருமழிசையார் போலே?

மஹீஸாரம் என்ற திருமழிசையில் ப்ருகுமஹரிஷியின் வழித் தோன்றலான பார்க்கவர் என்ற மஹரிஷிக்கும் கநகாங்கி என்ற தேவமாதுக்கும் ஒரு குமாரர் அவதரித்தார் பிறந்த உடனே பெற்றோர்களால் கைவிடப்பட்டு அவ்வூரில் கோயில் கொண்டுள்ள ஜகந்நாதப் பெருமாளின் அருள்நோக்குக்கிலக்கானார் இக்குழந்தையை ஒரு பிரம்புவெளாளன் கண்டெடுத்துத் தனது மகனைக் கருதி வளர்த்தான். ரிஷிகுமாரராய் அறிவுடன் பிறந்துஇறையருள் பெற்றவராயினும் எம்பெருமானுடைய திருவிளையாடல் இவரை "வணங்கும் துறைகள் பலபலவாக்கி மதிவிகற்பால் பிணங்கும் சமயம் பலபலவாக்கி நின்மூர்த்தி பரப்பி வைத்தாய் என்கிறபடி அவன் தோற்றுவித்த பலசமயங்களிலும் புகுந்து ஆராய வைத்தது அப்படி ஆராய்ந்து போந்த இவர் சைவசமயத்தில் ஊன்றியிருந்த போது பேயாழ்வாரைக் கொண்டு இறைவன் இவரைத் திருத்தி வைணவராக நிலைபெறச் செய்தான். இவரும் ''உறையிலிடாதவர்'' என்று பலரும தம்மைப் போற்றும்படி பரசமயிகளைத் தமது நாவன்மையால் வெல்பவராய்த் திகழ்ந்து திருவெஃகா எம்பெருமானிடமும் திருக்குடந்தை ஆராவமுதனிடமும் மிகவும் பாவண்யமுடையவராய் வாழ்ந்து திருக்குடந்தையிலேயே திருநாட்டுக்கெழுந்தருளினார். இவரருளிய ஒரு பாசுரம் இவர் நிலையைத் தெளிவாக்குகிறது

சாக்கியங்கற்றோம் சமணகற்றோம் சங்கரனுர்
ஆக்கிய ஆகமநூலாராய்ந்தோம்—பாக்கியத்தால்
செங்கட்கரியானைச் சேர்ந்தோம் யாம்தீதிலமே
எங்கட்கரியதொன்றில்

இனியறிந்தேன் ஈசற்கும் நான்முகற்கும் தெய்வம்
இனியறிந்தேன் எம்பெருமான் உன்னை- இனியறிந்தேன்
காரணன் நீ கற்றவை நீ கற்பவை நீ நற்கிரிசை
நாரணன் நீ நன்கறிந்தேன் நான் நான் திரு 96)

என்று ஆராய்ச்சியினால் தாம் கண்ட முடிவை வெளியிட்டார்.

இப்படி ஆராய்ந்து மற்ற சமயங்களைப் பொய்யென்று விட்டேனோ நான் என்று கேட்கிறார் அம்மையார்.

## 14. நான் (அவன்) சிறியனென்றேனோ ஆழ்வாரைப் போலே?

நமது ஸம்ப்ரதாயத்தில் ஆழ்வார் எனும் சொல் நம்மாழ்வாரென அன்புடன் அழைக்கப்படும் சடகோபனைக் குறிக்கும். இவர் எம்பெருமானால் நிர்ஹேதுகமாக விஷயீகரிக்கப்பட்டு "மயர்வறமதி நலம்" எனும் பக்திவடிவான ஞானத்தை அருளப் பெற்றவர். ஆகையால் ஆத்மஸ்வரூபத்தையும் பரமபுருஷனுடைய ஸ்வரூபத்தையும் தெளிய உணர்ந்தவர். 'நீசனேன் நிறைவொன்றுமிலேன் (திருவாய் 3 3 4) என்று எம்பெருமான் முன் தம் சிறுமையை உள்ளபடி விண்ணப்பம் செய்வர். 'அடியேன் சிறிய ஞானத்தன் அறிதலார்க்கும் அறியானை—திருமாலை அடியேன் காண்பன் அலற்றுவன், இதனில் மிக்கோர் அயர்வுண்டே? (1-5 7) என்று சிறியனான தான் வானோர்க்கு இறைவனைக் காணத் துடிப்பது அப்பரம்பொருளுக்குக் குறைவிளைவிக்கும் செயல் என்று எண்ணுவர். 'சீலமில்லா சிறியன் (4-7-1) என்பதும் காண்க. 'திருமாலால் அருளப்பட்ட பெருமையை உடையவராயினும் தமது இயல்பான சிறுமையை மறவாமல் சொல்லிக் கொள்வர் ஆழ்வார். இப்படிப்பட்ட ஸ்வரூப உணர்த்தி எனக்குண்டோ? என்கிறார் திருக்கோளூர் அம்மையார்

இப்படித் தம்மைச் சிறியனாக உணர்ந்து பேசிய ஆழ்வார் எம்பெருமான் நமக்குத் தந்த அநுபவங்களை எண்ணிப் பார்க்குங்கால் அவன் தந்த ஞானத்தினாலும் பக்தியினாலும் மிகவும் பெரியவனான அவனைத் தன்னுள் அடக்கி வைத்துள்ளது கண்டு வியப்புறுகிறார், பெருமை கொள்கிறார். 'வைகுந்தா! மணிவண்ணனே! உன்னை நான் பிடித்தேன் கொள் சிக்கெனவே (2 6-1) என்பது இவர் திருவாக்கு. 'புவியும் விசும்பும் நின்னகத்த, நீ என் செவியின் வழிபுகுந்து என்னுள்ளாய் அவிவின்றி யான் பெரியன் (பெரிய திரு 75) மண்ணையும் விண்ணையும் தன்னுள் அடக்கிய பெரியவன் இவருள் புகுந்து ஒரு நொடியும் பிரியாமல் உள்ளே இருப்பதால் இவர் தன்னைப் பெரியன் என்று கூறிக்கொள்வர். அவன் சிறியன் என்பது குறிப்பு. ஆழ்வாரின் சிறுமை போல அவன் சிறுமை இயல்பானதல்ல. தானே தன்னிச்சையால் அமைத்துக் கொள்வது. அப்படி அவன் தன்னை அமைத்து ஆழ்வாருடன் பரிமாற்றம் கொண்டமையால் ஆழ்வார், "எனக்கினியார் நிகர் நீணிலத்தே?" என்று செருக்குடன் கேட்பர். இது

வராமலாதிகள் குருவின் அவனடியாக வந்த அதுவாரமாத லால் தோஷமாகாது. இப்படிப்போல வல்லேனோ? என்று கேட்கிறார் திருக்கோளூரம்மையார்.

## 15. ஏதேனும் என்றேனோ குலசேகரர் போலவே?

குலசேகரப்பெருமாள் என்று போற்றப்படும் கொல்லிநகர்க் கோனான குலசேகராழ்வார் திருவரங்கத்தெம்பெருமானிடத்தும் திருவேங்கடத்தெந்தையிடத்தும் மிகவும் ஈடுபட்டவர், "பரன் சென்றுசேர் திருவேங்கடமாமலை ஒன்றுமே தொழ நம்வினை ஓயுமே (திருவாய் 3-3-8) என்று பரமபுருஷனே விரும்பிவந்துசேர்ந்து திருவேங்கடமுடையானாக ஸேவைஸாதிப்பது திருவேங்கடமாமலையில் அப்புனிதமான மலையில் தாமும் ஏதேனுமொருபிறவியெடுத்துயிர். வாழ அருளும்படி அப்பனை வேண்டுகிறார். 'ஊனேறுசெல்வத்து உடற்பிறவியான வேண்டேன்—வேங்கடத்து கோனேரிவாழும் குருகாய்ப்பிறப்பேனே, *வானாளும்செல்வமும் மண்ணரசும் யான் வேண்டேன் திருவேங்கடச்சுனையில் மீனாய்ப்பிறக்கும் விதியுடையேனாவேனே; *வேங்கடத்து செண்பகமாய்நிற்கும் தவமுடையேன ஆவேனே; *திருவேங்கடமலை மேல் கானாறாய்ப்பாயும் கருத்துடையேன் ஆவேனே; *நெடியானே! வேங்கடவா! நின் கோயிலின் வாசல் படியாய்க்கிடந்தன் பவளவாய் காண்பேனே என்று பலபடியாக வேண்டி, திருப்தி பிறவாமல் *திருவேகட மென்னும் எம்பெருமான்பொன்மலைமேல் ஏதேனும் ஆவேனே என்று இறைஞ்சுகிறார் (பெருமாள் திரு 4) இன்றும் பெருமாள்கோயில் களில் எம்பெருமான் திருமுன் பேயுள்ள உள்வாயிற்படி "குலசேகரன் படி" என்று வழங்கப்படுகிறது. இரும்லை அநந்தாழ்வானெனும் ஆசிரியர், "ஏதேனும்" திருவேங்கடஎன்பதற்கு முடையான் தானாகவும் இருக்க அமையும்" என்பராம் சேஷபூதனான ஸ்வரூபம்அழியமாறி சேஷியாக (ஸ்வாமியாக) நின்றாலும் மலைமேலிருப்பதே உத்தேச்யம் என்றபடி, இப்படித் திருமலையில்வாஸத்தை ஆசைப்பட்டேனோ குலசேகரப் பெருமாளைப் போலே? என்று கேட்கிறார் அம்மையார்.

## 16. யான் ஸத்யமென்றேனோ க்ருஷ்ணனைப் போலவே?

"சக்ரவர்த்தி திருமகனார் பேசின மெய்யும் கிருஷ்ணன் சொன்ன பொய்யுமே நமக்குத் தஞ்சம்" என்பர் நமதாசிரியர்கள். மெய் நம்பி என்பதே கண்ணனுக்கு நிலைநின்ற பெயர். ஆனால் ராமனைப்போலே க்ருஷ்ணனும் ஸத்யவாதியே என்பதே காட்டப் படுகிறது இவ்வார்த்தையில் "ராமோவிக்ரஹவாந்தர்ம" என்று

**திருக்கோளூரம்மாள் வார்த்தை-3**

ஸ்ரீராமன் தர்மஸ்வரூபனாயிருந்ததுபோல், அத்யாத்ம வித்துக்கள் க்ருஷ்ணனே ஸநாதநதர்மம் என்று சொல்லும்படி வாழ்ந்தவன் கண்ணனெம்பெருமான். ஆச்ரிதஸம்ரக்ஷணார்த்தமாக அவன் சொன்ன பொய்யெனத்தோற்றும் மொழிகள் பொய்யாகா. பாண்டவர்க்காகத் தூது செல்லும்போது த்ரௌபதி "க்ருஷ்ணா! மன்னவனின் பேரவையில் பலர்காண பாவிதுச்சாதனன் விளைத்தபேராபத்தில் உன்னையே சரணாகப் பற்றினேன். அப்பாவிகள் தொலையும்படி நீ பார்த்தருளவேண்டும்." என்று வேண்ட, "க்ருஷ்ணே! அவர்கள் அனைவரும் மாய்ந்தால் தான் நீ குழல் முடிப்பேன் என்று இட்ட சபதம் நிச்சயம் நிறைவேறும். என் வாக்கு பொய்யாகாது. இதை நீ நம்பு" என்று சபதம் செய்தான்

த்யௌ: பதேத் ப்ருதிவீ ஶீர்யேத் ஹிமவாந் ஶகலீபவேத் |
ஶுஷ்யேத்தோயநிதி: க்ருஷ்ணே! நமே மோகம் வசோபவேத் ||

என்பது மஹாபாரதம் உத்யோக பர்வத்தில் கண்ணன் த்ரௌபதிக்குச் சொன்னவார்த்தை. "ஆகாசம் விழலாம்; பூமி சரியலாம்; ஹிமயமலை தூள் தூளாக விழலாம்; சமுத்ரம் வற்றி நிலமாகலாம்; என்றும் நடவாத இவை நடந்தாலும் க்ருஷ்ணையே! என் சொல் பொய்யாகாது" என்று தன் பேச்சு ஸத்யம் என்றான் க்ருஷ்ணன்: கீதையிலும் மந்மநாபவ மத்பக்தோ மாமேவைஷ்யஸி ஸத்யம்தே ப்ரதிஜாநே[18-65] என்றுக்ருஷ்ணன் ஸத்யப்ரதிஜ்ஞை பண்ணுவது காணலாம். "பக்த்யா பராஸ்த்ராத் வேத்மிஜநார்த்தநம்" என்று கண்ணனை உள்ளபடியறிந்த ஸஞ்சயன் உத்யோகபர்வத்தில் கூறும் வார்த்தை; "ஸத்யே ப்ரதிஷ்டிதம் க்ருஷ்ண; ஸத்யமத்ரப்ரதிஷ்டிதம். ஸத்யாத்ஸத்யஞ்ச கோவிந்த: தஸ்மாத்ஸத்யோஹி நாமத;" இப்படி க்ருஷ்ணனை ஸத்யஸ்வரூபனாக மெய்யறிவாளர்கள் பேசியுள்ளதும் அறியத்தக்கது.

எம்பெருமானுக்கு **ஸத்யமூர்த்தி** என்றே திருநாமம் அவன் எப்போதும் பொய்யனானதில்லை. இதையுணர்த்தவே திருக்கோளூரம்மையார் இப்படி ஒரு வார்தையைச சொல்லியுள்ளார்.

17. **அடையாளம் சொன்னேனோ கபந்தனைப் போலே?**

ஸ்ரீராமாயணத்தில் ஆரண்யகாண்டத்தின் இறுதியில் கபந்தனுடைய சரித்திரம் பேசப்பட்டுள்ளது. அவன் தனுலம்ச

அரசனான ஸ்ரீ என்பவனின் மகன். அவன் ஸ்தூலசிரஸ் என்ற ரிஷியின் கோபத்துக்காளாகி பெரியதொரு ராக்ஷஸ உருவத்துடனிருக்கும்படி சபிக்கப்பட்டான். அவ்வரக்கன் கொடியதவம் செய்து பிரமனருளால் நீண்ட ஆயுளைப் பெற்று இந்திரனுடன் யுத்தத்திற்கு நிற்க, வஜ்ராயுதத்தினாலடித்து அவன் துடைகளை வயிற்றுக்குள்ளும், தலையை மார்புக்குள்ளும் தள்ளிவிட்டான். வர பலத்தினால் நீண்ட ஆயுள்பெற்றிருந்தபடியால் இந்திரன் அவனைக் கொல்லவில்லை அவனுக்கு நீண்ட இருகைகளையும் வயிற்றிலேயே கோரப்பற்களையுடைய வாயையும் நெருப்பு போன்ற ஒளியுடைய கண் ஒன்றையும் ஸங்கல்பித்தான். அவ்வரக்கன் **கபந்தன்** என்றழைக்கப்பட்டான். இருந்த இடத்திலேயே கைகளில் அகப்பபட்ட ஜந்துக்களையெல்லாம் பிடித்து. வாயில் போட்டு உண்டுஉயிர்வாழ்ந்து வந்தான்.

பெருமாளும் இளையபெருமாளும் ஜனஸ்தானத்தில் ராவணன் வஞ்சனையால் பிராட்டியைத்திருடிக் கொண்டுபோன பின்னர் அவளைத் தேடித் திரிகையில் கபந்தன் வசித்திருந்த க்ரௌஞ்சாரண்யத்துக்கு வந்தனர். ஒரு யோசனை நீளமுள்ள கபந்தனுடைய கைகளில் சிக்கிய அவர்களை அவன் விழுங்க முயன்றபோது ராமனும் லக்ஷ்மணனும் தைரியத்தைக்கைவிடாமல் இக்கைகளைத் தமது வாளால் வெட்டி வீழ்த்தினர். கபந்தனிடம் இந்திரன், 'பகவதவதாரமான ராமலக்ஷ்மணர்கள் இங்குவந்து உன்கைகளை வெட்டுவார்கள். அப்போது உனக்கு சாபம் தீரும்'' என்று அவனிடம் சொல்லியிருந்தபடியால் இவர்கள் ராமலக்ஷ்மணர்களென அறிந்து, அவர்களைக் கேட்டு அப்படியே தெளிந்து, தன்னைத் தீயிலிட்டு எரித்துவடும்படி வேண்டினான்; இவர்களும் அப்படியே செய்ய அவன் தனது சுயரூபம் பெற்று, பிராட்டியை அடைய சுக்ரீவனிடம் நட்புகொள்ளுமாறு கூறினான். 'சுக்ரீவன் சூரியனின் ஔரஸபுத்ரன் நற்சமயம் அண்ணனான வாலியால் ராஜ்யத்தினின்றும் துரத்தப்பட்டு பம்பாஸரஸ்ஸுக்கருகிலுள்ள ருச்யமூகபர்வதகுகையில் வாழ்கிறான் அவன் மிகவும் குணவான்; நிச்சயம் உனக்கு உதவுவான், அவனுடன் நட்பு கொண்டு அவன்மூலம் நீ பிராட்டியை அடைவாய் முதலில் நீங்கள் மதங்க முனிவரின் ஆசிரமம் சென்று தர்மநிபுணையான சபரியின் பூஜையை ஏற்று பின்பு பம்பாஸரஸில் நீராடி சுக்ரீவனை நண்பனாக அடையுங்கள்' என்று சுக்ரீவனின் அடையாளம், அவனிடம் செல்லும்வழி யாவற்றையும் விவரமாகக் கூறிவிட்டு சுவர்க்கம் சென்றான்

கபந்தனைப்போலே பெருமாளுக்கு உதவும் பாக்யம் நான்பேற்றேனோ என்கிறார் அம்மையார்.

## 18. அந்தரங்கம் சொன்னேனோ திரிஜடையைப்போலே?

திரிசடை என்பாள் ராவணனின்வேலைக்காரிகளில்ஒருத்தியான கிழராக்ஷஸி. கம்பநாடர் இவளை "வீடணன் கன்னி"; என்றும் சீதைக்குத்தோழியாயிருந்து நல்வார்த்தை சொல்லி உத்ஸாகப் படுத்தியதாகவும் சித்தரித்துள்ளார். வால்மீகி ஸ்ரீராமாயணத்தில் நாம் திரிசடை சீதைக்கு உதவியதை சுந்தர காண்டத்திலும் மீண்டும் யுத்தகாண்டத்திலும் காண்கிறோம், விபீஷணன் மனைவி யான சரமை என்பாளும் சீதைக்கு அவ்வப்போது தனது இனிய பேச்சினால் துயர்நீக்கி உதவியதாக வால்மீகி கூறுகிறார். இலங்கைச் சிறையில் 10 மாதங்கள் கழித்தும் ராமன் வரக் காணுமையால் மனமுடைந்த பிராட்டி தன்னை முடித்துக் கொள்ளத் தீர்மானித்து அப்படிச் சொல்லி அழுத போது அவளுக்குக்காவலான அரக்கிகள் மேலும்சொடுஞ்சொற்களாலும் மிரட்டலாலும் துன்புறுத்தினர். திரிசடை அந்த ராக்ஷஸிகளை விரட்டி "நீங்கள் சீதைக்கு ஒரு தீங்கும் இழைக்க முடியாது. அருணோதயத்துக்கு முன் நான் ஒரு கனவு கண்டேன். இக்கனவு நிச்சயம் பலிக்கும். எனது கனவில் ராவணன் எண்ணெயில் தோய்ந்த சிவப்பு வஸ்த்ரமணிந்து தரையில் மயங்கி விழுந் திருக்கவும் பிறகு தடுமாறி எழுந்து ஒரு கழுதையின் மேல் தெற்கு நோக்கிப் போகவும் கண்டேன். விஷ்ணுதேவனை யொத்த பராக்ரமசாலியாய் ராமன் லக்ஷ்மணனுடன் வெள்ளை வஸத்ர மணிந்து வெள்ளையான புஷ்பமாலையுமணிந்து தந்தப்பல்லக்கில் ஆகாய மார்க்கமாய் வந்து சீதையை அழைத்துக் கொண்டு யானை மேல் பவனிவரக் கண்டேன் ராமன் வந்து இலங்கையை வெற்றி கொண்டு இவளை அழைத்துப் போவான்; இது நிச்சயம் நீங்கள் சீதையிடம் கொடுஞ்சொல் சொல்லாமல் நல்வார்த்தை பேசி உங்களை மன்னித்து ரக்ஷிக்கும் படி வேண்டுவீர்"; என்று சொல்லி பிராட்டியிடமும் "ராமன் நிச்சயம் வருவான். அவனிடமிருந்து விரைவில் செய்தி வரவிருக்கிறது; துக்கத்தைத்துறந்து உத்ஸா ஹத்துடனிருப்பாயாக" என்று சொல்லித் தேற்றினாள். உடனே அனுமான் வந்து தூதுமொழிந்தான்.

பின்னர் யுத்தம் ஆரம்பித்த போது ராமன் பெருஞ்சேனை யுடன் லங்கை வந்திருப்பதையும் விபீஷணன், சுக்ரீவன், ஹனு

மான்: லக்ஷ்மணன் இவர்கள் துணையுடன் ராமன் அரக்கர்களுடன் போர்புரிவதையும சீதைக்குச் சொன்னாள். யுத்தத்தில் இந்திரஜித்தால் நாக பாசத்தால் கட்டப்பட்ட ராமலக்ஷ்மணர்களை இறந்தவர்களாக சீதையைப் போர்க்களம் அழைத்துச் சென்று ராக்ஷஸர்கள் காட்டினர். சீதை மிகவும் துக்கப்பட்டு அழுத போது திரிசடை ''அவர்கள் இறக்கவில்லை. மயங்கியிருக்கிறார்கள். ராக்ஷஸர்கள் பல மாயங்களைச் செய்வார்கள், அவர்களால் ராமனுக்கோ லக்ஷ்மணனுக்கு ஒரு தீங்கும் செய்யமுடியாது. எதைக் கண்டும் நீ பயப்படாதே, ராவணன் ராமனுடைய அம்புகளால் மாளப் போவது நிச்சயம்'' என்று ராவணனது மாயைகளைச் சொல்லி பிராட்டியைத் தேற்றினாள், காமத்தினால் எந்த பெண்ணை யும்பலாத்காரமாய்த் தீண்டினால் அவன் தலைவெடித்து விடும் என்ற சாபத்தையும் சொல்லி ''அவன் உன்னை பலாத்காரம் செய்ய மாட்டான். பயப்படாதே'' என்றும் சொன்னாள், இப்படிப் பலபடியாலும் பிராட்டிக்கு திரிசடை உதவினாள். பாலைவனத்தில் ஒரு சோலைபோலே திரிசடையிருந்து பிராட்டிக்கு உதவினாப்போல் நான் செய்யவல்லேனோ என்கிறாளிவ்வம்மையார்,

## 19. அவள் தெய்வமென்றேனோ மண்டோதிரியைப் போலே ?

மண்டோதரி என்றும் மந்தோதரி என்றும் அழைக்கபடும் ஸ்த்ரீரத்தம் லங்கேச்வரனான ராவணனின் பட்டமஹிஷி. தேவ சிற்பி மயனுடைய மகள், மஹாபதிவ்ரதையான இவள் ராவணனிடம் '' சீதையை அபஹரித்து வந்தது தவறு ; பெருங் கேட்டை விளைவிக்கும் ; ராமனுடன் நட்பைத்தேடு'' என்று பலபடியும் எடுத்துரைத்தும் அவன் கேட்கவில்லை. லங்கையின் மேல் ராமன் பெரியதொரு வானரசேனையுடன் படையெடுத்து வந்து ராக்ஷஸர்களையும் ராவணனையும் கொன்று வீழ்த்தினான். ராவணன் மாண்ட பின்னர் அவன் மனைவிமார்கள் யுத்த பூமிக்கு வந்து அவன் சடலத்தைக் கட்டிக் கொண்டு அழுதனர், தனது பெருந்துக்கத்தினிடையே மந்தோதரி '' ராமன் கேவலம் மனிதனல்ல, திருமகள் கேள்வனும திருவாழிதிருச்சங்கங்களைத் திருக்கரங்களிலேந்திய பரம புருஷனே ராமனாக அவதரித்து வந்து உன்னைக் கொன்றான். நான் உனக்கு எவ்வளவோ நன்மை உரைத்தும் கேட்காது போயினை. மஹாபதிவ்ரதையான சீதையிடம் தகாத ஆசை வைத்ததனாலன்றோ உனக்கு இம்முடிவு கிட்டியது. விஷ்ணு தேவனே ராமனாக வந்து உன்னை கொன்றானென்பது நிச்சயம்'' என்று பலவாறாகப் புலம்பினாள். அவள் சொன்னதில் ஸாரமும் முக்கியமுமானவை : (யுத்த காண்டம் 114 — 14, 15, 16, 17).

வ்யக்தமேஷ மஹாயோகீ பரமாத்மா ஸநாதந |
அநாதிமத்யநிதநோ மஹத பரமோ மஹாந் ॥
தமஸ பரமோ தாதா ஶங்கசக்ரகதாதர : |
ஸ்ரீவத்ஸவக்ஷா நித்யஸ்ரீ ய்ஜய; ஶா வதே ந்த |
மாநுஷம் வபுரஸ்தாய விஷ்ணு: ஸத்யபராக்ரம: |
ஸர்வை பரிவ்ருதோ தேவைர்வாநரத்வ முபாகதை. ॥
ஸர்வலோகே ஸ்வர ஸாக்ஷாத் லோகாநாம்ஹிதகாம்யயா |
ஸராக்ஷஸபரீ ாரம் ஹதவாம்ஸ்த்வாம் மஹாத்யுதி; ॥

இந்த ஸ்ரீரா ன் யோகியரில் மேலானவன்—உயர்வறவுயர்நல முடையவன் என்று மிகச்சிறந்த குணங்களையுடையவன் எப்பொழுதும் நித்யமாயுள்ள பரம்பொருள் ஆதி, நடு, அந்தம்—முதல், நடு முடிவு இவைகாண முடியாதவன், ப்ரக்ருதியின் காரிய மான மஹத் பெரிது) என்றதத்வந்தைக் காட்டிலும் எல்லையற்ற பெரியவன், மூலப்ரக்ருதியைக்காட்டிலும்—அதை சொத்தாக வுடையனும்உயர்ந்தவன். அதை ஆதாரமாகத் தாங்குமவன், சங்கு சக்கரம் முதலன திவ்யமான ஐம்படைகளை யுடையவன் ஸ்ரீ வத்ஸமென்ற பரத்வஸூசகமான திருமருவால் மார்பில் அலங்கரிக்கப்பட்டவன்; மஹாலக்ஷ்மியான ஸ்ரீயுடன் எப்போதும் கூடியிருப்பவன். யாராலும் வெற்றிகாண முடியாதவனும் விகார மற்றவனும் நிலைத்திருப்பவன். பேரொளியையுடையவனும் ஸகல லோகங்களையும் நியமித்துநடத்தும ஈச்வரனும், எங்கும் பரந்துள்ள விஷ்ணு—நாராயணனே ஸத்யமான—வீணுகாத பராக்ரமமுடையவனும், வானர ரூபங்கொண்ட எல்லாதேவர் களாலும் சூழப்பட்டவனும் எல்லாவுலகங்களின் நன்மையை உத்தேசித்து நேரேவந்து உன்னை(ராவணனை) கொன்றிருக்கிறன். இது தெளிவு [ஸ்ரீராமாயணத்தில் தாரை, மந்தோதரி இரு பெண் களும் ராமபிரானுடைய உண்மையையறிந்து பேசியுள்ளார்கள்

இப்படி அவதார ரஹஸ்யத்தை காட்டக்கண்டு நான் பேசினேனே என்கிறர் அம்மையார்.

**20 அஹம்வேதமி என்றேனே விசுவாமித்திரனைப் போலே ?**

தசரதமஹாராஜன் புத்ரகாமேஷ்டியாகம் பண்ணி ராமன் முதலாக நாலு பிள்ளைகளைப்பெற்று வளர்த்து அவர்கள் பாலர்களானதும அவர்கள் விவாஹத்தைப்பற்றி ஆலோசிக்கை

யில் விச்வாமித்ர மஹரிஷி ராஜசபைக்கு வந்தார் அரசன் அவரை முறைப்படி உபசரித்து, "நீர் எந்தபயனை விரும்பி வந்தீரோ அதை நிச்சயம் நிறைவேற்றுகிறேன்; சொல்வீர்" என்று வேண்ட, அவரும், "நான் பண்ணும்யாகம் அரக்கர்களால் தடையின்றி நிறைவேறும்படிகாக்க உன் மகன் ராமனை என்னுடன் அனுப்புவாய்" என்று கேட்டார். அப்போது அவர் சொன்னது; "அரசனே! ராமன் சிறு பிள்ளை; அவனால் மஹாபலசாலிகளான அரக்கர்களை எப்படிக் கொல்ல முடியும்? என்று ஐயப்படாதே. ராமன் தனது பராக்ரமத்தினால் அரக்கர்களைக் கொல்லவல்லவன் ராமனைப்பற்றிய உண்மையை தவத்திலுயர்ந்த என்னையும் வசிஷ்டரையும் போன்றவரே உணர்ந்தறியமுடியும், என் பேச்சை சத்யமென நம்புவாய்" என்றார். (பாலகாண்டம் 19-14)

அஹம்வேத்மி மஹாத்மாநம் ராமம் ஸத்யபராக்ரமம் |
வஸிஷ்டோ஽பி மஹாதேஜா யே சேமே தபஸிஸ்திதா: ||

ராமனை மஹாத்மாவாகவும் (எல்லையற்ற- சொல்லித்தலைக்கட்ட முடியாத பெரும்பெருமையுடையவனாகவும்' வீண்போகாத ஸத்யமான பராக்ரமமுடையவனாகவும் நான் அறிவேன் வசிஷ்டபகவானும் அறிவார், தவத்தில் நிலைபெற்றவராயுள்ள மஹரிஷிகளும் அறிவார்கள்; யோகமுறை யறிந்தநான் உட்கண்ணாலறிவேன்; ஆசார்யஸேவையால் அறிவு வளர்ந்த நானறிவேன்; புல்லும் 'தர்ப்பம, தண்டமும் ஏந்திய நானறிவேன்; தர்மமோக்ஷபரனான நானறிவேன் "இவன் பெருமையை வெளிக்கண்ணால் நீயறியமாட்டாய்; நாட்டாரால் ஸேவிக்கப் படும் நீயறியாய், செங்கோலேந்தியவனும் மணிமகுடம் தரித்தவனும் உலக இன்பம் நாடுபவனுமான நீயறியாய்" என்று பொருள். 'வேத ாஹமேதம் புருஷம் மஹாந்தம்" என்ற ச்ருதிச்சாயையில்அவதரித்ததுஇந்த சுலோகம் இப்படிவிச்வாமித்ர முனிவரைப்போல் உண்மையறிந்து பேசவல்லேனோ? என்கிறார் ஆம்மையார். மேலே 39ம் வார்த்தை இதன் தொடர்ச்சி என்றறிக.

## 21 தேவுமற்றியேனோ (அறியேனென்றேனோ) மதுரகவியார் போலே?

திருக்கோளூர் எனும் திவ்யதேசத்தில் அவதரித்த ப்ராம் மணோத்தமர் மதுரகவி என்றும் மதுரகவியாழ்வார் என்றும் போற்றப்படுமவர். இவர் வடதேசயாத்திரை சென்றிருக்

கையில் வட நாட்டிலிருந்து தெற்கே ஒரு அழியாப் பெருஞ்சோதி தெரிவது கண்டு அதையே நோக்கி நெடுந்தூரம் நடந்து வந்து தமதூருக்கருகிலுள்ள திருக்குருகூரில் விளங்குவதென்றும், அவ்வொளிக்குக் காரணம் **மாறன்** என்றும் **சடகோபன்** என்றும் அழைக்கப்பட்ட தெய்வீககுமாரர் என்றுமறிந்து, அவர் பேரறிஞர் திருமாலிடம் மட்டற்ற அன்பு பூண்டவர் என்பதை சோதித்தறிந்து அவர்க்குச்சீடராயினார். சடகோபனை ஆழ்வாரே நமக்கு மாதா, பிதா, குரு, தெய்வம் எல்லாம் என்று வேறு தெய்வ அறியாதவராக நிலைத்து "கண்ணிநுண் சிறுத்தாம்பு" என்ற (10 பாசுரம் கொண்ட) திவ்யப்ரபந்தத்தை ஆழ்வார் விஷயமாக அருளிச் செய்தார். அதில் ஸாரமான ஒரு பாட்டு :

நாவினால் நவிற்றின்பமெய்தினேன்
மேவினேன் அவன் பொன்னடி மெய்ம்மையே
தேவுமற்றறியேன் குருகூர் நம்பி
பாவினின்னிசை பாடித்திரிவனே [2]

என்பது. குருகூர் நம்பியான ஆழ்வார் திருநாமத்தையும் அவர் பாடியருளிய தெய்வமணங்கமழும் நாவில் அமுதத்தேனூறும் இன்தமிழ் பாடல்களையும் பாடிக்கொண்டு இன்பமாக என்காலத்தைக் கழிப்பேன். "ஆழ்வாரையொழிய வேறு தெய்வமறியேன்; ஆழ்வாருக்கன்பன் என்று உகந்து தேவபிரானை பரமன் தன்னைக்கொண்டுவந்து காட்டுவதால் ஆழ்வார் உகந்த வஸ்து என்று அவனையும் காண்பன்" என்பது இவர் நிலை, இலக்குவனைப் போல் ராமனிடமே பற்றுவையாமல் ராமபக்தனை பரதனையே ஸ்வாமியாகக்கொண்ட சத்ருக்நாழ்வான் படியிது. "ஆசார்யாபிமானமே உத்தாரகம்" என்று பேற்றுக்கு அதை சரமோபாயமாக நமது ஆசாரியர்கள் கொண்டு ஒழுகியதற்கு ப்ரமாணம் மதுரகவி சொல்லாம். இதை உணர்த்துவது இவ்வார்த்தை.

## 22. தெய்வத்தைப் பெற்றேனோ தேவகியாரைப்போலே?

பிரமனின் பிள்ளையான ஸ்வாயம்புவமநு இவ்வுலகத்தை முதலில் ஆண்டார் அக்காலத்தில் ஸுதபஸ் என்பவர் ப்ருச்நி என்ற தமது மனைவியுடன் பலவாயிரம் ஆண்டுகள் நாராயணனைக் குறித்து தவமியற்றினார் அவர்களின் தவத்துக்கு மகிழ்ந்து நாராணன் காட்சி தந்து "உங்களுக்கு யாது வேண்டும்?" என்று கேட்டபோது "உம்மைப்போல ஒரு பிள்ளைவேண்டும்" என்று

கேட்டபோது "உம்மைப்போல ஒரு பிள்ளைவேண்டும்" என்று கேட்கவே அந்த நாராயணன் தானே அவர்களுக்குப் பிள்ளையாய்ப் பிறந்தான். அப்போது அவன் பெயர் ப்ருச்நிகர்ப்பன் என்பது, சுதபஸும் ப்ருச்நியும் காச்யபராகவும் அதிதியாகவும் மீண்டும் பிறந்தனர். அப்போது பகவான் அவர்களுக்கு வாமனனாகப் பிறந்தான். மூன்றாவது முறையாக இதே தம்பதி வசுதேவரும் தேவகியுமாகப் பிறந்தனர், தேவகி கொடியோனான கம்ஸனுக்குத் தங்கை முறையாக வேணும். அவளுக்குப்பிறக்கும் எட்டாவது பிள்ளை தன்னைக் கொல்வான் என்று அறிந்த கம்ஸன் அவர்களை சிறைவைத்து அவர்களுக்குப் பிறந்த குழந்தைகளையெல்லாம் ஒவ்வொன்றாகக் கொன்று வந்தான். எட்டாவது ப்ரஸவம் கம்ஸனுடைய சிறையில் ஆவணிமாதம் ரோஹிணி நக்ஷத்ரமும் அஷ்டமி திதியும் கூடின நாளில் நள்ளிரவில் ஆயிற்று. "தேவகீ பூர்வஸந்த்யாயாம் ஆவிர்பூதம் மஹாத்மநா" (ஸ்ரீவிஷ்ணுபு 5-3-2) என்று தேஜோமயமான ஒரு பிள்ளை விஷ்ணுரூபமாய் திருவாழி முதலான ஆயுதங்களைத்தாங்கி பீதாம்பரமணிந்து, வனமாலை முதலானவைகளுடன் பிறந்தது வசுதேவரும் தேவகியும் மட்டில்லா மகிழ்ச்சியுடன் பகவானைத் துதித்தனர் அப்போது பகவான் மூன்று பிறவிகள் தாம் அவர்களுக்கு மகனாகப்பிறந்ததை எடுத்துரைத்தார் 'ஜாதோஸி தேவதேவேச சங்கசக்ரகதாதர" என்று துதித்து "உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதம் சதுர்புஜம்; கம்ஸனால் என்னை இங்குவருமே; இத்தெய்வவுருவை மறைத்துக்கொள்" என்று வேண்டினர். அப்படியே அவன் சாதாரணக் குழந்தையாகி, தன்னை கோகுலத்தில் யசோதை நந்தகோபர்களிடம் கொண்டு சேர்க்கும்படி கூற, அவரும் அப்படியே செய்தார் அங்கு நந்தகோபனுக்கும், யசோதைக்கும் மகனாய் கண்ணனாய் வளர்ந்தான். நால்வர் தவப்பயனாய் ஒருபிள்ளை பிறந்தவன் கண்ணனெம்பெருமான் (ஸ்ரீபாகவதம் தசம ஸ்கந்தம்) *செங்கனிவாயெங்கள் ஆயர்தேவே! (திருவாய்மொழி 10-3-10). *ஆயர்புத்திரனல்லன்-அருந்தெய்வம் (பெரியாழ்வார்)

தேவகிபோலத் தவமியற்றி தேவதேவனையே பிள்ளையாய்ப் பெற்றேனோ நான்? என்கிறார் திருக்கோளூரம்மையார்.

## 23. ஆழிமறை என்றேனோ வசுதேவரைப் போலே?

பகவான் கம்ஸனின் சிறைச்சாலையில் நான்குகைகளையுடையவனாய் திருவாழி திருச்சங்கோடுபிறந்தபோது இப்படிப்பிறந்தவன்

**திருக்கோளூரம்மாள் வார்த்தை-4**

ஸாக்ஷாத் நாராயணனே என்றறிந்தும், கம்ஸபயத்தாலே "உபஸம்ஹர ஸர்வாத்மந் ரூபமேதத்" என்று அவனது திவ்ய ரூபத்தை மறைத்துக்கொள்ளும்படி வேண்டினாள் இதுபரிவின் காரியம்.

இப்படிப்பட்ட பரிவு எம்பெருமானிடம் எனக்குண்டோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 24. ஆயனை(னாய்) வளர்த்தேனோ யசோதையைப்போலே?

*வேண்டித்தேவரிரக்க வந்து பிறந்ததும் வீங்கிருள் வாய் பூண்டு அன்றன்னே புலம்பப்போய் அங்கோராய்க்குலம் புக்கதும் [திருவாய் 6-4-5] என்கிறபடியே பகவான் தேவர்களுடைய வேண்டுகோளுக்கிணங்கி க்ருஷ்ணனாக வந்தவதரித்த பொது வசுதேவபுத்ரனாய் க்ஷத்ரியகுலத்தில் பிறந்தான் ஆயினும் பிறந்த இரவோடு இரவாய் இடைச்சேரியிலே யசோதைக்கும் நந்தகோபனுக்கும் மகனாய் வசுதேவரையே கொண்டுவிடச் சொல்லி ஆய்க்குலம் புக்கான் யசோதைக்கு இக்குழந்தை வசுதேவரால் கொண்டுவிடப்பட்டதென்பது தெரியாது. தான் பெற்ற பிள்ளையென்றே வளர்த்தாள். ஒரு சமயம் குழந்தைக் கண்ணன் வாயில் ஏழுலகங்களையுங்கண்டு* ஆயர் புத்திரனல்லனிவன் அருந்தெய்வம் என்று அறிந்தாளாகிலும், ஆயர்குலத்துக்குச் சேர கன்று மேய்ப்பது, குழலூதுவது முதலியவற்றில் அவனை ஊக்கங் கொள்ளச் செய்தாள். கண்ணனும் தனது தோழர்களிடமும உறவினர்களிடமும் இடையனாகவே நடந்து கொண்டான் கோவர்த்தன மலைக்குப் பூசையிட்டதால் கோபங் கொண்ட இந்திரன்பெருமழையைப் பெய்வித்தபோது மலைக்குடையாய்ப் பிடித்துஇடையர்களையும் பசுக்கூட்டங்களையும் காப்பாற்றினான். அப்போது இடையர்கள் மிகவும் ஆச்சர்யப்பட்டு "நீ தேவனோ?" என்று கேட்டபோது கண்ணன் "நான் உங்கள் உறவினனல்லவோ? உறவறுத்துப் பேசாதீர்கள்" என்று சீறினான். இப்படி யசோதை கண்ணனைத்தன்குல ஆசாரப்படி ஆயனாகவே வளர்த்தாள். அவன் தெய்வமகன் என்பதை பல நிகழ்ச்சிகளால் கண்டும். அவனைத் தன்மகனாகச் சீராட்டியும், கட்டியும் அடித்தும், அன்பைச் சொரிந்தும் இடைப்பிள்ளையாகவே வளர்ந்தாள், இப்படி நான் செய்ய வல்லேனோ? என்று கேட்கிறார் திருக்கோளூர் அம்மையார்.

## 25. அநுயாத்திரை செய்தேனோ அணிலங்களைப் போலே?

*குரங்குகள் மலையை நூக்கக் குளித்துத்தாம் புரண்டிட்டோடித் தரங்க நீரடைக்கலுற்ற சலமிலா வணிலும் போலேன் என்பது தொண்டரடிப்பொடியாழ்வாரின் பாசுரம் [திருமாலை-27]. இலங்கையில் புகுந்து அங்கு சிறைவைக்கப்பட்டிருந்த சீதா தேவியை மீட்கும் பொருட்டுத் தாமும் வானரசைன்யமும் கடலைக் கடப்பதற்காகக் கடலில் ஒரு அணை கட்டுவது என்று பெருமாளும் வானர முதலவர்களும் முடிவு செய்தனர். அதற்காக மலைகளை யொத்த பெரும்பாறைகளைக் கடலில் கொண்டு போட்டு அணை கட்டுவதில் முனைந்தனர். காட்டிலே குரங்குகளோடே வாழ்ந்திருந்த அணில்கள் தாமும் இவர்களுடன் ராமகாரியத்திற்கு உதவ வேணும் என்று தங்களளவில் கடலைத் தூர்ப்பதில் ஊக்கங்கொண்டு நீரில் மூழ்குவது, மணலில் புரளுவது ஓடிப்போய் உடலில் ஒட்டிய மணலைக் கடலில் போடப்பட்ட பாறைகளின் நடுவே உதிர்ப்பது—இப்படிச் செய்தனவாம். நீரில் மூழ்கி நீருடன் கரையில் வந்து புரளுவதால் கடல்நீர் குறையும் என்று இவைகள் நினைவு. அப்படியே தாங்கள் கொண்டு செல்லும் சிறிதளவு மணலால் அணை கட்டப்பட்டுவிடுமென்றும் இவைகள் நினைவு!

இப்படி குரங்குகளின் பின்சென்று (அநுயாத்திரை செய்து) அணில்கள் ராமகாரியம் செய்யப்பார்த்தனவே அந்தப் பாரிப்பில் துளியேனும் எனக்குண்டோ? என்கிறார் அம்மையார். அணில்கள் உதவியதை ஆழ்வார் தாமே ஸாக்ஷாத்கரித்துப் பாசுரத்தில் வெளியிட்டருளியுள்ளார்.

## 26. அவல்பொரியை ஈந்தேனோ குசேலரைப்போலே?

கண்ணனெம்பெருமான் உலகமரியாதைக்கிணங்க சாந்தீபினி என்ற முனிவரிடம் குருகுலவாஸம் பண்ணி மிகக்குறுகிய காலத்தில் எல்லாவித்யைகளையும் கற்று முடித்தான். அப்போது அவனுடன் பள்ளித்தோழனாக வித்யைபயின்றவர் சுதாமா என்ற ஏழைப் பிராமணர். இவரையே குசேலர் என்றழைப்பது. அவர் ஐம்புலன் களையும்வென்று மெய்ஞானம் பெற்றவராகையால் க்ருஷ்ணனுடைய உண்மையை அறிந்து அப்பரம்பொருளிடம் மட்டற்ற அன்பு கொண்டிருந்தார். குருகுலவாஸம் முடிந்தபின் அவர் தம்மூர் சென்று தம்மைப்போல் குணபூர்த்தியுள்ள சுசீலை என்ற பெண்ணை மணந்து இல்வாழ்க்கை நடத்தி வந்தார். குசேலருக்கு 27 குழந்தைகள் பிறந்ததாகச் சொல்வது புராணங்களில் காணப்

படாத கற்பனை. பொருளீட்டுவதில் மனம் செல்லாமல் தினமும் பிக்ஷை ஏற்றுக்குடும்பம் நடத்தி வந்தார். அதனால் வறுமையில் வாடினார்.

ஒருநாள் அவரில்லாள் அவரிடம் "உமது பால்ய நண்பர் ஸ்ரீ க்ருஷ்ணன் துவாரகையில் அரசாண்டு வருகிறார். நீர் அங்கு சென்று அவரைக் கண்டு வாரும்; அவர் நமது வறுமையைப் போக்கப் பொருளுதவி செய்வார்" என்றுமிகவும்தயக்கத்துடன் சொன்னாள். பொருளுக்காகப் பரந்தாமனைக் காண ஆசைப்படாத சுதாமா இந்த வாய்ப்பிலாவது கண்ணனை மீண்டும் கண்ணால் காணலாம் என்று துவாரகாயாத்ரையை மேற்கொண்டார். கண்ணனுக்குக் காணிக்கையாக ஏதாவது கொண்டு செல்லவேணுமே என்று மனைவியைக் கேட்டார். வறுமையில் வாடிய அவர்கள் கண்ணன் பெருமைக்குச்சேர என்ன கொடுக்க முடியும்? சுசீலை தனது நண்பர்கள் சிலரைக்கேட்டு சிறிதளவு அவலைச் சேர்த்து ஒரு துணியில் முடிந்து தந்தாள். அதை எடுத்துக் கொண்டு சுதாமா கண்ணனைக் காணுமாவலில் துவாரகைக்குக் கடுநடை நடந்தார். அங்கு கண்ணன் மாளிகையைக்கண்டு பேரின்பமடைந்து உள்ளே நுழையும் போதே கண்ணன் இவரைக் கண்டு கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் வரவேற்று, தனது கட்டிலில் வீற்றிருக்கச்செய்து பலபடியாலும் உபசரித்து நலம் விசாரித்தான். ருக்மணிப்பிராட்டி சாமரம் வீசினாள். கண்ணன் அவர் இளைப்புதீர கைகால்களைப் பிடித்துவிட்டு உணவருந்தச் செய்து, பழைய நினைவுகள் அலைமோத அவற்றையெல்லாம் அவருடன் நினைவுகூர்ந்து அளவளாவி மகிழ்ந்தான்.

"சுதாமரே! புலன்களை வென்றநீர் கிடைத்தது போதும் என்ற த்ருப்தியுடன் வாழ்வது தெரிகிறது. மதனியார் எனக்கு உண்ண ஏதாவது அன்புடன் அனுப்பியிருப்பாரே! அது எதுவாயினும் கூச்சப்படாமல்; கொடும். அன்புதான் எனக்குப்பெரிது. பொருளின் மதிப்பன்று" என்று கேட்டான். அந்தணர் தான் கொணர்ந்த அற்ப அவலைக் கண்ணனிடம் கொடுக்கக் கூசி பேசாமலிருக்க, உள்ளுவாருள்ளிற்றெல்லாம் உள்ளிருந்து அறியும் பரமாத்மா அவர் மறைத்துவைத்திருந்த அவல் முடிச்சை வலிய வாங்கி அதைப் பிரித்து, "இந்த அவல் கோகுலத்து வெண்ணெயைவிட எனக்கு மிகவும் பிரியமானதாயிற்றே" என்று ஒரு பிடி எடுத்து உண்டான். அப்போதே பெருமளவில் சுதாமருக்கு அநுக்ரஹித்து விட்டான். மேலே உண்ணமல் ருக்மணிப்பிராட்டி தடுத்து விட்டதாகப் புராணம் கூறுகிறது. சுதாமா கண்ணனைக் கண்டு

ஒருநாள்பொழுது அவனுடன் கழித்த மகிழ்ச்சியுடன் அவனை ஒன்றும் கேட்க மனம் வராமல், அவனை தரிசித்த மனநிறைவுடன் தமதூர் திரும்பினர் அங்கு தமதுஎளியகுடில் பெரியமாளிகையாக மாறியுள்ளதையும் தனதானியங்களால் நிறைந்திருப்பதையும் கண்டு கண்ணனுடைய அன்பையும் அருளையும் நினைந்துஉருகினர். தனம் பெற்றதனுல்மனம் மாருமல்முன்போல எளிய வாழ்க்கையே நடத்தி முடிவில் பேரின்ப நிலையயடைந்தார். இந்த வரலாறு ஸ்ரீபாகவதத்தில் தசமஸ்கந்தத்தில் பேசப்பட்டுள்ளது.

இப்படித்தன்னலமற்ற அன்புடன் கொண்டு சென்று அவலை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்தேனே நான்? என்று அம்மையார் கேட்கிருர்.

## 27 ஆயுதங்கள் ஈந்தேனே அகஸ்தியரைப் போலே?

அத்ரி அநசூயை (7-ம் வார்த்தையின் விளக்கம் காண்க) இவர்களைச்சேவித்து ஆசிபெற்ற ராமபிரான் தண்டகாரண்யம்'என்னும் வனத்தினுட் புகுந்து அங்கு வாழ்ந்த ரிஷிகளின் ஆசிரமங்களுக்குச் சென்று அம்மஹரிஷிகளைப் பூசித்து வணங்கினன். இப்படி சரபங்கர், சுதீக்ஷணர், அகஸ்தியர் முதலான மஹரிஷிகளின் ஆசிரமங்களுக்கு ராமன் விஜயம் செய்தான் மஹாதேஜஸ்வியான அகஸ்தியர் ராமனை எதிர்கொண்டழைந்து உபசரித்துப்பூசித்தார். ராமனும் அவரை அடிபணிந்து அவர் நலனை விசாரித்தான். அவர் ராமனின் அவதார ரஹஸியத்தை அறிந்தவராதலால் பின்னர் நடக்கப்போவதற்கெல்லாம் முன்னேற்பாடாகப் பல திவ்யாயுதங்களை ராமனிடம் கொடுத்தார், "புருஷஸிம்ஹமே! ரத்னங்கள் இழைக்கப்பட்டு ஸ்வர்ணமயமான இந்த திவ்ய வில்லைப்பார்! இது விஷ்ணுதேவனுடைய வில்; விச்வகர்மாவினல் நிருமிக்கப்பட்டது. சூரியனையொத்த தேஜஸ்ஸையுள்ள பாணங்கள் எப்போதும் குறையப்பெருத இந்த அம்பருத் தூணிகள் இரண்டும் எனக்கு தேவேந்த்ரனல் கொடுக்கப்பட்டவை. தங்கமயமான உரையுடன் கூடிய இக்கத்தியும் எனக்கு தேவேந்த்ரனல் தரப்பட்டதே. முன்பு மஹாவிஷ்ணு இவ்வில்லைக் கொண்டு கொடிய அசுரர்களை முடித்து தேவர்களின் துயர்தீர்த்தார். அந்த மேலான வில்லையும் அம்பருத்தூணிகளையும் சிறந்த கத்தியையும் உயர்ந்த பாணத்தையும் நீ எதிரிகளைக் கொல்லும் பொருட்டு வாங்கிக் கொள்வாயாக. உங்களுக்கு மங்களமுண்டாகுக" என்று சொல்லி உத்தமமான திவ்யாயுதங்களை ராமனிடம் கொடுத்தார். இப்படிக்

கொடுத்து அவர்களை ஆசீர்வதித்து கோதாவரிக்கரையில் பஞ்சவடி என்னுமிடத்தில் வசித்தல் நலமென்று கூறி அங்குசெல்லும் வழியையும் சொல்லி அனுப்பினார்.

பெருமாளுக்கு இவ்விதமான அநுகூலத்தை நான் செய்யவியலுமோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 28. அந்தரங்கம்புக்கேனோ ஸஞ்சயனைப்போலே?

ஸ்ரீராமாயணத்தில் தசரதனுக்கு சுமந்திரன் தேர் செலுத்துபவனாகவும் மந்திரியாகவும் அந்தரங்கம் பேசவல்லவனாகவுமிருந்தது போல மஹாபாரதத்தில் திருதிராஷ்டர மன்னனுக்கு ஸஞ்சயன் அந்தரங்கமந்திரியாகவும் தேரோட்டியாகவுமிருந்தவன். இருவரும் ஒரே குருவிடம் கல்விபயின்றவர்கள். பாரதயுத்தத்தின் போது யுத்த நிகழ்ச்சிகளையெல்லாம் வியாஸப்ரஸாதத்தால் கண்டு அரசனுக்கு அரண்மனையிலேயே சொன்னவனிவன். பாரதயுத்தாரம்பத்தில் த்ருத்ராஷ்ட்ரன் ஸஞ்சயனைக் கேட்கிறான்,

**தர்மக்ஷேத்ரே குருக்ஷேத்ரே ஸமவேதா யுயுத்ஸவ: |**

**மாமகா: பாண்டவாச்சைவ கிமகுர்வத ஸஞ்ஜய ॥**

'ஸஞ்சயனே! தர்மக்ஷேத்ரமான குருக்ஷேத்ரயுத்த பூமியில் போர் புரிய விரும்பிக் கூடியிருந்த என் பிள்ளைகளும் பாண்டவர்களும் என் செய்தனர்?''

ஸஞ்சயன் அங்கு நடந்தவைகளையும் க்ருஷ்ணன் அர்ஜுனனுக்கு பகவத்கீதையை உபதேசித்ததையும் சொல்லி,

**யத்ரயோகேச்வர: க்ருஷ்ணோ யத்ரபார்த்தோ தநுர்த்தர: |**

**தத்ரஸ்ரீர்விஜயோபூதி: த்ருவாநீதிர்மதிர்மம ॥**

என்றான். ''யோகஈச்வரனான க்ருஷ்ணனும் காண்டீபமேந்திய அர்ஜுனனும் எந்த பக்கத்திலுள்ளனரோ அங்கு தான் நீதி, வெற்றி, செல்வம்யாவும் இருக்கும்'' என்று நான் நிச்சயமாக நம்புகிறேன். கண்ணனை உண்மையாக அறிந்தவன் ஸஞ்சயன். ''பக்த்யா த்வநந்யயா சக்ய அஹமேவம்விதோऽர்ஜுந'' ... 

''பக்த்யா யாஸ்த்ராத ம்லத்மி ஜநார்த்தநம்' என்று இவன் மன்னனிடமே சொல்லுகிறான். யுத்தம் ஆரம்பிக்குமுன் இவனை த்ருத்ராஷ்ட்ரன் உபப்லாவ்யம் என்றவிடத்திலிருந்த பாண்டவர்களிடம் தூதனுப்பினான் [மஹாபாரதம்—உத்யோகபர்வம்)

அவன் அங்குசென்றபோது க்ருஷ்ணன், ஸத்யபாமை, அர்ஜுனன் த்ரௌபதி நால்வரும் ஒரு கட்டிலிலிருந்து அந்தரங்கமாகப் பேசிக் கொண்டிருந்தமையால் யாரையும் உள்ளேவர அநுமதிக்கவில்லை. ''க்ருஷ்ணனும் ஸ்ரீஸத்யபாமைப் பிராட்டியும் அர்ஜுனனும் த்ரௌபதியுமாகக் கால்மேல் காலேறிட்டுக் கொண்டிருக்க, ஸஞ்ஜயன் திருவாசலிலே வந்தானென்றறிவிக்க, க்ருஷ்ணனருளிச் செய்கிறான்: ''நம்முடைய இருப்பைக்கண்டால் உகப்பவனும் உகவாதார் மண்ணுண்ணும்படி நெஞ்சுளுக்க இவ்விருப்பைச் சொல்லவல்லானுமொருவன். அவனைப்புகுரவிடுங்கோள்'' என்ன, அவனும் புகுந்து சண்டு அப்படியே போய் துரியோதனனுக்கு, ''கெடுவாய்! அவர்களிருப்புக் கண்டேனுக்கு உன் காரியம் கெட்டதுகிடாய்' என்றானிறே (திருப்பாவை பாசுரம்27ன் 6000ப் படி வ்யாக்யானத்தில் காண்பது)

இப்படி சண்ணன், பாண்டவர்களுடைய அந்தரங்க நிலையை யும் புக்குக் காணவல்லேனோ? அத்தகுதி ஸஞ்சயனைப்போல எனக் குண்டோ? என்கிறார் அம்மையார்.

## 29. கர்மத்தால் பெற்றேனோ ஜனகரைப் போலே?

ஸீதாபிராட்டியின் தகப்பனாரான ஜனகமஹாராஜர் கர்ம யோகியரில் சிறந்தவர். கர்மயோகமாவது சாஸ்த்ரங்களில் அவரவர் வர்ணாச்ரம்ங்களுக்கேற்ப விதிக்கப்பட்ட தர்மங்களைப் பற்றற்று புலனடக்கத்துடன் பலனைதையும் எதிர்நோக்காமல், நான் செய்தேன் என்ற மமதையும் கலசாமல் பகவதாராதன மகாச் செய்கை, மஹாராஜராய் நாட்டையாண்டவரானாலும் ஜனகர் தமது கடமையைப் பற்றற்றவராக 'நான், எனது' என்ற எண்ணத்துக்கிடம் கொடாமல் செய்து வந்தார். இவர் பெருமையை மற்றவர்க்குக் காட்டுகைக்காக இவராசாரியரான யாக்ஞவல்க்யர் தமதாச்ரமத்தில் ஜனகர் இருந்தபோது மிதிலை தீப்பற்றி எறிவது போல ஒரு தோற்றத்தை உண்டுபண்ணினார். யாவரும் தங்கள் சொத்துக்களுக்கு என்ன தீங்கு வருகிறதோ வென்று அவற்றைக் காக்க ஓடினர். ஜனகர் மட்டும் எதையும் தனது என்று எண்ணாதவராகையால் இருந்தவிடத்திலேயே இருந்து விட்டார். கர்மயோகத்தைப் பற்றி ஸ்ரீ கீதையில் அர்ஜுனனுக்கு விளக்கம் தரும் கண்ணன் 'கர்மணைவஹி ஸம் ஸித்திம் ஆஸ்திதா ஜநகாதய:'' (3-20) என்றான். ஜனகர் போன்ற ராஜரிஷிகள் கர்மயோகத்தால் ஸித்தி பெற்றனரன்றோ? (ஸித்தி- பரமாத்ம ஸாக்ஷாத்காரம்).

இப்படி ஜனகரைப்போல உள்ளத்தூய்மையுடன் கர்மயோகத்தில் நிலைநின்று பேறுபெறவல்லேனோ என்று அம்மையார் கேட்கிறார்.

## 30 கடித்து அவனைக்கண்டேனோ திருமங்கையாரைப்போலே?

திருநெடுந்தாண்டகம் (திருமங்கையாழ்வார் அருளிச்செய்தது வ்யாக்யான அவதாரிகை; "ஆழ்வார் திருமங்கையாழ்வாராகிறார் *வென்றியே வேண்டி வீழ்பொருட்கிரங்கி வேற்கணார்கலவியே கருதி என்று ஸர்வேஸ்வரன் விபூதியடைய இவர்துடைக்குக்கீழே கிடக்கிறதோவென்று சங்கிக்க வேண்டும்படி அதிசபிதாஹங்காரராய், அதுக்கடியான தேஹாத்மாபிமானத்தையுடையராய் அத்தாலே, *சாந்தேந்து மென்முலையார் தடந்தோள் புணரின்ப வெள்ளத்தாழ்ந்தேன் (திருமொழி 6 3-1) என்கிறபடியே ஆத்ம விஷயமாதல் ஈஸ்வரவிஷயமாதல் ஞானம்பிறக்கைக்குயோக்யதையில்லாதபடி விஷயப்ரவணராய்ப் போந்தாரொருவர். ஸர்வேஸ்வரன் இவர்க்குண்டான விஷயாதி ப்ரஸக்தியைக் கண்டு (பகவத்விஷயம் தவிரமற்றவைகளில் அதிகமானமோஹம்)இவரை இதில் நின்றும் மீட்கும் விரகு தேடிப் பார்த்து விஷயப்ரவணரான இவரை சாஸ்த்ரத்தைக் காட்டி மீட்கவொண்ணாது, நம்மழகைக் காட்டி மீட்கவேணுமென்றுபார்த்து, இவர்க்கு விஷயங்களிலுண்டான ரஸிகத்வத்தையே பற்றாசாகக் கொண்டு தன்னழகைக் காட்டிக் கொடுக்கக்கண்டு, *வேம்பின்புழு வேம்பன்றியுண்ணாது அடியேன் நான்பின்னும் உன் சேவடியன்றி நயவேன் [திருமொழி 11-8-7] என்று ஈஸ்வர விஷயத்திலே யவகாஹித்தார்-மண்டினார்.

இப்படி உண்டான ப்ரேமம் ஸம்பந்தஜ்ஞான பூர்வகமாக வேணுமென்று பார்த்து ஸர்வார்த்த ப்ரகாசமான திருமந்த்ரத்தையும் ஸௌசீல்யாதி குணதிக்யத்தையும் திருமந்த்ரத்துக்கெல்லை நிலமான திருப்பதிகளையுங்காட்டிக் கொடுக்கக்கண்டு *வாடினேன் வாடி [1-1-1] தொடங்கி உகந்த நளினவிடமே ஆச்ரயணீயமும் போக்யமும் [பற்றத்தக்கது, போற்றுக்கு உபாயம், அநுபவிக்க இனிமையானது] என்று அநுபவித்தார்.

இனி இவர்க்குத் திருமந்த்ரத்தைக் காட்டிக் கொடுத்தபடி சொல்லுகிறது. இவர் குமுதவல்லியார்க்கு தினமும் திருமாலடியார்க்குததீயாராதனம் [அன்னமளித்தல்]செய்வதாகவாக்களித்து அதற்காகத் தம்மிடமுள்ள பொருளெல்லாம் செலவழிந்துபோய் பிறர்பொருளை அபகரித்தாவது அடியார் பசிபோக்கவேணும்

என்றறிலே வந்துவழிபறிக்கொள்ளேயிலே இறங்கினர். இவர்க்கருள் புரியக்காத்திருந்த எம்பெருமான் தானும் பிராட்டியுமாக புது மணத்தம்பதியாக ஸர்வாபரணங்களேயும் பூட்டிக்கொண்டு திரு மணங்கொல்லே என்னுமிடத்தில் இவர் கண்ணிலேபட, இவரும் அவர்களே நிறுத்திவாளேக்காட்டிமிரட்டி அவர்களணிந்திருந்த நகை களேயெல்லாம் கழற்றச் செய்தவளவிலே மணப்பிள்ளே காலிலே அணிந்திருந்த மோதிரம் கையால் வாங்க முடியாமல் போக அதைத்தம் வாய்வைத்து பல்லால்க் கடித்துக் கழற்றி எல்லா நகை களேயும் ஒரு மூட்டையாகக் கட்டி வைத்தார். அதை எடுத்துப் போக முற்பட்டபோது அதுபெயராமையாலே மணமகனுய் வந்தவன் மந்திரம் போட்டானென்று எண்ணி, ''நீ என்ன மந்திரம் பண்ணினுய்? அதை எனக்குச் சொல்'' என்று வாளேக் காட்டி மிரட்ட எம்பெருமானும் இவரது வலது திருச்செவியில் திருமந்திரத்தை உபதேசித்தருளினன். அவன் திருவடியைத் தம் பல்லால் தீண்டியதாலும் அவனுல் மந்த்ரோபதேசம் பண்ணப் பெற்றதாலும் அவன் யாரென்ற உண்மையைக் கண்டு ''நான் கண்டு கொண்டேன் நராயணு என்னும் நாமம்'' என்றுபலபாடல் களேப்பாடினர் திருமங்கை மன்னன் திருமங்கையாழ்வாரனர். ''வாள்வலியால் மந்திரங்கொள் மங்கையர்கோன்'' என்று இவர் போற்றப்படுகிருர்.

இப்படி கடித்து அவனே [பரமபுருஷனே] உள்ளபடி காணும் படி அவனருள் எனக்குக்கிட்டப் பெற்றேனே? என்கிருர் அம்மையார்.

31. **குடைமுதலானதானேனே அநந்தாழ்வான் போலே?**

இங்கு அநந்தாழ்வான் என்பது எம்பெருமான் சயனித்தருளும் படுக்கையான ஆதிசேஷனே; இவனேயே திருவநந்தாழ்வான் என்று போற்றுவது. சேஷவ்ருத்தியில் [ஆட்பட்டிருப்பதில்] தலேவரான இவர் பலவுருவங்களேக் கொண்டு எம்பெருமானுக்குப் பலபடி களால் அடிமை செய்வர். இவ்வடிமைகளேப் பொய்கையாழ்வார் தமது திருவந்தாதியில்

**சென்ருல் குடையாம் இருந்தால் சிங்காதனமாம்**
**நின்ருல் மாவடியாம் நீள்கடலுள்— என்றும்**
**புணேயாம் மணிவிளக்காம் பூம்பட்டாம் புல்கும்**
**அணேயாம் திருமாற்கு அரவு**

என்றும், ஆளவந்தார் தாமருளிய ஸ்தோத்ரரத்நத்தில் [39.40]

**திருக்கோளூரம்மாள் வார்த்தை—5**

**நயாஸஹாஸீநமநந்த போகிநி ப்ரக்ருஷ்டவிஜ்ஞாந பலைகதாமநி |**
**பணாமணிவ்ராத மயூகமண்டல ப்ரகாஶமாநோதர திவ்யதாமநி ॥**
**நிவாஸ ஶய்யாஸந பாதுகாம்ஶுகோபதாந வர்ஷாதப வாரணாதிபி: |**
**ஶரீரபேதைஸ்தவ ஶேஷதாங்கதைர் யதோசிதம் ஶேஷ இதீரிதே**
**ஜநை: ॥**

என்றும் வெளியிட்டருளினர் இப்பாசுரங்களில் திரண்ட பொருள். பெரியபிராட்டியாருடன் எம்பெருமானின் திருவநந்தாழ்வானின் திருமேனியில் எழுந்தருளியிருக்கிறான். இவ்வாதிசேஷன் மேலான ஞானத்திற்கும் சக்திக்கும் நிகரற்ற இருப்பிடம். தன் திருமுடியிலுள்ள மாணிக்கங்களினால் பேரொளிபரப்பி மாளிகைக்கு மணிவிளக்காயிருப்பவன், அவன் எம்பெருமானுக்கு வாழும் மாளிகையாகவும், கண்வளர்ந்தருளும் படுக்கையாகவும் அமரும் சிம்மாசனமாகவும், திருவடியிலணியும் மணிபாதுகங்களாகவும், இடையில் தரிக்கும் பட்டு பீதாம்பரமாகவும், மழை வெய்யில்களில் குடையாகவும் மற்றும் அவ்வக்காலங்களுக்குத் தக்கபடி வேண்டுருவங்கொண்டு தொண்டு புரிவதால் ஜனங்கள் அவனை **சேஷன்** எனப்போற்றுகிறார்கள்.

இப்படி வேண்டுருவங் கொண்டு எம்பெருமானுக்குப் பல அடிமைத் தொழில்களையும் அடியேன் செய்ய வல்லேனோ என்று தம் பரிப்பை வெளியிடுகிறார் அம்மையார் இவ்வார்த்தையில்.

## 32. கொண்டு திரிந்தேனோ திருவடியைப் போலே

திருவடி என்னும் பெயர் கருடாழ்வானுக்கும் (பெரிய திருவடி) ஹநுமானுக்கும் (சிறிய திருவடி) ஒக்கும். எம்பெருமானுக்கு வாஹனமாகப் பணிபுரிந்து அவன் திருவடிகளைத் தாங்கியபடியால் இவ்விருவருக்கும் திருவடி என்று பெயராயிற்று. அர்ச்சாஸ்தலங்களில் எம்பெருமானை தோளுக்கினியான் மற்றும் வாஹனங்களில் புறப்பாடாக எழுந்தருளப் பண்ணுபவரை ஸ்ரீபாதம்தாங்குவோர் என்று மதிப்புடன் அழைப்பர்கள். பெரிய திருவடியான கருடனை ஆளவந்தார் ஸ்தோத்ரரத்னத்தில் போற்றும்படி (41) காண்க.

**தாஸஸ்ஸகா வாஹநமாஸநம் த்வஜ: யஸ்தே விதாநம் வ்யஜநம்**
**த்ரயீமய. |**
**உபஸ்திதம் தேந புரோ கருத்மதா த்வங்க்ரிஸம்மர்த கிணாங்க**
**சோபிநா ।**

வேதங்களை அவயவங்களாகக் கொண்ட கருடாழ்வான் உமக்கு தாஸனுகவும் நண்பனுகவும், வாகனமாகவும், சிம்மாஸநமாகவும், கொடியாகவும், (தமது சிறகினால்) வெயில்தடுக்கும் மேலாப்பாகவும், [சிறகையசைப்பதால்] சாமரமாகவும் பணிபுரிகிறுர். ஸதா உம்மை தோள்களில் ஏற்றித்திரிவதால் உமது திருவடிகள் நெருக்கின தழும்பு அவருக்கு அணியாக-பூஷணமாக அமைந்துள்ளது. உமது நியமனத்துக்கு எப்போதும் காத்து முன்னே நிற்கிறுர்-இது இந்த சுலோகத்தின் திரண்ட பொருள். எம்பெருமானடியாரை வரிசைப்படுத்துவதில் சாதரணமாக "திருவடி திருவநந்தாழ்வான் முதலானோர்" என்று பெரியோர்தொடங்குவர் *வெள்ளைச்சுரிசங் கொடாழியேந்தி தாமரைக்கண்ணன் என்னெஞ்சினூடே புள்ளைக் கடாகின்றவாற்றைக் காணீர் (திருவாய் 7-3-1) என்று ஆழ்வார் எம்பெருமான் தமது நெஞ்சினுள் கருடன் மீதேறி அவனை நடத்துவதைக்காணீர்! என்று நம்மையழைக்கிறுர். *தெய்வப்புள்ளேறிவருவான் திருச்சித்திர கூடத்துள்ளானே [திருமொழி 3-3-6] என்பது திருமங்கையாழ்வார் பாசுரம். *செழும் பறவை தானேறித்திரிவான் தன் தாளிணை என் தலைமேலே [திருவாய் 10-6-7] என்ற பாசுரமும் காண்க. இப்படி மற்ற ஆழ்வார்களின் அநுபவமும்காணலாம். (புள் = பறவை—கருடன்]. *தானேறித்திரிவான் என்ற பாசுரத்தை இவ்வார்த்தை நினைப்பூட்டுகிறது.

இனி ராமாவதாரததில் மட்டும் பொருந்துவது அநுமானைத் திருவடி என்றழைப்பது. முதல் முதல் அநுமான் ராமலக்ஷ்மணர்களைக்கண்டு பேசி. அவர்களழகிலும் ஸௌகுமார்யத்திலும் வீரத்திலும் ஈடுபட்டு அவர்களை சுக்ரீவமஹாராஜரிடம் அழைத்து செல்லும் போது அவர்களை நடக்க விடாமல் தனது தோளில் ஏற்றிச்செல்லுகிறுன்; இவ்வடிமை செய்வதில் இன்பம் காண்கிறுன். "தாஸோஹம் கோஸலேந்த்ரஸ்ய" என்று தன்னை ராமதாஸனுக அறிமுகம் செய்து கொள்வதில் பெருமைப்படுகிறுன். இலங்கையில் அரக்கருடன் போர்புரியும் போது ராமன் தரையிலிருந்து பொருவது பொருத்தமன்று என்று தான் அவனுக்குத் தேராயிருந்து தோள்மேல் சுமந்து திரிந்தான்.

இப்படி எம்பெருமானைப் பரிவுடன் தோள்மேல் சுமந்து கொண்டு திரிந்தேனே? என்று கேட்கிறுர் அம்மையார்

## 33. அவளைப்புவிடாய் தீர்த்தேனே நம்பாடுவான் போலே?

ஸ்ரீவராஹநாயனுர் பூமிப்பிராட்டிக்கு தன்னைப்பாடி ஏத்துவதன் பெருமையையும் பாடுவார் பெறும் பலனையும் சொல்வது

வராஹபுராணத்தில் கைசிகமாஹாத்ம்யமாகப் பேசப்படுகிறது. வராஹப்பெருமாள் சொல்லுகிறார்.

**ஜகாரேது விஶாலாக்ஷி ஜாநதோ வாப்யஜாநத |**
**யோமே ப்ரகாயதே கேயம் மம பக்த்யா வ்யவஸ்தித: ॥**

ஹேவிசாலக்ஷீ! பாடவல்லாளொருவன் ராவிழித்தலான வ்ரதம நுட்டித்து சிற்றஞ்சிறுகாலையில் வந்து நாம் கேட்டாலும் ஜகத் ரக்ஷணசிந்தையில் யோகு செய்திருந்தாலும் நம் குணங்களை யிட்டுப் புனையப்பட்ட பாடல்களை ஒரு பலனையும் எதிர்நோக்காமல் நம்பக்கல்பக்த்யதிசயத்தோடே நமக்காகப் பாடுகிறான் என்று தொடங்கி அவன் இப்படிப்பாடுவதன் பலனைய் ஆயிரமாயிர மாண்டுகள் ஸ்வர்க்கத்தில் போக மநுநுபவிப்பதாக மேலே சொல்லி, இப்படிப்பாடவல்லாளொரு பக்தனுடைய சரிதத்தை அருளிச்செய்கிறார்

தக்ஷிணதேசத்தில் க்ஷீரநதிக்கரையில் உள்ள ஸித்தாச்ர மத்துக்கு ஒரு சண்டாளன் தூரத்திலிருந்து பெருமானைதினமும் காலையில் பக்தியுடன் 10 வருட காலம் பாடிவந்தான். இவனை வராஹப்பிரான் **மமகாயக** [நம்பாடுவான்] என்று சொல்வதால் அதுவே இவன் பெயராயிற்று. அவன் ஒரு கார்த்திகை மாதம் சுக்லபக்ஷத்வாதசியன்று இரவின் பின்பகுதியில் மூன்யாமங்கள் கண்விழித்திருந்து பெருமானைப் பாடுவானைய்க் கிளம்பி வரும் போது வழியில் ஒரு பிரம்மரக்ஷஸ் அவனை உணவாக உட்கொள்ளும் பொருட்டு பிடித்துக் கொண்டது. நம்பாடுவான் அந்த ரக்ஷஸ்ஸிடம் தான் சென்று அன்று பாடும் வ்ரதத்தை முடித்துப் மீண்டும் வருவதாகச் சொல்லி போய் வர அநுமதிகேட்டான். இவன் பேச்சை அது நம்பும் பொருட்டு தான் வராவிடில் பொன்னைக் களவாடல் போன்ற பலவித பாபங்கள் செய்வார் பெறும்பலனைப் பெறுவதாகச் சபதம் செய்தான். கடைசியில் வாசுதேவனை நாராயணனையும் மற்ற தெய்வங்களோடு ஒக்க நினைப்பவன், வாஸுதேவனைவிட்டு அத்தெய்வங்களைத் தொழுபவன் எந்த கோரமான பாபபலனையநுபவிப்பானோ அப்பாவம் நான் மீளாவிடில் என்னைப்பீடிக்கட்டும் என்று சபதமிட இவனுடைய வைஷ்ணவத்வத்தில் நம்பிக்கைவைத்து இவனைப்போகவிட்டது.

இவனும் அக்குறுங்குடிக்குச்சென்று எம்பெருமான் புகழ்பாடி விட்டுத்திரும்ப வந்து அந்தரக்ஷஸ்ஸிடம் "நான் சொன்னபடி வந்தேன். என் உடலை நீ புஜிப்பாய்" என்று சொன்னான்

அந்த ரக்ஷஸ் முன் பிறவியில் சோமசர்மா என்ற அந்தணன்; அவன் செய்த ஒரு யாகத்தில் மாபெரும் பாபமுண்டாய் அவன் யாகம் முடியுமுன்னமே இறந்ததால் ரக்ஷஸ்ஸாகப் பிறந்தான். 'இவனே நம்மை இப்பிறவியிலிருந்து விடுவிக்க வல்லன்' என்று அந்த ரக்ஷஸ் 'நீ இன்றிரவு பாடிய பாட்டின் பலனை நமக்குத்தந்து உயிருடன் தப்பிப்போ'' என்று கேட்டது. நம் பாடுவான் அதற்கு ஒப்பவில்லை. பின்னர் ரக்ஷஸ்கேட்டபடி பாதி பலனையோ, ஒரு யாம பலனையோ தர ஒப்பவில்லை உடனே அந்த ரக்ஷஸ் இவனைச்சரணம் பற்றி ஒரு பாட்டின் பலனையாவது தந்து தன்னை இந்த ராக்ஷஸஜன்மத்திலிருந்து விடுவிக்க வேணுமென்று வேண்ட, நம்பாடுவானும், ''இன்றிரவு கைசிகமென்று ஒரு பண்ணைப்பாடினேன். அந்த கீதபலத்தைப்பெற்று நீ இந்த ஜன்மத்தினின்றும் விடுபட்டுப் பின்னர் மோக்ஷமடைவாய்'' என்று அபயப்ரதானம் பண்ணினன். அப்படி வரம்பெற்ற ரக்ஷஸ்ஸும் அந்த ராக்ஷஸ சரீரத்தை விட்டு பின்னர் நற்குடியில் பிறந்து பகவத்பஜனம் பண்ணி வீடு பெற்றான்

இப்படி நம்பாடுவானைப் போலே பாடி அக்கீதபலத்தால் ஒருவனுக்கு ராக்ஷஸஜன்மத்தின் இளைப்பு விடாய் தீர்த்து மீட்டேனோ? என்று கேட்கிறார் அம்மையார்

## 34. இடைகழியில் கண்டேனோ முதலாழ்வார்களைப் போலே?

ஐப்பசியிலோணம் அவிட்டம் சதயமிவை ஒப்பிலவாநாள்களாம் ஏன்? பொய்கையார், பூதத்தார், பேயாழ்வார் மூவரும் இந்த நாட்களில் முறையே வந்து பிறந்தமையால்; மற்றுள்ள ஆழ்வார்களுக்கு முன்பே வந்துதித்து நல்தமிழால் நாட்டையுய்த்த பெருமையால் இவர்கள் மூவரும் முதலாழ்வார்கள் எனப் போற்றப்பெறுகிறார்கள். இவர்கள் நம்போல தாய்தந்தையர்க்குப் பிறவாமல் பிராட்டிபோல பூவில் பிறந்தவர்கள் இறைவனருளால் ஞானம் மலரப்பெற்று இறையநுபவத்தில் மூழ்கி ஊரூராய்த்திரிந்து வந்தனர்- இறைவனருள் இவர்களைத் திருக்கோவலூரில் ஒரு நள்ளிரவில் சேர்த்து வைத்தது.

இடியும் மின்னலும் மழையுமாயிருந்த அவ்விரவில் பொய்கையார் வந்து தங்க இடந்தேடி மிருகண்டுமுனிவரின் ஆச்ரம இடைகழியில் (வாசலையும் உள்ளையும் சேர்க்கும் இடை—ரேழி) வந்து படுத்தார். பின்னர் பூதத்தார் அங்கு வந்து சேர்ந்தார் இருவர் படுக்க இடமில்லை; இருவரும் உட்கார்ந்திருக்க, பேயாரும் அவ்

விடத்தே வந்து சேர்ந்தார். இடநெருக்கடியால் மூவரும் நின்றனர். இவர்களைச் சேர்த்துவைத்த பூங்கோவலூரர் ஆயனும் அங்கு வந்து இவர்களுடன் நெருக்குண்டு மகிழ்ந்தான். இருட்டில் யார் நெருக்குவது என்று காண *வையம் தகளியா வார்கடலே நெய்யாக வெய்யகதிரோன் விளக்காக என்று தமது தமிழ்ப் பாடல் மாலையால் ஒரு விளக்கேற்றினார் பொய்கையார். *அன்பே தகளியா, ஆர்வமே நெய்யாக இன்புருகு சிந்தை இடுதிரியா— என்று ஞானச்சுடர் விளக்கொன்றை ஏற்றினர் பூதத்தார். இவ் வொளியில் *திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன்— பொன்னாழியும் புரிசங்கமும் கைக்கண்டேன் என்று தாம் கண்டமையைப் பாடினார். கண்டது பேயார் மட்டுமல்ல; மூவருமே தான். கண்டு மூவரும் தலைக்கு ஒரு நூறுபாசுரம் அந்தாதியாக அவன் புகழ்பாடினர். இவை முறையே முதல், இரண்டாம், மூன்றும் திருவந்தாதிகள் ஆயின பொய்கையார். இந்த வரலாற்றை (முதல் திரு 86)

**நீயும் திருமகளும் நின்றாயால் குன்றெடுத்துப்**
**பாயும் பனிமறைத்த பண்பாளா!—வாசல்**
**கடைகழியா உள்புகாக் காமர் பூங்கோவல்**
**இடைகழியே பற்றி இனி**

என்று ஒருபாடலில் பொறித்து வைத்தருளினார். குன்றெடுத்து மழையை ஆச்ரிதர்மேல் விழாமல் மறைத்தகுணவாளனே! விருப்பிய அழகு மிக்க திருக்கோவலூரில் (நடு இடத்தில் வாசலுக்கு வெளியே போகாமலும், வீட்டின் உள்ளே புகாமலும் மூன்று ஆழ்வார்களைப் பெற்ற இடமானது பற்றி ஒருவிடமான இடைகழியையே விரும்பிப் பற்றி பிராட்டியும் நீயுமாக (நாங்கள் காணும்படிக்காட்டி நின்றருளியது என்ன ஆச்சரியம்!

இப்படி முதலாழ்வார்கள் கண்டாற்போல நான் காணும்படி இறைவனருள் பெற்றதுண்டோ? என்கிறார் அம்மையார்.

## 35. இருமன்னர் (ரைப்) பெற்றேனோ வால்மீகரைப்போலே?

ஸ்ரீராமபிரான் அயோத்யையில் முடிசூடி வெகுகாலம் ராஜ்யத்தை ஆண்டான். இடையே பிராட்டி கருவுற்றிருந்த போது; மக்களில் ஒரு வண்ணான் பிராட்டி இலங்கைச் சிறையிலிருந்தும் அவளை அழைத்து வந்து பட்ட மஹிஷியாக்கியதைக் குறை கூறிய அபவாதம் செவியில்பட்டு அவளைத் துறக்கத்

துணிந்தான். பிராட்டி வனத்தில் சில நாட்கள் இருக்க ஆசைப் பட்டதை சாக்காக வைத்து இளையபெருமாளை அவளைக் காட்டுக் கழைத்துப்போய் அங்கு விட்டு வரும்படி சொன்னான். இலக்குவனும் அரசனாணையை மீறமாட்டாமல் அவளைக் காட்டுக் கழைத்துப்போய் வால்மீகி முனிவரின் ஆசிரமத்துக்கருகில் ராஜாஜ்ஞையைத் தெரிவித்து. பிராட்டியை அங்குவிட்டு நகரம் சென்றான்.

இப்படி விடப்பட்ட மிதிலைச்செல்வியை வால்மீகி முனிவர் கண்டு தமது ஆச்ரமத்துக்கு அழைத்துப்போய் ரக்ஷித்துவைத் திருக்கையில் பிராட்டி இரட்டையாக இரண்டு ஆண்மக்களைப் பெற்றாள் *மிதிலைச் செல்வி உலகுய்யத்திருவயிறு வாய்த்த மக்கள் (பெருமாள் திரு 10-8) என்று இவ்விரு குழந்தைகளை குலசேகராழ்வார் குறிப்பிடுகிறார். இவர்களை தர்ப்பத்தின் அடி பாகத்தால் ஒரு பிள்ளையையும் நுனிபாகத்தால் ஒரு பிள்ளையை யும் ரக்ஷையிட்டார். தர்ப்பத்தின் அடி பாகம்லவம், நுனி குசம். இதனால் பிள்ளைகளில் ஒருவனை லவன் என்றும் மற்றவனை குசன் என்றும் நாமகரணம் செய்து வால்மீகி முனிவர் வளர்ப்புத் தந்தையாகவும குருவுாகவும் அமைந்து அரசர்க்கு வேண்டிய எல்லா வித்யைகளையும் கற்பித்து, தாம்பாடிய ராமாணகதை யையும் அவர்களுக்குக் கற்பித்தார் இப்படி *வெங்கதிரோன் குலத்துக்கோர் விளக்காய்த் தோன்றி விண்முழுதும் உயக் கொண்ட வீரனின் புத்திரர்களை அத்தந்தைக்கு ஈடான பிள்ளை களாய் வால்மீகிமுனிவர் வளர்த்தார். இதுவே இருமன்னரைப் பெற்றேனோ? என்ற வாக்யத்தின் கருத்து.

இப்படி வால்மீகிமுனிர்போல பெருமாளுக் தஸேவை செய்யும் பாக்யம் எனக்குக் கிட்டிற்றோ? என்கிறார் அம்மையார்.

## 36. இருமாலையீந்தேனோ தொண்டரடிப்பொடியார் போலே

முன்பொருகால் சோழநாட்டில் திருமண்டங்குடி என்னும் தலத்தில் விப்ரநாராயணர் என்று ஒரு அந்தணர்வாழ்ந்திருந்தார். அவர் திருவரங்கத்தைச் சென்று சேர்ந்து அங்கு அரவணைமேல் பள்ளிகொண்டுள்ள முகில்வண்ணனுக்குத் தொண்டு செய்யக்கதிரு முன்பு பட்டர்பிரான் வடபெருங்கோயிலுடையானுக்குப் பூமாலை கட்டி ஸமர்ப்பித்து வந்தாற்போல் நாமும் அரங்கனுக்குச் செய்ய நிச்சயித்தார் அப்படியே ஒரு நந்தவனமமைத்து பூச்செடி, கொடி, மரங்கள் வளர்த்து அழகிய மணம்மிக்க மலர்களைக்

கொண்டு மாலைகட்டி பேரன்புடன் திருவரங்கனுக்கு ஸமர்ப்பித்து வந்தார். 'இரு' என்ற அடைமொழிக்கு பெருமை பொருந்திய என்றும் 'இரண்டு' என்றும் இரண்டு பொருள்கள் உண்டு *மிக்க சீர்த்தொண்டரிட்ட பூந்துளபம் என்கிறபடி தன்னலங்கருதாது அன்புடன் எம்பெருமானுக்கென்றே கட்டி ஸமர்ப்பிக்கப்பட்ட மாலைகளாகையால் இருமாலை [பெருமையுற்றவை] என்னத் தட்டில்லை பூக்காரர் தம்மைத் தொண்டர் அடிப்பொடி அன்பர் தாள் தூளி என்று அடியார்க்காட்பட்டவராக்கி எம்பெருமானுக்கு மிகவும் ப்ரியமானவர் ஆனார்.

பாமாலை, பூமாலை இரண்டும் எம்பெருமானுக்கு மிகவும் ஏற்புடையவையே. அரங்கனுக்கென்றே வேறு அர்ச்சாவதார எம்பெருமானையும்கூடப்பாடாமல் பாடப்பட்ட பாசுரங்களாலான இரண்டு பாமாலைகள் திருப்பள்ளியெழுச்சி திருமாலை என்பவை இவ்வாழ்வாரின் அருளிச் செயல்கள். திருமாலை அறியாதான் திருமாலை அடையாதான் என்பர் [திருமாலை—இப்பெயருடை ப்ரபந்தம்; திருமாலை-எம்பெருமானை] இவர் அரங்கனுக்கு இரண்டு பாமாலைகளைச்சூட்டினார். இதை இருமாலை என்னலாம்

அல்லது பூமாலையும் பாமாலையுமான இரண்டு மாலைகளையும் தொண்டரடிப்பொடியார் போல் நான் ரங்கநாதனுக்குச் சூட்டினேனோ என்று கேட்பதாகவும் கொள்ளலாம்.

### 37 அவனுரைக்கப்பெற்றேனோ திருக்கச்சியார் போலே?

பூவிருந்தவல்லி [பூந்தமல்லி]யில் வைச்யகுலத்தில் பிறந்தவர் கஜேந்த்ர தாஸர் என்பவர். இவருடைய தகப்பனார் ஒரு பண முடிப்பை இவரிடம் கொடுத்து "இதை முதலாகவைத்து நம் குலமுறைப்படி வ்யாபாரம் பண்ணிப் பெருக்கு" என்றார் இவர் அதை பகவத் பாகவத கைங்கர்யங்களில் செலவிட்டுவிட்டார். ஒன்றிரண்டு ஆண்டுகள் கழித்து தகப்பனார் அந்த மூலதனத்தை எந்த அளவுக்குப் பெருக்கியுள்ளாய்? என்று கேட்டபோது "கலங்காப்பெருநகரில் சேமித்துள்ளேன்" என்று கூற, தந்தை கோபிக்கவே இவர் வீட்டைவிட்டு வெளியேறி ஸ்ரீரங்கம் சென்று ஆளவந்தார் திருவடிகளிலாச்ரயித்து சிறிது காலம் ஆசார்ய ஸேவையில் ஈடுபட்டிருந்து, பிறகு திருக்கச்சி மாநகர் சேர்ந்து பேரருளாளனுக்கு திருவாலவட்டம் ஸமர்ப்பிக்கும் (விசிறிகொண்டு வீசுவது) கைங்கர்யத்தில் ஆழ்ந்திருந்தார். ஏகாந்தமாயிருக்கும்

சமயங்களில் பேரருளாளன் அர்ச்சாஸமாதியைக் கடந்து இவருடன் வார்த்தையாடி மகிழ்வான்

இவர் காஞ்சீபுரத்தில் வஸித்தபடியால் ஸ்ரீ காஞ்சீபூர்ணர்—திருக்கச்சிநம்பி என்று இவருக்குப் பெயராயிற்று குணபூர்த்தியை யிட்டு நம்பி எனப் பெறுவது. இவர் கச்சியில் தேவப்பிரானுடைய கைங்கர்யத்தில் ஈடுபட்டிருந்தபோது இளையாழ்வார் (ஸ்ரீராமாநுஜரின் இளமைப் பெயர்) இவருடைய ஞானபூர்த்திகளால் ஈர்க்கப்பட்டு இவரிடம் சிஷ்யராக விரும்பினர். அவர் வாழ்க்கையில் சில நிகழ்ச்சிகளால்கலக்க முற்றிருந்தார். திருக்கச்சி நம்பி ''வைச்யகுலத்தில் பிறந்த அடியேன் அந்தணரான உம்மை சிஷ்யனாக ஏற்க முடியாது'' என்று தடுத்துவிட்டார். இதனால் மேலும் கலக்கமுற்ற இளையாழ்வார், ''அடியேன் மனதில் சில நினைவுகள் உள்ளன இவை சரிதானா என்று பெருமாளிடம் கேட்டுச் சொல்லவேணும்'' என்று இவரைப் ப்ரார்த்திக்க; அன்றிரவு நம்பி இவ்விஷயத்தை பெருமாளிடம் விண்ணப்பித்தார். பெருமாளும் உகந்து ''நாம் ஆறுவார்த்தைகள் உரைப்போம். இவையே நம்மிளையாழ்வார் நினைவும்; இதை அவரிடம் சொல்லும்'' என்று ஆறு வார்த்தைகளைச் சொன்னர் அவையாவன: 1) நாமே பரம் பொருள் 2) ஜீவபரபேதமே உண்மை 3) ப்ரபத்தியே பேற்றுக்கு மேலான உபாயம் 4) இவ்வுபாயத்தைப்பற்றியவனுக்கு சரீரமுடிவில் மோக்ஷம் ஸித்தம் 5) இவனுக்கு அந்திம்ஸ்ருதியான நினைவு வேண்டாம் 6) பூர்ணாசாரியாரை—பெரியநம்பியை ஆச்ரயிப்பது என்பவை இவற்றைமறுநாள் நம்பிஇளையாழ்வாரிடம் தெரிவித்தபோது 'இவையே அடியேன் நினைவும்; க்ருதார்த்தனானேன் என்று தண்டனிட்டார்.

இப்படி பெருமாளால் வார்த்தையுரைக்கப் பெற்றேனோ திருக்கச்சி நம்பியைப்போலே? இந்த பாக்யம் அடியாளுக் குண்டோ? என்று கேட்கிறார்.

## 38. அவன்மேனி ஆனேனோ திருப்பாணரைப் போலே?

திருப்பாணர் ஸ்ரீரங்கத்தையடுத்த உறையூரில் ஒரு நெல்வயலில் அயோநிஜராய் அவதரித்து பாணர்குலத்தவன் ஒருவனால்வளர்க்கப் பட்டவர். தமது வளர்குல மரியாதைக்கேற்ப இவர் கையில் வீணைகொண்டு காவிரிக்கரையில் நின்று அரங்கனை மனமுருகிப் பாடித்துதித்து வந்தார். இவர் பெருமையை நாட்டுக்குக்காட்ட

**திருக்கோளூரம்மாள் வார்த்தை-6**

**வேண்டி பெரியபெருமாள் தமக்கு இனியரான லோக சாரங்கமுனி** என்றும் ப்ராஹ்மணோத்தமரை நியமித்து இவரை அவரது தோள் களில் எழுந்தருளப் பண்ணிவரும்படி செய்தார். பாணர் இதற்கு இசையாவிடினும் அரங்கன் கட்டளையென்று லோகசாரங்கர் பலவந்தமாக அவரைத்தமது தோளில் எழுந்தருளப்பண்ண அவரும் பகவத்பாகவத ஆஜ்ஞை என்று செயலற்று இருந்து விட்டார். கோயிலுக்குள் புகும்போது அரங்கன் அவர் கண் முன்னே வந்து தன்னைக்காட்டக்கண்டு திருவடி முதல் திருமுடி வரை அவயவசோபையை அநுபவித்து அவ்வநுபவத்துக்குப் போக்கு வீடாக "அமலனாதிபிரான் அடியார்க்கென்னை ஆட் படுத்த விமலன்" என்று தொடங்கி ஒன்பது பாசுரங்கள்பாடி உள்ளே அரங்கன் திருமுன்பை யடைந்ததும் நேரே ஸேவித்து மகிழ்ச்சி பொங்க *கொண்டல் வண்ணனைக் கோவலனாய் வெண்ணெயுண்டவாயன் - என்னமுதினைக்கண்ட கண்கள் மற்றொன்றினைக் காணாவே என்று பாடிக்கொண்டே அரங்கன் திருமேனியுள் மறைந்து விட்டார்.

இப்படி அரங்கனின் திவ்யக்ருபைக்குக் கொள்கலமாய் அவனுள் புக்கவல்லேனோ அடியேன்? என்று கேட்கிறார் அம்மையார்

**39. அனுப்பிவையுமென்றேனோ வசிஷ்டரைப்போலே?**

விச்வாமித்ர மஹரிஷி தசரதமன்னவனிடம் வந்து தனது யாகத்தைக் காத்தற்பொருட்டு ராமபிரானைத் தன்னுடன் அனுப்பும்படி கேட்டார். (20-ம் வார்த்தையில் விளக்கம் காண்க) உயிரினும்தனக்குஇனியனான பிள்ளையைசிலநாட்களுக்குக்கூட்பிரிய மாட்டாமையாலும் அரக்கரால் பிள்ளைக்கு என்ன தீங்கு வருமோ என்ற பயத்தினாலும் தசரதன் ராமனை அனுப்ப இசையவில்லை விச்வாமித்ரர் பெருங்கோபங் கொண்டு "வாழ்ந்தே போம் நீரே!" என்று சொல்லி அரசவையை விட்டகல முற்பட்டார். அப்போது குலகுருவான வசிஷ்டர் பின்வரப் போவதை அறிந்தவராதலால் ராமனுக்குப்பல நன்மைகள் (அஸ்த்ரப்பயிற்சி திருமணம் முதலியன) விச்வாமித்ரர் மூலம் ஏற்படவிருப்பதையறிந்து மன்னனிடம் "நீ ராமனை லக்ஷ்மணனுடன் சேர்த்து இருவராக முனிவருடன் அனுப்பிவை. குழந்தை களுக்கு ஒரு தீங்கும் வராமல் முனிவர்பார்த்துக் கொள்ளக்கூடிய தவவலியுள்ளவர். இதனால் பலநன்மைகள் விளையும்" என்றுச் சொல்லிராமனையும் இலக்குவனையும் விச்வாமித்ரருடன் அனுப்பி வைக்கும்படி பண்ணினார்.

இப்படி பெருமாளுக்கு நன்மையை நினைத்து தகப்பனிடம் பிள்ளையை அனுப்பி வைக்கச் சொன்னேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 40. அடிவாங்கினேனோ கொங்கிற் பிராட்டியைப்போலே?

''அடிவாங்குதல்'' என்பது இங்கு ஆசாரியனின் திருவடி நிலைகளை (ஸ்ரீபாதுகங்களை) வேண்டிப்பெறுதலைக் குறிக்கிறது. கொங்கு பிராட்டி வரலாறு ஆறாயிரப்படி குருபரம்பராப்ரபாவத்தில் காண்கிறது. இவள் இயற்பெயர் சுமதி என்பது. கொங்கு நாட்டில்கொள்ளைக்களம்என்னும்ஊரைச்சேர்ந்தவளிவள் இவளும் இவள் புருஷனும் தமது நாட்டில் கொடும்பஞ்சம் தலையெடுத்த போது ஸ்ரீரங்கத்தில் வந்து குடியிருந்தனர். அப்போது எம்பெருமானார் திருவடிகளில் அகளங்கன் போன்ற ப்ரபுக்களும், ஆழ்வான் போன்ற கல்வியிற்சிறந்த அறிவாளர்களும்அடிபணிவது கண்டு அவர் பெருமையின் அடிப்படையைக் கேட்டறிந்து தானும் ஆச்ரயித்து உடையவருளுக்கிலக்கானாள். பின்னர் தம் நாடு முன் போல்மழைபெற்று சுபிக்ஷமானபோது திரும்பவும் அங்கு செல்லு முன்னர் எம்பெருமானாரை ஸேவித்து மீண்டும் த்வயத்தை அருளப் பெற்று, தமக்குத் திருவாராதனமாக உடையவரின் பாதுகங்களைப் பெற்றுச் சென்றாள். இவளுக்கு உடையவரிட்ட தாஸ்யநாமம் கொங்கு பிராட்டி என்பது (கொங்கில்பிராட்டி எனவுமாம்)

பின்னர் பல ஆண்டுகள் செல்ல சோழவரசன் ஹிம்ஸையால் உடையவர் மேல் நாடு எழுந்தருளியபோது இப்பிராட்டியின் ஊருக்குச் செல்ல நேர்ந்தது. அப்போது உடையவருக்கும். முதலிகளுக்கும் ஸத்காரம் பண்ண விரும்பி; தானும் எம்பெருமானார் திருவடி ஸம்பததமுடையவள், ஸத்காரயோக்யதையுண்டு என்பதை அப்பாதுகங்களைக் காட்டி நிரூபித்து ஸ்வாமியையும் முதலிகளையும் நன்கு பூசித்து உளங்குளிரப் பண்ணினாள்.

இப்படி எம்பெருமானாரால் திருவடி நிலைகளையருளப் பெறும் பாக்கியம் எனக்குண்டோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 41. மண்பூவை யிட்டேனோ குரவநம்பியைப்போலே?

திருமலை திருப்பதிக்கருகில் குரவபுரம் என்றொரு ஊரில் பீமன் என்று குலால (குயவர்) குலத்தைச்சேர்ந்த அன்பரொருவர் திருவேங்கடமுடையானிடம் அதிமாத்ரப்ராவண்யமுடையராய் வாழ்ந்து வந்தார். அவர் மண்ணினால் திருவேங்கடமுடையான்

திருவுருவைப் பண்ணி வைத்துக் கொண்டு தமது அன்றாடப்பணி கள் முடிந்த உடன் கையிலுள்ள மண்ணினால் புஷ்பங்களைச்செய்து அம்மண்பூக்களை தமது அர்ச்சையான திருவேங்கடவன் திருப் பாதங்களில் பேரன்புடன் இட்டு அர்ச்சிப்பர் இவரிடும் மண் பூவை நமதாசாரியர்கள் ''பணிப்பூ'' என்றழைக்கின்றனர். இவர் திருவேங்கடவனிடம் தன்னலமற்ற தூய அன்புடையவராதலால் ஸம்ப்ரதாயத்தில் இவருக்குக் குறும்பறுத்த நம்பி என்று திருநாம மாயிற்று. குரவநம்பி என்று ஊரையிட்டு வந்த பெயராம். இவருக்கும் வேங்கடவனுக்குமிடையே இருந்த மட்டற்ற அன்பு இவ்விருவர் மட்டுமே அறிந்ததாய் ரஹஸியமாயிருந்தது இவர் பெருமையை உலகுக்கு ப்ரகாசப்படுத்த விரும்பினான் வேங்கடவன். இவர் ஏகாந்தமாக இட்ட மண்பூக்கள் திருமலையில் தமக்கு மிக்க அன்பனான ஒருவன்-தொண்டைமன்னவன்-இட்ட பொன்பூக்கள் மேல் விளங்கும்படி காட்டினான். அதுகண்ட மன்னவன் பெருமாளை மிகவும் வேண்டி அவை குரவையில் வாழும் குலால அன்பரிட்டவையென்றறிந்து அவ்வூர் சென்று அவரை தரிசித்துப் பூசித்தான். **திருமொழி 5-8-9-** துளங்கு நீள்முடி யரசர்தம் குரிசில் தொண்டை மன்னவன் திண்திறலொருவற்கு - **மற்றவற்களுளிச் செய்தவாறு** -(வ்யா:)-குறும்பறுத்த நம்பியோடே சேர்த்துவிட்ட படியைச் சொல்லுகிறது; ''பதிவ்ரதையோடுண்டான ஏகாந்தத் திலநுபவத்தைத் திரளிலே வெளியிடுவாரைப்போலே தானும் நானுமறிய அநுபவித்ததை இங்ஙனே வெளியிடுவதே! திரு வேங்கடமுடையான் அலேவலேயாகாதே!'' என்றாரிறே. (அலேவலே-வீண்பேச்சுக்காரன்). தமது ரஹஸ்யாநுபவம் பகவானாலே வெளிப்படுத்தப்பட்டது பொறாமல் நம்பி அப்போதே உயிர் விட்டதாக சரித்திரம். ஆசாரியஹ்ருதயம் (85)ல் ''புஷ்ப மண்டபத்தில் பணிப்பூவும்கையுமான அந்தரங்கரை முடிமன் னவன் அநுவர்த்தித்த க்ரமம்'' என்று இந்த சரித்திரம் பேசப் பட்டுள்ளது.

குறும்பறுத்த நம்பியான குரவைநம்பிபோலே உள்ளன்புடன் அந்தரங்கமாய் மண்பூவையிட்டு பகவானை பூஜித்து அவனருள் பெற்றேனோ அடியேன்? என்கிறார் அம்மையார்.

**„2. மூலமென்றழைத்தேனோ கஜராஜனைப்போலே?**

ஸ்ரீபாகவதத்தில் எட்டாம் ஸ்கந்தத்தில் இந்த யானையரசனின் சரித்திரம் பேசப்பட்டுள்ளது. திரிகூடமலைச்சாரலில் 'ருதுமான், என்று பெயருள்ளதும் வருணனுக்குச் சொந்தமுமான பூஞ்சோலை

யில் தாமரைபூத்த அழகான தடாகமொன்றிருந்தது. ஒரு நாள் ஒரு யானைக்கூட்டம் அங்கு வந்தது. அக்கூட்டத்தின் தலைவனான கஜராஜன் பெண் யானைகள், குட்டிகள் பல சூழ அத்தடாகத்தில் இறங்கி நீரைப்பருகி, குளித்து, பெண் யானைகளுடன் நீர் விளையாட்டுகள் விளையாடிக்களிக்கையில், நீரில் வாழ்ந்த பெரிய முதலையொன்று அதன் காலைக் கெட்டியாகக் கவ்விக்கொண்டது அந்த கஜேந்த்ரன் தன் வலிமை முழுதையும் கொண்டு இழுத்தும் தன்னை விடுவித்துக் கொள்ள முடியவில்லை. மற்ற யானைகள் சேர்ந்து இழுத்தும் பயனில்லாமல் போயிற்று. நீருக்குள் முதலை இழுக்க வெளியேறவேண்டி யானை இழுக்க, ஒன்றும் வெற்றி பெறாமல் பல வருஷங்கள் உருண்டோடின. நீரில் வாழும் முதலை யின் பலம் குன்றவில்லை; ஆனால் யானை இளைத்து விட்டது. தனது இறுதி காலம் நெருங்குவதை உணர்ந்தயானை தன்னைத்தன்னாலே காப்பாற்றிக் கொள்ளமுடியாது; மற்றயானைகளாலும் காப்பாற்ற முடியாது. தெய்வமே புகல் என்ற முடிவுக்கு வந்தது. **பரமாபத மாபந்நோ மநஸாசிந்தயத்தரிம், ஸது நாகவர: ஸ்ரீமாந் நாராயண பராயண:** என்கிறபடியேஸ்வயத்நத்தை விட்டு ப்ரபந்நனாய் எம்பெரு மானே புகல் என்று முற்பிறவியில் மனிதனாக இருந்து பகவானைத் துதித்தது நினைவுக்கு வந்து அப்படியே துதிக்க ஆரம்பித்தது.

**நமோ நமஸ்தேऽகிலகாரணாய நிஷ்காரணாயாத்புதகாரணாய**
**ஸர்வாகமாம்நாய மஹார்ணவாய நமோऽபவர்காய பராயணாய ॥**
**முக்தாத்மபி:ஸ்வஹ்ருதயே பரிபாவிதாய ஜ்ஞாநாத்மநே பகவதே**
**ஈச்வராய |**
**தமக்ஷரம் ப்ரஹ்மபரம்பரேசமவ்யக்தமாத்யாத்மிக யோககம்யம் |**
**அதீந்த்ரியம் ஸூக்ஷ்மமிவாதிதூரமநந்தமாத்யம் பரிபூரணமீடே ॥**

(**ஸ்ரீபாகவதம்** 8-3-15,18,21) கஜேந்த்ரஸ்துதியில் ஸாரமான பாகமே இது] எல்லாவற்றுக்கும் ஆதிகாரணனும்-மூலமானவனும் தனக்கு ஒரு காரணமில்லாதவனும் தானே அத்புதமாக எல்லாவித காரணமானவனும் நதிகள் யாவும் கடைசியில் கடலை யடைவது போல வேதங்களாலும் ஆகமங்களாலும் அடையப்படும் இறுதி யும், மோக்ஷப்ரதனும் பரம உபேதாயமுமானவனுக்கு நமஸ் காரம். முக்தர்களால் தமதுஇதயத்தில் ஸதா த்யாநம் பண்ணப் படுபவனும், ஞானஸ்வரூபமாயுள்ளவனும், குணபூர்ண னும் எல்லாரையும் நியமித்து ஆளுமவனாயுமுள்ளவனுக்கு நமஸ்காரம். 'இந்த்ரியங்களுக்கு எட்டாதவனும் நாசமற்றவனும், பரப்ரஹ்மம் என்று போற்றப்படுபவனும் தேவர்களை நியமித்து ஆள்பவனும் சிறிய பொருளை தூரத்திலிருந்து காணமுடியாதது

போல ஸூக்ஷ்மமாக உள்ளபடியால் காண முடியாதவனும் எல்லை யற்ற பெரியோனும் கல்யாணகுணபூர்ணனும் ஆதிமூலமானவனுமு முள்ள பரப்ரஹ்மத்தை வணங்கித்துதிக்கிறேன்.

இந்த துதியைக்கேட்ட சிவன் அயன் இந்திரன் முதலானோர் இதுக்கு விஷயம் நானல்ல நானல்ல என்று ஒதுங்கினர். ஆர்த்தி யுடன் கூப்பிட்ட யானைக்கு உதவவேண்டி ஸ்ரீவைகுண்டநாதனை நாராயணன் கருடன் மேலேறி விரைவில் மடுக்கரையில் வந்து குதித்தான். *கைம்மா துன்பம் கடிந்த பிரானே! *விண்ணுளார் வியப்பவந்து ஆனைக்கன்றருளையீன்ற கண்ணரா! *நெடுமுங்காதல் களிறளிப்பான் புள்ளூர்ந்து தோன்றினையே என்று ஆழ்வார்கள் போற்றும்படி வந்து யானையை காலில் கவ்விய முதலையோடு இழுத்து நீருக்கு வெளியில் கொணர்ந்து ஆழிப்படையினால் முதலையை வெட்டியெடுத்து யானையை ரக்ஷித்து, அது பரமனைப் பார்த்தவுடன் பூஜிக்கவென்று பறித்துவைத்திருந்த தாமரைமலர். களை ஏற்று மகிழ்வித்தான். யானையும் முதலையும் முன் பிறவியில் முறையே இந்த்ரத்யும்நன் என்ற அரசனும் ஹூஹூ எந்த கந்தர்வனுமாவர். சாபத்தினால் விலங்குகளாக இருந்தவர்கள் சாப விமோசனம் பெற்று நாராயணனைத் துதித்துப் போயினர்.

கஜராஜனைப்போல ஜகத்காரண மூலத்தை அழைத்து அவனால் அருளப்பெற்றேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 43. பூசக்கொடுத்தேனோ கூனியைப்போலே?

இவ்வார்த்தைகளில் முதல் வார்த்தைப்படி அக்ரூரர் கண்ணனை மதுரைமாநகருக்கு அழைத்து வந்தபோது கண்ணனும் பலராம னும் கம்ஸனுடைய விற்பெருவிழவுக்குச் செல்லும் வழியில் நடந்த நிகழ்ச்சிகள் 43, 44 வார்த்தைகளுக்கு விஷயமாகின்றன. முதலில் சலவை, சாயத்தொழில் புரியும் ரஜகன் ஒருவனைக் கண்டு அவனிடம்தங்களுக்கேற்ற நல்ல ஆடைகள் தருமாறு கேட்டனர். அவன் கம்ஸனிடம் பணியாற்றுபவன். அவன் இவர்கள் கேட்ட தைத்தர மறுத்து இவர்களை இகழ்ந்து பேசவே அவனைக் கண்ணன் ஒரு அறை அறைந்து வீழ்த்திவிட்டு இருவருமாக தங்களுக்குப் பிடித்த ஆடைகளை எடுத்தணிந்து கொண்டு அங்கு ஒரு சந்திலிருந்த பூக்காரன் வீட்டுக்குச் சென்று அவன் கொடுத்த நல்ல மணமுள்ள பூமாலைகளையணிந்து ராஜவீதியில் இரண்டு யானைக்குட்டிகள்போல் கம்பீரமாக நடந்து செல்கையில் அழகிய முகமுடையவளும் குமரியுமான கூனியொருத்தி கையில் பலவித சந்தனங்களைத் தட்டிலேந்தி வரக்கண்டனர். அவளை த்ரிவக்ரை,

என்றும் நைகவக்ரை என்றும் அழைப்பர். கண்ணன் அவளைப் பார்த்து "அழகியே! இந்த வாசனைப்பூச்சை யாருக்காகக் கொண்டு செல்கிறாய்?" என்று கேட்டான். "அழகனே! நான் கம்ஸனுக்குச் சந்தனம் பூசுபவள்." என்று அவள் சொல்ல, தங்களுக்கேற்றதான சந்தனத்தைத்தர வேண்டினர். முதலில் அவள் தந்ததை "ஸுகந்த மேதத்" — இது செயற்கைமணம் பெற்றது, இது வேண்டாம் என்ன, வேறு ஒன்றைத்தர "ராஜார்ஹம்". இது அரசர்கள் பூசுவது இதுவும் வேண்டாம் என்றான்.

**ஸுகந்தமேதத் ராஜார்ஹம், ருசிரம் ருசிராநநே |**
**ஆவயோ: காத்ரஸத்ருஶ தீயதாமநுலேபநம் ॥ (ஸ்ரீவி.பு.20:6-6)**

அழகிய முகமுடையவளே! எங்கள் மேனிக்குத்தகுந்ததாய் நேர்த்தியான சநதனத்தைத்தருவாய்" என்றான். 'இவர்களல்லவோ சாந்தின் வாசியறிந்த ரஸிகர்கள்!" என்று அவள் மகிழ்ந்து மிகவும் இனிதும் கண்ணன் திருமேனிக்கு ஒத்ததுமான பூச்சை அன்புடன் கொடுக்க இவர்களும் த்ருப்தியுடன் அணிந்தனர். கண்ணன் அவளிடம் ப்ரீதியடைந்தவனாய் அவள் காலைத் தன் காலால் மிதித்துக்கொண்டு மோவாய் கீழ் இருவிரல்களைக் கொடுத்துத் தூக்க, அவள் கூன் நிமிர்ந்து நேரானாள். அவள் கண்ணன் மேல் மையல் கொண்டு அவனை இழுத்துத் தன் வீட்டுக்கு வரும்படியழைக்க, பின்னர் வருவதாகக் கூறி கம்ஸனைக் காணச் சென்றான்

வண்ணான் போல கம்ஸன் என் செய்வனோ? என்று யோசியாமல் கண்ணனுடைய அழகையும் ராஸிக்யத்தையுமே கண்டு கூனி நல்ல சாந்தைப்பூசக்கொடுத்தாளே, அப்படிப்பூசக்கொடுக்க வல்லேனோ நான்? என்று அம்மையார் கேட்கிறார்

## 44. பூவைக்கொடுத்தேனோ மாலாகாரரைப்போலே?

விற்பெருவிழவுக்கழைக்கப்பட்ட கண்ணனும் நம்பி மூத்த பிரானும் மதுராநகரில் புகுந்து நல்ல வஸ்த்ரங்கள் பெற்று உடுத்திக்கொண்டு பூமாலைகள் அணியவிரும்பி ஒரு பூக்காரன் வீடு தேடிச் சென்றனர். அவன் பெயர் சுதாமா என்று பாகவதம் சொல்லுகிறது. முடுக்கிலிருக்கும் தன் குடிலைநாடி வந்த அவர்களைக்கண்டவுடன் ஒரு நொடியில் இவர்கள் சாமான்ய மனிதப்பிள்ளைகளல்லர் என்று கண்டு கொண்டு அவர்களை விழுந்து வணங்கினான். அலர்ந்த தாமரையையொத்த முகங்களுடைய அவர்களால் புஷ்பங்கள் தரும்படி வேண்டப்பட்ட

அந்த மாலாகாரன், அவர்களை நல்ல மணமுள்ளமலர்களால் அர்ச்சித்து தன்னை பரமபாக்யவானாகக்கருதி நல்ல கலம்பகன் மாலைகளை அணிவித்து அவர்களை அலங்கரித்து மகிழ்ந்தான். அவன் வசனம்:

**ப்ரஸாதபரமௌ நாதௌ மமகேஹமுபாகதௌ |**
**தந்யோऽஹமர்ச்சயிஷ்யாமி இத்யாஹ மால்யோபஜீவந: ||**

**ஸ்ரீ வி. பு 6-19-21**

''பரமேச்வரர்களான இவர்கள் ஏழையேன் குடில்தேடி வருவதே! நான் என்ன புண்ணியம் செய்தேன்? நான் பரமபாக்யசாலி; இவர்களை நன்றாக பூசிக்கிறேன்'' என்று அந்த பூமாலை விற்றுப் பிழைப்பவன் சொன்னான். ''நம் மாலைகளை நேரே பார்த்தால் தான் அணியவேணுமென்று தோன்றுமோவென பயந்து முகத்தை மாற வைத்துக் கொண்டு மாலை கட்டி அவற்றை விற்றுப் பிழைப்பவன் கிடீர் இவர்களைக்கண்டு இவர்களழகாலும் சீலத் தாலும் கவரப்பட்டு உயர்ந்த மணமுள்ள மாலைகளை இவர் களுக்குத் தன்பேறாகக் கொடுத்தான்!'' என்று வியக்கின்றனர் நம் ஆசாரியர்கள்.

**பூந: புந: ப்ரணம்யோபௌ மாலாகாரா நரோத்தமௌ |**
**ததௌ புஷ்பாணி சாரூணி கந்தவந்த்யமலாநி ச ||** **(23)**

மனிதரில் உயர்ந்த அவ்விருவரையும் மாலாகாரன் மீண்டும் மீண்டும் நமஸ்கரித்து அழகியவையும் நல்ல மணமுடையவையும் தூயவையுமான புஷ்பங்களை அவர்களுக்குக் கொடுத்துப் பூசித் தான். கண்ணனும் அவனை பூர்ணமாக அநுக்ரஹித்துப்பல வரங்களைக் கொடுத்தான்.

இப்படி தன்னலமற்ற அன்போடு கண்ணனை நான் பூவிட்டுப் பூசித்தேனோ என்று கேட்கிறார் அம்மையார்.

### 45. வழியடிமை செய்தேனோ லக்ஷ்மணனைப் போலே?

*சிற்றவை பணியால் முடி துறந்தான் என்கிறபடியே ராம பிரான் கைகேயி செய்த சூழ்ச்சியால் முடி துறந்து ''தந்தை கட்டளையிது'' என்று நிறைமனதினனாய் வனவாஸம் செல்லமுற் பட்டபோது அவனை எப்போதும் பிரியகில்லாத இலக்குவனும் ''நானும் கூட வருவேன் என்னையும் அழைத்துச்செல்ல வேணும்' என்று' தமையனை வேண்டியபோது பெருமாள் அதற்கு இசைய

வில்லே. *ஒழிவில்காலமெல்லாம் உடனுய்மன்னி வழுவிலா அடிமை செய்யவேணும் என்ற குறிக்கோளுடைய இளையோன் "ராமா! மீன் நீரைவிட்டு சிறிதுகாலமும் வாழ முடியாதாபோலே அடியேனும் பிராட்டியும் உன்னைவிட்டகன்று சிறிதுகாலமும் வாழ முடியாது. என்னை நீ அவச்யம் உன்னுடன் வருபவனாக ஏற்கவேணடும். இதில் தர்மஹாநி யேதுமில்லே. உன்னைவிட்டுப் பிரிந்து வாழும்படியான பாபமும் என்னிடமில்லே" என்று சொல்லி பிராட்டி முன்னிலேயில் ராமன் திருவடிகளை கெட்டியாகப் பிடித்துக்கொண்டு "வனத்தில் வைதேஹி மதனியாருடன் நீர் மலைத்தாழ்வரைகளில் வாழ்ந்து மகிழும் போது உறங்கும் போதும் உலவும் போதும் எல்லாவடிமைகளையும் நான் செய்ய வேணும்" என்று நிர்ப்பந்தித்து ராமனுடன் கூடவழிநடந்து அடிமை செய்தது ராமாயண வரலாற்றில் ப்ரஸித்தம். சுமித்திராதேவியும் "ஸ்ருஷ்ட ஸ்த்வம் வநவாஸாய"—நீ வனவாஸத்திற்கென்றே பிறப்பிக்கப்பட்டவன் என்று சொல்லி, 'ராமே ப்ரமாதம் மாகார்ஷீபுத்ரப்ராதரிகச்சதி' ராமன் பின்னே போகும் போது அவன் நடையழகில் மயங்கிக் குற்றேவல் புரிவதின்றும் நழுவாதே மகனே! என்று சொன்னாள். ஆழ்வாரும் *ஆளுமாளார் ஆழியும் சங்கும் சுமப்பார்தாம் என்று அருளி, மேலே *வாளும் வில்லும் கொண்டு பின் செல்வார் மற்றில்லே (திருவாய் 8-3-3) என்று, "ஒரு இளையபெருமாள் பின் செல்லவே பெருமாள் வாழ்ந்தார் அவரும் இல்லாவிட்டால் என்னாகுமோ" என்று வயிறு பிடிக்கிறார்.

இப்படி இளையபெருமாளைப்போல பெருமாளைப்பிரியாமல் பின்சென்றுகூட இருந்து அடிமை செய்தேனோ என்கிறார் அம்மையார்.

## 46. வைத்தவிடத்திருந்தேனோ பரதனைப்போலே?

தசரதசக்ரவர்த்தி ராமபிரானுக்கு யுவராஜ பட்டாபிஷேகம் பண்ண நிச்சயித்தபோது பரதன் கேகய நாட்டில் தனது மாமனுடனிருந்தான். அயோத்யையில் நடந்த சம்பவங்கள் எதுவும் அவனுக்குத் தெரியாது. ராமன் வனவாசம் போவதாக தந்தையைப் பிரிந்த உடன் சில நாட்களுக்கெல்லாம் பிரிவுத்துயர் தாளாமல் தயரதன் உயிர் நீத்தான். மந்திரிகள் உடனே பரதனை அயோத்யைக்கு அழைத்து வந்தனர். வந்தபிறகே அவனுக்கு இங்கு நடந்ததெல்லாம் தெரியவந்தன. தாய்மேல் மிகவும் கோபமடைந்தான்; வனம் சென்று ராமனை அழைத்து வந்து பட்டமேற்கும்படி வேண்டுவதாகத்தன்னுள் நிச்சயித்துக்கொண்டான். தசரதனுடைய

சடங்குகள் முடிந்தபின்னர் ராஜசபை கூட்டி வசிஷ்டர் முதலானோர் பரதனை ராஜ்யமாளும் பொறுப்பை ஏற்கும்படி கூறினர். ''இந்த ராஜ்யமும் நானும் ராமபிரானுடைய ஸொத்துக்கள். இரண்டு ஸொத்துக்களில் ஒன்றையொன்று எப்படி ஆளமுடியும்?'' என்று மறுத்துக் கூறி ''நாமெல்லாருமாக வனம் சென்று ராமனை மீண்டும் நகரத்துக்கு வரும்படி வேண்டுவோம்'' என்று கூறி தாய்மார்கள், மந்திரிகள், புரோஹிதர்கள், சைந்யங்களுடன் கூட பெருகூட்டமாய் ராமனிருக்குமிடம் சென்று அரசன் இறந்ததை அவனிடம் கூறி நகரம் வந்து ராஜ்யமாளும் பொறுப்பை ஏற்கும் படி வேண்டினான்.

ஏபிஸ்ச ஸசிவைஸ்ஸார்த்தம் பஸிரஸாயாசிதோமயா |
ப்ராது: சிஷ்யஸ்ய தாஸஸ்ய ப்ரஸாதம் கர்துமர்ஹஸி ||

இந்த மந்திரிகளோடு கூடி தலைசாய்த்து வணங்கி வேண்டப் படுகிறீர்; உடன் பிறந்தவனும் சிஷ்யனும் தாஸனுமான என்பால் இறங்கியருள வேணும்'' (அயோ 104-12) என்று வேண்டியும். ராமன் இணங்கவில்லை,'' ''நம்மிருவருக்கும் நந்தையாரிட்ட கட்டளையை நாமிருவரும் நிறைவேற்றவேணும் பதினாலாண்டு தன் வனவாஸம் முடிந்தபிறகு நான் வந்து ராஜ்யமேற்கிறேன். அதுவரை நீதான் ராஜ்யமாளவேவண்டும்'' என்று ராமன் முடிவாகக் கூற, பரதன் ராமனிடமிருந்து அவனுடைய திருவடி நிலைகளை (பாதுகைகளை) வேண்டிப் பெற்று அவைகளை அரசன் ஸ்தானத்தில் எழுந்தருளப் பண்ணிக் கொண்டு தான் அதன் தாஸனாய் ராஜ்யமாள்வதாக ரதமேறி மீண்டான்.

இப்படி ராஜ்யமாளத் துளியும் ஸம்மதமில்லாத போதிலும் ராமன் சொன்னபடி செய்ய வேண்டி அயோத்யையில் ராமன் கட்டளைப்படி இருந்த பரதனைப் போல் பாரதந்தர்யம் என்ற ஸ்வரூபத்தை நோக்கினேனோ? என்று அம்மையார் கேட்கிறார்.

## 47. அக்கரைக்கே விட்டேனோ குகப் பெருமானைப் போலே?

ராமபிரான் பிராட்டியுடனும் லக்ஷ்மணனுடனும் வனம் செல்லப் புறப்பட்ட போது தசரதன் கட்டளைப்படி சுமந்திரன் அவர்களைத் தேரிலேற்றிக் கொண்டு போய் கங்கைக் கரையில் ச்ருங்கிபேரபுரம் என்ற ஊருக்கருகில் கொண்டு விட்டான். அவ்விடத்தில் வேடர் தலைவன் குகன் என்பவன் வேடர்களை

ஆண்டு வந்தான். அவ்வேடர் தலைவன் ராமனைக் கண்டு அவனை அன்புடன் பூசித்தான். ஆனால் ராமன் அவன் தந்த உணவுப் பொருள்களை ஏற்றுக் கொள்ளவில்லை. அன்று இரவு அங்கு தங்கிவிட்டு மறுநாள் கங்கையைக் கடந்து அக்கரைக்குச் செல் குகனது உதவியை லக்ஷ்மணன் நாடினன். நூற்றுக் கணக்கில் ஓடங்கள் குகன் செத்திலுண்டு. அவன் அழகிய பெரியதொரு ஓடத்தைக் கொண்டு வந்து பிராட்டி, ராமன், லக்ஷ்மணன், இவர்களுடன் அவர்களுக்கு வேண்டிய முக்கிய சாமான்கள், அவர்களின் ஆயுதங்கள் யாவற்றையும் ஏற்றி, தானே ஓடம் செலுத்தி அவர்களை அக்கரையில் கொண்டுவிட்டான். இதுபோலே பின்னர் வந்த பரதனையும் உபசரித்து மந்திரிகள், தாயமார்கள், யானை குதிரை காலாட்களுடன் கூடிய சைன்யம் யாவரையும் 500 பெரிய ஓடங்களில் ஏற்றி கங்கையின் அக்கரையில் விட்டான். வேடர் தலைவனான குகனை பெருமாள் ஸமஸகாவாக ஏற்றதால் நம பெரியோர் அவனை **குறப்பெருமாள்** என்று மதிப்புடன் அழைப்பர்.

குகனைப் போல பெருமாளையும் பரதாழ்வானையும் நதியின் அக்கரையில் கொண்டுவிட்டு உதவினேனோ? என்கிறார் அம்மையார்.

## 48 அரக்கனுடன் பொருதேனோ பெரிவுடையார் போலே?

அகஸ்த்யாச்ரமத்திலிருந்து [27-ம் வார்த்தையின் விளக்கம் காண்க] புறப்பட்ட ராமபிரான் முதலானோர் பஞ்சவடியை நோக்கி நடந்தனர். அப்படி செல்லும் வழியில் ஒரு பெரிய கிழக் கழுகைக் கண்டனர் அக்கழுகை ராக்ஷஸனோ என்றெண்ணி நீ யார்? என்று வினவ, அது "அப்பனே! நான் உனது தந்தை தசரதனின் நண்பன்" என்றது. அது கேட்ட ராமன் அக்கழுகைப் பூசித்து வணங்கி அதன் குலத்தையும் பேரையும் விசாரித்தான், அது 'காச்யப ப்ரஜாபதியின் பல மனைவியருள் தாம்ரை என்பவளுடைய வம்சத்தில் வினதை என்பவளுக்கு கருடன், அருணன் என்று இரண்டு பிள்ளைகள். அருணனுக்கு ஸம்பாதி, ஜடாயு என்று இரண்டு பிள்ளைகள். அவர்களில் இளையவனான ஜடாயு நான். இங்கு வனவாஸத்தில் நான் உனக்கு துணைவனாக இருக்கிறேன். உனக்கு மங்களமுண்டாகுக" என்றது. பிறகு அக்கழுகையும் அழைத்துக் கொண்டு அம்மூவரும் பஞ்சவடியை யடைந்தனர். அங்கு லக்ஷ்மணன் நிருமித்த ஆச்ரமத்தில் வசித்தனர். ஜடாயும் அருகே ஒரு இடத்தில் வசிக்கலானார். ராமன் லக்ஷ்மணனிடம் "இஹ வத்ஸ்யாமி ஸௌமித்ரே

ஸார்த்தமேதேந ம்க்ஷிணு'' — நடுவிலாய்ச்சிக்கு ''ப்ரியமில்லாமையாலே ஜயர் கண்வட்டத்திலிருந்து வந்தோம். இனி இவர் சிறகின் கீழேயாகிலும் வர்த்திப்போம்'' என்று உகந்து கூறினன். அவர்கள் அங்கு சுகமாக வசிக்கையில் சூர்ப்பணகை [ராவணன் தங்கை] ராமனிடம் காமவெறிக் கொண்டு சீதையைக் கொன்று விழுங்க முற்பட அவள் அங்கபங்கம் செய்யப்பட்டாள். அவள் சென்று ராவணனிடம் ''சீதை என்ற பேரழகி ராமனுடன் வசிக்கிறாள் அவளை நீயே அநுபவிக்கத்தக்கவன்'' என்ன ராவணனும் மாரீசன் என்னும் அரக்கனுடன் சூழ்ச்சி செய்து ராமலக்ஷ்மணர்களை ஏமாற்றி வஞ்சனையாக சீதையை அபகரித்து லங்கைக்கு ஆகாயமார்க்கமாக தூக்கிச் சென்றான் அப்போது சீதையின் அழுகைக் குரல் கேட்டு ஜடாயு ராவணனைத் தடுத்து அவனுக்கு நல்வார்த்தை சொல்லி சீதையை விடுவிக்க முயன்றார். பிறகு ராவணனுக்கும் ஜடாயுவுக்கும் கோரமான யுத்தம் மூண்டது. ராவணன் தேரை முறித்துத் தள்ளி அவனையும் வெகுவாக காயப்படுத்தின ஜடாயு சிறிது இளைத்திருந்த போது அவர் சிறகுகளையும் கால்களையும் தனது கத்தியால் வெட்டி வீழ்த்தி விட்டு அவன் சீதையைத் தூக்கிச் சென்று விட்டான்.

பிறகு ராமன் சீதையைத் தேடி வரும்போது ஜடாயுவைக் காண அவனிடம் ராவணன் சீதையை அபகரித்துப் போவதையும் தான் சண்டையிட்டு சிறகிழந்ததையும் சொல்லிவிட்டு உயிர் நீத்தார். ராமன் அவரைப் பெரியப்பனாக மதித்திருந்ததால் ''பெரியவுடையார்'' என்று அவரை நமதாசாரியர்களழைப்பர். அவர் ராமனை ''ஆயுஷ்மந்'' என்று கடைசியாக மங்களாசாஸநம் பண்ணியதாலும் பெரியவுடையார் என்ற பெயர் நிலைத்தது.

இப்படிப் பெரியவுடையாரைப் போலே நான் ராக்ஷஸனுடன் பெருமாளுக்காகச் சண்டையிட்டு உயிரையும் உடலையும் விடத் துணிந்தேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 49 இக்கரைக்கே சென்றேனோ விபிஷணரைப் போல?

ராமபிரான் பிராட்டி லங்கையில் சிறைவைக்கப்பட்டிருப்பதையறிந்து சுக்ரீவ மஹாராஜர் துணையுடன பெரியதொரு சேனையுடன் லங்கையின் மீது படையெடுப்பதற்காக சமுத்ரத்தின் இக்கரையில் கூடியிருந்தனர். அப்போது லங்கையில் ராவணன் தனது மந்திரிகள் முதலானோருடன் ராமன் படையெடுத்து வந்து விட்டால் லங்கையைக் காத்து வானரசைன்யத்தை முறியடிக்க

வழிவகுக்க யந்த்ராலோசனை செய்தான் சபையிலிருந்த அரக்கர் யாவரும் ராவணனிடம் "யுத்தத்தில் ராமனுடைய குரங்குப் படையை மாவீரர்கள் கொண்ட அரக்கர் படையால் எளிதில் முறியடித்துவிட முடியும்" என்று அவனை முகஸ்துதி பண்ணி பேசினர். "இந்த்ராதி தேவர்களை வெற்றி கொண்ட ராவணனையும் இந்திரஜித்தையும் கேவலம் ஒரு மனிதன் என்ன செய்து விட முடியும்?" என்று வீரம் பேசினர். ராவணன் தம்பியான விபீஷணன் மட்டும் "எதிரியின் படைபலம் இன்னது இவ்வளவு என்று தெரியாமல் இப்படி வீரம் பேசுவது நமக்கு நல்லதல்ல. ஸீதையை லங்கைக்குக் கொண்டு வந்ததிலிருந்து கெட்ட சகுனங்களே தோன்றிக் கொண்டிருக்கின்றன. ஸீதை மஹாபதிவ்ரதை, ராமனும் லக்ஷ்மணனும் ஒப்பற்ற வீரர்கள். படைபலமின்றியே ஜனஸ்தானத்தில் பெரிய அரக்கர்படையை ஒரு முஹூர்த்த காலத்தில் அழித்தார்கள். விராதன், கபந்தன் முதலான பல ராக்ஷஸர்களை முடித்துள்ளனர். உனது தம்பியான நான் உனது நன்மையில் அக்கறையுள்ளவனாதபடியால் நீதியை எடுத்துச் சொல்லுகிறேன். ஸீதையை ராமனிடம் கொடுத்து விட்டு சமாதானமாகப் போனால் நாம் யாவரும் பிழைக்கலாம். இல்லையெனில் பெருநாசம் ஏற்படும்" என்று நியாயத்தைச் சொன்னான். ராவணனுக்கும் இந்திரஜித்துக்கும் இப்பேச்சு பிடிக்காமல் அவனை இகழ்ந்து பேசினர். மேலும் விபீஷணன் தான் சொல்வதன் நியாயத்தை வலியுறுத்தவே ராவணன் கோபங் கொண்டு "குலத்தைக் கெடுக்க வந்தவனே! என் கண்முன் நில்லாதே" என்று கடிந்து கொண்டான்.

இதைப் பொறாத விபீஷணன் கையில் கதையுடன் அவனிடம் மிகவும் ப்ரியமுள்ள நாலு ராக்ஷஸர்களுடன் ராவணன் சபையை விட்டு ஆகாயத்தில் கிளம்பி "அண்ணா! நான் சொன்ன நன்மைகளைக் கேளாமல் என்னை இகழ்கிறாய், நான் சென்று வருகிறேன். உனக்கு மங்களம் உண்டாகுக!" என்று சொல்லி ஸமுத்திரத்தின் மறுகரையில் லக்ஷ்மணனுடன் ராமன் கூடியிருந்த இடத்துக்கு வந்து தன்னை அறிமுகம் செய்து கொண்டு "ஸர்வலோக சரண்யனை, மஹாத்மாவான ராகவனை சரணம் பற்றுகிறேன்" என்று சரணம் பற்றினான். வானர முதலிகள் எழுப்பிய ஆக்ஷேபங்களையெல்லாம் களைந்து பெருமாள் அவனை அழைத்த போது பூமியில் பெருமாள் திருவடியில் படிந்து

**பரித்யக்தா மயா லங்கா மித்ராணிச தநாநி ச |**
**பவத்கதம் மே ராஜ்யஞ்ச ஜீவிதஞ்ச ஸுகாநிவை ||**

புறம்புள்ளபற்றையெல்லாம் விட்டு வந்தேன்; இனி எனது வாழ்வெல்லாம் உம்மிடமே அடங்கியுள்ளது என்கிறான். அக்கரையில் பற்றுகளையறவிட்டு இக்கரைக்கு (பெருமாளிருக்குமிடத்திற்குக்) வந்து சேர்ந்தான். விபீஷணாழ்வானைப் போலே இப்படிப்பட்ட சரிதம் எனக்குண்டோ? என்று அம்மையார் கேட்கிறார்

## 50. இனியதென்று வைத்தேனோ சபரியைப் போலே?

ராவணனால் பிராட்டி அபகரிக்கப்பட்டபின் அவளைத் தேடியலைந்த ராமலக்ஷ்மணர்கள் கபந்தன் என்னும் ராக்ஷஸனை சந்தித்தனர் (17-ம் வார்த்தை விளக்கம் காண்க) அவன் அவர்களை சுக்ரீவனிடம் நட்பு கொள்ளும்படி சொன்னான்.

**ஸ சாபிகதயாமாஸ சபரீம் தர்மசாரிணீம் |**
**ஸ ரமணீம தர்மநிபுணாம் அபிகச்சேதி ராகவம் |**
**ஸோ ஸப்யகச்சந்மஹாதேஜா: ஸபரீம் ஸத்ருஸூதந |**
**ஸபர்யாபூஜிதஸ்ஸம்யக் ராமோ தஸராத்மஜ: |** பால I-5,6,58

தர்ம நிபுணையும் தர்மாநுஷ்டானத்திலும் தவத்திலும் சிறந்தவளுமான சபரியைக் கிட்டும்படி அவன் சொல்ல அப்படியே அவளிருக்குமிடம் சென்று அவளால் நன்றாகப் பூஜிக்கப் பெற்றனர்

மதங்க முனிவருடைய ஆச்ரமத்தில் முனிவரும் அவர் சிஷ்யர்களும் வசித்து வந்த போது சபரி என்ற வேடுவச்சி அவர்களுக்கு சுச்ரூஷைகள் செய்து அவர்களின் முழு அநுக்ரஹத்துக்கும் பாத்திரமாகி அவர்கள் ஸித்தி பெற்று மேலுலகங்களையடையும் போது 'நீ இங்கேயே இரு ராமபிரான் இங்கு வரப்போகிறான். அவனையும் லக்ஷ்மணனையும் பூஜித்து அவர்களருள் பெற்று நீ எங்களைச் சேர்வாய்'' என்றனர், அதன்படியே மஹாதபஸ்வினியும் குருசுச்ரூஷை என்ற தவத்தில் (தருமத்தில்) நிலைநின்றவளுமான சபரி ராமபிரான் வரவை எதிர்நோக்கியிருந்தாள். அந்த மதங்க வனத்தில் முனிவரின் ப்ரபாவத்தினால் புஷ்பங்கள் வாடாது. கனிகள் பறித்து வைத்தாலும் ருசிகுன்றாமல் அப்படியே இருக்கும் தான் ருசித்து பரீக்ஷித்து இனியதென்று ராமனுக்கென்று பழங்களை அவள் சேமித்து வைத்திருந்தாள்.

**மாயாது விவிதம் வந்யம ஸஞ்சிதம் புருஷர்ஷப!**
**தவார்த்தே புருஷவ்யாக்ர பம்பாயாஸ்தீரஸம்பவம் ||** ஆ-74:17

"இந்த பம்பைக் கரையிலுண்டான வனப் பொருள்களை | பல விதமான பழங்களை உனக்கென்றே சேமித்து வைத்துள்ளேன். இவற்றை புருஷச்ரேஷ்டர்களான நீங்கள் ஏற்று புசிக்கவேண்டும்" என்று தூய்வன்புடன் வேண்ட ராமனும் அதை ஏற்றுக் கொண்டான். பெருமாளின் கடாக்ஷத்தினுல் அவள் பாபங்கள் தொலையப் பெற்று குருசுச்ருஷையின் உயர்ந்த பலனையடைந்தாள்'

இப்படி பெருமாளுக்கு இனியதென்று வைத்தேனே நான்? என்று கேட்கிருர் அம்மையார்.

## 51. இங்குமுண்டென்றேனே பிரஹ்லாதனைப் போலே?

ஹிரண்யாக்ஷன் ஹிரன்யகசிபு என்ற ஸஹோதரர்கள் மிக்க் கொடிய அசுரர்கள். ஹிரன்யாக்ஷன் பூமியைக் கொண்டு கடலில் ஒளித்து விட நாராயணன் வராஹவதாரம் எடுத்து அவனைக் கொன்று பூமியை நீரிலிருந்து மீட்டு பழையபடி நிலைக்கச் செய் தார். தன் உடன்புறப்பைக் கொன்றவன் என்று விஷ்ணுவை ஹரணயகசிபு மிகவும் வெறுத்தான். பிரமன் தந்த வரபலத்தால் செருக்குண்டு பூவுலகையும் இந்திரலோகந்தையும் ஆக்ரமித்துக் கொண்டு "யாரும் நாராயணனைத் தொழக்கூடாது, என்னையே தெய்வமாக யாவரும் பூஜிக்க வேணும்" என்று கட்டளை பிறப் பித்தான்.

இந்த ஹிரண்யனுடைய ஒரே மகன் ப்ரஹ்லாதன். அரக்க குடியில் பிறந்தவனுயினும் ப்ரஹ்லாதன் சிறந்த விஷ்ணு பக்தனக விளங்கினுன். ஹிரண்யனே எல்லாம் வல்ல ஈசுவரன் என்று ப்ரஹ்லாதனுக்கும் மற்ற அசுரச் சிறுவர்களுக்கும் அசுர குருமார்கள் போதித்தும் பிரஹலாதன் ஸதாஸர்வகாலமும் ஹரியையே மனதில் கொண்டு பூசித்து, வாய்ப்பு கிடைத்த போதெல்லாம் தன்னுடனிருந்த அசுரக் குழந்தைகளுக்கு விஷ்ணு பகவானின் பெருமைகளைப் பரக்க உபதேசித்தான்.

இவற்றையறிந்த ஹிரண்யன் மகனைச் சித்ரவதை செய்து கொல்லும்படி தனதாட்களுக்குக் கட்டளையிட்டான். அவர்களால் எந்த ஆயுதத்தினுலும் ப்ரஹ்லாதனுடைய உடலில் சிறு 'காயமும் உண்டாக்க முடியவில்லை. கோரமான விஷமுடைய பாம்புகள் அவனைக் கடிக்க முடியவில்லை. பெரிய பெரிய யானைகளாலும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. கொழுந்து விட்டெறியும் நெருப்பு அவனைச் சுடவில்லை. கடலில் போட்டு பலமலைகளை அவன் மேல் அடுக்கிப் பார்த்தனர். பெரியமலை மேலிருந்து கீழே உருட்டி

விட்டனர். எதனாலும் அவனை ஒன்றும் செய்ய முடியவில்லை. ஸதா விஷ்ணுவையே மனதில் தியானம் செய்து அதில் மூழ்கியிருந்த தால் ''ந விவேத ஆத்மநோகாத்ரம் தத்ஸ்ம்ருத்யா ஹ்லாத ஸம்ஸ்தித:'' (ஸ்ரீ வி பு. 1-17-39) அந்த விஷ்ணுவிடம் தன் சிந்தையை நிலைநிறுத்தி ஆநந்தபரவசனாயிருந்தமையால் தனது உடலையே அறியாதவனாய்—உணராதவனாயிருந்தான் நாக்நிர் தஹதி நைவாயம் ஸஸ்த்ரைஸ்சிநதோ நசோரகை:1 க்ஷயம் நீதோ ந வாதேந நவிஷேண நக்ருத்யயா (1-9-59) இப்படி ப்ரஹ்லாதனுக்கு ஒரு தீங்கும் இழைக்க முடியவில்லை. அவன் தன்னைக் கொல்லத் துணிந்த தகப்பனிடம் பகை பாராட்டவில்லை; அவன் தந்தையிடம் சொன்னது :

**ஸர்வபூதாத்மிகே தாத ஜகந்நாதே ஜகந்மயே 1 பரமாத்மநிகோவிந்தே மித்ராமித்ரகதாகுத : 1 த்வ்யஸ்தி பகவான் விஷ்ணுர்மயிசாந்யத்ர சாஸ்திஸ: |**

''எல்லாம் விஷ்ணுமயமாயுள்ள இந்த ஜகத்தில் நண்பனிவன் விரோதியிவன் என்பதற்கு இடமேது? பகவான் விஷ்ணு என்னுள் இருப்பது போல உன்னுள்ளும உளன். எல்லா விடங்களிலும் உளன்'' என்று.

தான் அளந்து இட்ட ஒரு தூணைக் காட்டி ''இங்குளனோ உன் விஷ்ணு?'' என்று மகனை இரணியன் கேட்க, ''இங்குமுளன், மற்றெங்குமுளன்'' என்றான் மகன். *எங்குமுளன் கண்ணனென்ற மகனைக் காய்ந்து இங்கில்லையால்? என்று இரணியன் தூண்புடைப்ப அங்கப் போதே அவன் வீயத் தோன்றிய என் சிங்கப்பிரான் [திருவாய் 2.8.9.] என்கிறபடியே அப்போதே அத்தூணினின்றும் பெரிய ஆரவாரத்துடன் நரசிங்க உருவாய்த் தோன்றி அரக்கனைத் தன் மடியிலிட்டு அவன் மார்பைத் தன் நகங்களால் கிழித்து வீழ்த்தினன். ''எங்குமுளன் — இங்குமுண்டு, என்னிலுமுண்டு, உனனிலுமுண்டு'' என்று திடமாகச் சொன்ன ப்ரஹ்லாதன் போல் நான் சொல்வேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

52 **இங்கில்லையென்றேனோ ததிபாண்டனைப் போலே?**

ததிபாண்டான் என்றால் தயிர்த்தாழியையுடையவன் என்று பொருள். பெரிய பானையொன்றில் தினமும் தயிர் எடுத்துச் சென்று விற்றுப் பிழைக்கும் இடையன் காலையில் தயிர் எடுத்துச் சென்று விற்று விட்டு தாழியுடன் வந்து தனது குடில் வாயிலில் இளைப்பாறுவது வழக்கம் ஒருநாள் கண்ணன் யசோதையின் மடியில் படுத்துத் தாய்ப்பாலைப் பருகும் போது பால் பொங்கிற்

றென்று இவலை இறக்கிவிட்டு விட்டு ஓடினுன். கண்ணன் சீற்றங் கொண்டு ஒரு சிறுகல்லை எடுத்து நெய் குடத்தின் மேல் எறிந்தான். அடுப்பை அணைத்து விட்டு வந்த யசோதை நெய்க்குடம் உடைந் திருப்பதையும் கண்ணன் ஒன்றுமறியாதவன் போல் படுத்திருப் பதையும் கண்டு ஒரு சிறு கோலைக் கையில் கொண்டு கண்ணனைக் கோபத்துடன் அழைத்தாள். கண்ணன் அன்னை அடிக்கப் போகிறுள் என்று அழுது கொண்டே ஓடினுன். யசோதையால் அவனளவுக்கு ஓடமுடியவில்லையாகிலும் வேகமாகப் பின் தொடர்ந்தாள். முன்னே ஓடிய கண்ணன் ததிபாண்டனையும் அவன் தாழியையும் கண்டான். ''தாதா! அம்மா அடிக்க வருகிறுள். என்னை உன் தாழியினுல் மூடிவிட்டு அவள் வரும்போது இந்த பக்கம் யாரும் வரவில்லை என்று சொல்லி என்னை அடிபடா மல் காப்பாற்று'' என்று மழலைமாறாமல் சொல்லக் கேட்ட அந்த இடையன் திடீரென இது சாதாரணக் குழந்தையல்ல என்று உணர்ந்து கண்ணன் கேட்டுக்கொண்ட படியே அவன்மேல் தாழிழைக் கவிழ்த்து மறைத்து விட்டான். யசோதை அங்கு வந்து ''என் குழந்தை இந்தப் பக்கம் ஓடி வந்தானே பார்த்தாயா?'' என்று கேட்டதற்கு ''இங்கு வரவில்லையே; இங்கு யாரும் என்னுடன் கூட இல்லையே'' என்று பச்சைப் பொய்யைச் சொன் னுன். ''எங்குமுளன் கண்ணன்'' என்னும் தத்துவத்தை இவன் ''இங்கில்லை'' என்று சாதித்தான்

யசோதை அப்பேச்சை நம்பி அப்பால் சென்றவுடன் தாழி யுள்ளிருந்த கண்ணன் ' தாதா! எனக்கு மூச்சு விட முடியவில்லை. உடனே தாழிழைத் தூக்கி என்னை வெளியே வரவிடு'' என்று உள்ளிலிருந்து கூவினுன் இறையறிவில் மிகவும் தாழ்ந்தவனு யினும் அவ்விடையனுக்குக் கண்ணன் தான் பரம்பொருள் என்பதை உணர்த்திவிடவே, சிறுவனே! நீ ஆயர் புத்திரனல்லன்; அருந்தெய்வம் எனக்கு நீ உனக்கு மிகவும் வேண்டியவருக்குத் தரும் மோக்ஷத்தைத் தருவதாகச் சொன்னுல் உடனே உன்னை விட்டுவிடுகிறேன் என்றுன் சிறிது வாக்கு வாதத்துக்குப் பின் கண்ணன் அப்படியே ஆகட்டும் என்ன, இடையன் ''அது போதாது; இந்தப் பானைக்கும் நீ மோக்ஷம் தரவேண்டும் நான் எப்போதும் இதைப் பிரிந்திருந்ததில்லை'' என்ன அதற்கும் கண்ணன் ஒத்துக் கொண்டு, அவ்விடையனுல் விடுவிக்கப்பட்டு, இடையனுக்கும் தயிர்த்தாழிக்கும் முக்தியளித்தான். எம் பெருமான் யாருக்கு எப்போது தன்னை உண்மையாகக் காட்டிக் கொடுப்பான், யாருக்கு ஒரு காரணமின்றி நிர்ஹேதுகமாக அருள்

ப்ரிவான் என்று சொல்ல முடியாது. ஆசாரிய ஹிருதயத்தில் நாயனுர் ஆழ்வாருக்குத் துணையாக இம்மாதிரி அருளப்பட்ட 18 அதிகாரிகளைப் பட்டியல் எடுக்கிருர். வேடன், வேடுவிச்சி, குரங்கு, கூனி, மாலாகாரன், வேண்டடிசிலிட்டவர் இடையன், தயிர்த் தாழி, பிணவிருந்து, [குகன், சபரி, சுக்ரீவன், அநுமான், மதுரை சாந்துக்காரி, மதுரை பூக்காரர், பத்தவிலோசநத்து ரிஷிபத்நிகள் ததிபாண்டன், அவனுடைய தாழி, கண்டாகர்ணன்) முதலியோரை இப்பட்டியலில் காணலாம் [அ.ஹ்ரு-228] வியாக்யானம் காண்க பக்தரில் சிறந்த ப்ரஹலாதன் எங்குமுண்டு என்ருன். ஒன்றுமறியாத ததிபாண்டன் இங்கில்லை என்ருன். இருவரும் பகவத்விஷயீகாரம் பெற்றனர். அவனருள் பெருக்கத்துக்கு இது தான் காரணம் என்று சொல்ல முடியாது.

ததிபாண்டன் போலே கண்ணனுக்காக ஒரு பொய் சொன்னேனே? என்று கேட்கிருர் அம்மையார்.

### 53, காட்டுக்குப் போனேனே பெருமாளைப் போலே?

தசரதமன்னவன் மக்கள் பொதுச் சபை கூட்டி நாடறிய ராமனுக்கு ராஜ்யாபிஷேகம் பண்ணுவதாக அறிவித்து அதற்கு நாளிட்டான். முதல் நாளிரவு ராமன் ஸீதையுடன் விரதமிருந்து ''நாராயண முபாகமத்'' என்கிறபடியே குலதெய்வத்தை பூஜித்தான் ஆனுல் மந்தரை என்னும் கூனியால் மனது கலைக்கப்பட்ட கைகேயி மன்னனிடம் பலவாண்டுகளுக்கு முன் அவன் தந்திருந்த வரங்களைக் கேட்டுப்பெற்று அதில்முதலாவதாக ராமனை 14ஆண்டு வனவாஸம் அனுப்பவேண்டுமென்றும் இரண்டாவதாக தன் பிள்ளையான பரதன் நாடாள வேண்டும் எனறு கேட்டாள். இது கேட்ட அரசன் துக்கம் தாளாமல் மோஹமுற்ருன். ராமன் அங்கு வந்தபோது கைகேயி ''நீ 14 வருஷம் வனவாஸம் புகவேண்டும்; இது அரசகட்டளை'' என்ருள். ''அப்படியே'' என்று மிக்கமகிழ்ச்சியுடன் அதை ஏற்றுக் கொண்டு காட்டுக்குக் கிளம்பினுன். ''வநவஸோ மஹோதய :'' என்று அதைப் பெருமகிழ்ச்சியுடன் ஏற்றவன் ராமன்,

இம்மாதிரி எதனுலும் மனங்கலங்காமல் தந்தை நியமனம் என்றதே சொல்லாகக் கொண்டு குலக்ரமாகதமான ராஜ்யத்தைத் துறந்து வனவாஸத்தை ஏற்றுக்கொண்டேனே ராமனைப் போலே? என்று கேட்கிருர் அம்மையார்.

## 64. கண்டுவந்தேன் என்றேனோ திருவடியைப் போலே?

ராமபிரான் ஸீதாபிராட்டியைத் தேடிச் செல்கையில் கபந்தனைக்கொல்ல அவன் திவ்யசரீரம் பெற்று சுக்ரீவனை ஸக்யம் செய்து கொள்ளும்படி கூற, அப்படியே சுக்ரீவன் விரோதியான வாலியை முடித்து அவனை அக்நிஸாக்ஷிகமாக நண்பனாக்கிக் கொண்டான். சுக்ரீவனை வானர ராஜ்யத்துக்கு மஹாராஜனாக முடிசூட்டி வைத்தான். சுக்ரீவன் நாலு திக்குகளிலும் வானரர்களை பிராட்டியைத் தேடும்படி அனுப்பினான். தெற்கு திக்கில் அங்கதன, ஜாம்பவான், அநுமான் (திருவடி) ஆகியோர் சென்றனர். இவர்களில் அநுமானே சீதையைக் காண்பான் என்று ராமன் ஊகித்தறிந்து அவனிடம் தனது கணையாழி மோதிரத்தை அடையாளமாகக் கொடுத்தனுப்பினான். அந்த ஊகம் வீணாகவில்லை. ஜடாயுவினுடைய அண்ணனான சம்பாதி மூலம் சீதை லங்கையிலுள்ளதை அறிந்த வானவீரர்கள் அநுமான் ஒருவனே கடலைத் தாண்டி லங்கையை அடையக் கூடியவன் என்று அவனை அனுப்பி வைக்க அவனும் நூறு யோசனை அளவுள்ள ஸமுத்ரத்தைத் தாண்டி ராவணனின் தலைநகரமான லங்கையைக் கண்டான்:

ஶதயோஜநவிஸ்தீர்ணம் புப்லுவே லவணார்ணவம் |
தத்ர லங்காம் ஸமாஸாத்யபுரீம் ராவணபாலிதாம் |
தத்ர ஶ ஸீதாம் த்யாயந்தீம் அசோகவநிகாம் கதாம் |
நிவேதயித்வாபிஜ்ஞாநம் ப்ரவ்ருத்திம் ச நிவேத்ய ச |
ஸமாஶ்வாஸ்ய ச வைதேஹீம் மர்தயாமாஸ தோரணம் |

பால1-72. 73, 74

ததோதக்த்வா பூரீம்லங்காம்ருதே ஸீதாம் ச மைதிலீம் |
ராமாய ப்ரியமாக்யாதும் புநராயாத் மஹாகபி: |
ஸோऽபிகம்ய மஹாத்மாநம் க்ருத்வா ராமம் ப்ரதக்ஷிணம் |
ந்யவேதயதமேயாத்மா த்ருஷ்டா ஸீதேதி தத்வத:1 77, 78

அங்கு சீதையைக் கண்டு கணையாழியைக் கொடுத்து அவளைத் துக்கத்தினின்றும் ஆச்வாஸப்படுத்தி அரக்கருடன் சண்டையிட்டு, லங்கைக்குத் தீயிட்டு, திருப்பவும் ராமனிடம் வந்து, "த்ருஷ்டாஸீதா" — கண்டேன் ஸீதையை — என்று சொல்லி அவளுடைய சூடாமணி என்ற தலையணியையும் கொடுத்து ராமனை மகிழ்வித்து ராமனால் கெட்டியாக அணைக்கப்பட்டான். "நிஷ்காரணாய அநுராமாந்", என்னும்படி ஹநுமான் (திருவடி) ராமனுக்குச் செய்த உதவி எந்த ப்ரதிப்ரயோஜனத்தையும் எதிர்பாராத தன்னலமற்ற ஸேவை என்று போற்றப்படுகிறது.

இப்படி பெருமாளுக்கு உயிரளிக்கும் ஸேவையைச் செய் வேனே? என்று கேட்கிறார் அம்மையார்.

## 55. இருகையும் விட்டேனே த்ரௌபதியைப் போலே?

தருமபுத்திரர் ராஜஸூய யாகம் பண்ணி தம்பிமாருடன் அரசாண்டிருக்கையில அதுபொறாத துர்யோதனன் சகுனியால் தூண்டப்பட்டு அவரை சூதாட அழைத்து சகுனியின் வஞ்சனையால் அவ்வாட்டத்தில் தோற்கடித்து ராஜ்யம், தம்பிகள், பட்டத்தரசியான த்ரௌபதி எல்லாம் ஆட்டத்தில் பந்தயமாக வைக்கப் பட்டபடியால் இழக்கச் செய்தான் கர்ணனும் துரியோதனனுமாக த்ரௌபதியை பாண்டவரெதிரே அவமானப்படுத்த வேணுமென்று அவள் வீட்டுக்காகாமல் ஸ்நாதையாயிருந்தபோது துச்சாசனனையிட்டு பலாத்காரமாக சபைக்கு இழுத்து வரச் சொல்லி அவளைத் துகிலுறியச் சொல்ல, அவனும் அப்படியே செய்ய முற்பட்டான். திருதிராஷ்ட்ரன் கொலுவிருந்த அச்சபையில் ''இந்த அநியாயத்தை தடுப்பாரில்லையா'' என்று த்ரௌபதி அவ்வரசனைக் கேட்டாள். பிதாமஹரான பீஷ்மர், ஆசாரியரான துரோணர் மாவீரர்களான தனது கணவர்கள் யாரும் அவளுக்கு உதவ முன் வரவில்லை ''மஹாதாபதி ஸம்ப்ராப்தே ஸ்மர்த்தவ்யோ பகவான் ஹரி:'' என்ற வசிஷ்டவசனத்தை அறிந்தவளாகையாலே,

**சங்கசக்ரகதாபாணே! த்வாரகாநிலயாச்யுத! |**
**கோவிந்த! புண்டரீகாக்ஷ ரக்ஷமாம் சரணாகதாம் ||**

என்று கண்ணனை அழைத்து சரணம்புக்காள், தன்னைத்தான் ரக்ஷித்துக் கொள்ள முடியாது; பிறர்களும் ரக்ஷகராகார்; கோவிந்தனே ரக்ஷகன் என்ற மஹாவிச்வாஸத்துடன் இருகைகளையும் எடுத்து உயர அஞ்சலித்து சரணம் புகுந்தாள். திருமங்கையாழ்வார் பாசுரம் "அந்தகன் சிறுவன் அரசர் தமரசற்கிளையவன் அணியிழையைச் சென்று எந்தமக்கு உரிமை செய் எனத்தரியாது எம்பெருமான்! அருள் என்ன [திருமொழி 2-3-6] [அணியிழை த்ரௌபதி; உரிமை செய்-அடிமை செய்] கண்ணன் த்வாரகையிலிருந்தபடியே அவளிடரைத் தீர்த்து ஆபத்தில் புடவை சுரக்கச் செய்தான். ஸ்ரீவசநபூஷண திவ்யசாஸ்த்ரத்தில் ''உபாயத்துக்கு பிராட்டியையும் த்ரௌபதியையும் போலிருக்க வேணும்; பிராட்டிக்கும் த்ரௌபதிக்கும் வாசி சக்தியும் அசக்தியும்; பிராட்டி ஸ்வசக்தியை விட்டாள். த்ரௌபதி லஜ்ஜையை விட்டாள்'' (80, 81, 82) என்று உலகாரியன் திருவாக்கு: உபாயத்துக்குத் தகுதி தன்னைத்தான் ரக்ஷிக்க முயற்சி ஏதுமற்றி

ருப்பது. இதற்கு பிராட்டியும் த்ரௌபதியும் உதாரணங்கள். உபாயம் என்பது எம்பெருமானே ரக்ஷகன் என்ற அத்யவஸாயம்-திடமான நம்பிக்கை பிராட்டி தேவதேவ திவ்யமஹிஷியாகை யாலே சக்தியுள்ளவளாயிலும் ராமன் வந்து ரக்ஷிக்க வேணும் என்று பொறுத்திருந்தாள். அப்படி சக்தியில்லாத த்ரௌபதி அவன் ரக்ஷிப்பன் என்ற திடமான நம்பிக்கையுடன் வெட்கப்பட்டு கைகளால் புடவைத் தலைப்பை அழுத்திக் கொள்ளாமல் இரண்டு கைகளையும் மேலே தூக்கினாள். இங்கு வ்யாக்யான ஸ்ரீ ஸூக்தி "பேரளவுடையாளாகையாலே (ஞானபூர்த்தியுடையவள்) பிராட்டிக்கு பெருமாளே ரக்ஷகர் என்று விச்வஸித்து ஸ்வசக்தியை விட்டிருக்கலாம்; அத்தனையளவின்றிக்கே இருக்கச்செய்தே மஹாவிச்வாஸம் பண்ணி மஹாஸபாமத்யே இவள் லஜ்ஜையை விட்டதிறே அரிது. லஜ்ஜையை விடுகையாவது துச்சாஸநன் ஸபை நடுவில் துகிலையுரிகிறவளவில் பெண்ணுக்கு இயல்பான வெட்கத்தினால் தான் புடவையின் தலைப்பையிருக்குகையன்றிக்கே இரண்டுகையையும் தூக்கி விடுகை".

இப்படி எம்பெருமானுடை நக்ஷகத்வத்தில் மஹாவிச்வாச முண்டோ எனக்கு? என்று கேட்கிறார் அம்மையார்.

**56. இங்கு பால் பொங்குமென்றேனோ வடுகநம்பியைப்போலே?**

ஆசாரியனைத்தவிர்த்து "தேவுமற்றறியேன்" (21ம் வார்த்தை காண்க) என்றிருப்பது மதுரகவிநிஷ்டை - சரமோபாய நிஷ்டை என்று கொண்டாடப்படுகிறது. எம்பெருமானாருடைய சிஷ்யர்களில் வடுக நம்பி (ஆந்த்ரபூர்ணர்) என்பவர் இந்த நிஷ்டையை யுடையவர். எம்பெருமானாரே தமது பேற்றுக்கு உபாயமென்றும் அவர்க்கடிமை செய்திருப்பதே உபேயம் என்று ஒதுங்குமவரிவர். நாவுக்குக் காரியம் ராமாநுஜ என்ற சதுரக்ஷரியே இவருக்கு.

ஆசாரியரான ராமாநுஜருக்கு அந்தரங்க அடிமை செய்வதே போது போக்காயுள்ள இவர் ஒரு சமயம் ஸ்வாமியுடன் வெளியூர் செல்லும் போது உடையவர் திருவாராதனமான தேவப்பெருமாளையும் தனது திருவாரதனமான ஆசாரியன் திருவடி நிலையையும் ஒரே மூட்டையாகக் கட்டித் தலைமேல்வைத்துக் கொண்டார். உடையவர் இதை ஆக்ஷேபிக்க "உமது பெருமாளுக்கு எனது பெருமாள் குறைந்தவரன்று" என்று இவர் திட்டவட்டமாகக் கூற ஆசாரியரும் "உமக்குத்தோற்றோம்" என்று விட்டுவிட்டாராம். இவர் முதலியாண்டானையும் கூரத்தாழ்வானையும் 'இருகரையர்'

என்றழைப்பர் என்று ப்ரஸித்தம். ஆசாரியன், பகவான் இருவிஷ யங்களிலும் பற்றுடையவர் என்றபடி.

ஒரு சமயம் இவர்கள் இருவரும் மடத்திலிருந்த போது வீதியில் நம்பெருமாள் எழுந்தருள, ஆசாரியர் "வடுகா! பெருமாள் எழுந் தருளுகிறார். சேவிக்கலா" என்று அழைத்தார். அப்போது வடுக நம்பி ஆசாரியனுக்காகப்பால் காய்ச்சிக்கொண்டிருந்தார். "உம்து பெருமாளை ஸேவிக்க நான் இப்போது வந்தால் எனது பெருமா ளுக்குக் காய்ச்சும்பால் பொங்கி வழிந்து மணமும் ருசியும் மாறி விடும் நான் வரவில்லை" என்று சொல்லிவிட்டாராம்.

இப்படி ஆசாரியஸேவையே முக்கியமென்றிருந்தேனோ வடு கரைப் போலே? என்று கேட்கிறார் அம்மையார்.

## 57. இருமிடறு பிடித்தேனோ செல்வப்பிள்ளையைப் போலே?

சைவப்பற்று மிக்குடைய சோழஅரசனால் ஆசாரியரான ராமாநுஜருக்கு ஆபத்து வருமெனப்பயந்த முதலிகள் அவரை மாறுவேடத்தில் ஸ்ரீரங்கத்திலிருந்து வெளியேறிவிடச் சொல்ல அவரும் வெள்ளையுடுத்தி முதலியாண்டான் மற்றும்சிலருடன்மேல் நாட்டுக்குச் சென்றார். கூரத்தாழ்வான் உடையவர் போல காஷாயம் தரித்து த்ரிதண்டமேந்தி பெரியநம்பியுடன் சோழராஜ சபைக்குச் சென்றார். இது வரலாறு. உடையவர் நெடுந்தூரம் நடந்து ஹொய்சால ராஜ்யத்தை (கர்நாடகம்) அடைந்து அவ் வூரரசனைத் திருத்திப்பணி கொண்டு அங்கிருக்கையில் கைவச மிருந்த திருமண் செலவழிந்து போய் மேலே செய்வதென்? என்று க்லேசிக்க, யாதவாத்ரியில் கோயில் கொண்டிருந்த திருநாராயணப் பெருமாள் இவர் கனவில் தோன்றி "யாதவாத்ரி பாழ்பட்டுப் போயிற்று. நான் இங்கு ஒரு புற்றில் இருக்கிறேன். இங்கு வந்து என்னைக் கண்டெடுத்து கோயில்கட்டி ஊரையும் குடியுடையதாக்கி என்னை ஆராதியும். இங்கு திருமண்ணும் நிறைய உண்டு". என்று நியமிக்க அப்படியே அரசனுடைய உதவியுடன் ஊரைக்கண்டு பிடித்து பெருமாளையும் புற்றிலிருந்து எழுந்தருளப்பண்ணி திரு நாராயணனுக்கு மூன்று நாட்கள் தாமே திருவாராதநம் ஸமர்ப் பித்துப்பின்னர் தக்க பாஞ்சராத்ர ஆகமம் வல்லவரைக்கொண்டு திருவாராதநம் பண்ண நியமித்தார்; திருமண் குழைகளைக் கண்டு திருமண் பெற்று மகிழ்ந்தார்.

ஆனால் அந்தத் திருக்கோயில் உத்ஸவமூர்த்தி அங்கில்லாததால் உத்ஸவங்கள் பண்ணமுடியாமல் அதுபற்றிக் கவலையுற்றிருந்த

ஸ்வாமி கனவில் திருநாராயணன் தோன்றி "நமது உத்ஸவர் ராமப்பிரியர் டில்லியில் பாதுஷா மாளிகையில் அவர் மகளிடம் க்ரீடித்துக்கொண்டுள்ளார். நீர் அங்கு சென்று அவரை எழுந்தருளப்பண்ணிவாரும்" என்று நியமிக்க ஸ்வாமியும் அப்படியே பயணமாக டில்லீச்வரனைக்கண்டு ஆசீர்வதித்து நமது பூஜாவிக்ரஹமான ராமப்ரியர் உங்கள் அந்தப்புரத்தில் இருக்கிறார். அவரை நம்மிடம் கொடுக்க வேண்டுகிறேன்" என்று வேண்ட அவனும் அவரை அழைத்து அவர் வந்தாராகில் அழைத்துப் போம் என்ன, ஸ்வாமியும்

**தொடர் சங்கிலிகை சலார்பிலாரென்னத் தூங்கு பொன்மணி யொலிப்ப**
**படுமும்மதப் புனல்சோர வாரணம் பையநின்றூர்வதுபோல்**
**உடன்கூடிக் கிண்கிணியாரவாரிப்ப உடைமணிபலறகறங்க**
**தடந்தாளிணைகொண்டு சார்ங்கபாணி தளர்நடை நடவானோ!**

என்ற பெரியாழ்வார் பாசுரத்தை(1-7-1)அநுஸந்தித்துக்"கண்ணா! வாராய்" என்று அழைக்கராமப்ரியரும் ஸர்வாலங்காரபூஷிதராய் திருவடிகளில் சலங்கையொலிக்க நடந்து வந்து உடையவர் மடியில் உட்கார, இவரும்"வாராய் என் செல்வப்பிள்ளாய்"! என்று அழைத்து உச்சிமோந்து மகிழ்த்தார்; செல்வப்பிள்ளையும் தனது கரங்களால் ஸ்வாமியின் கழுத்தைச்சுற்றி அணைத்து அவருக்குப் பிள்ளையின்பத்தைத் தந்தான். அதிலிருந்து ராமப்ரியருக்கு **செல்வப்பிள்ளை-யதிராஜசெல்வகுமார்**என்று திருநாமமாயிற்று. உடையவரும அவ்வெம்பெருமானை எழுந்தருளப் பண்ணிக்கொண்டு கடுக யாதவாத்ரியையடைந்து செல்வப்பிள்ளையை உபயநாச்சிமாருடன் திருப்ரதிஷ்டை கண்டருளப்பண்ணி உத்ஸவங்களை நடத்தியருளினார். செல்வப்பிள்ளை புறப்பாட்டிலெல்லாம் ஸ்வாமி திருமேனிக்காவலாக எழுந்தருளுவது அங்கு வழக்கத்திலுள்ளது.

இருமிடறு-பெருமை பொருந்திய கழுத்து; செல்வன் அணைத்ததால் இருமிடறாயிற்று என்னலாம். அதை செல்வப்பிள்ளை ஆசையுடன் அணைத்ததை இங்கு அம்மையார் குறிப்பிடுகிறார். அப்படி ஸ்வாமி பெற்றது போல் அணைக்கப் பெறக்கூடுமோ? என்னவுமாம்.

**58. நில்லென்னப் பெற்றேனோ இடையாற்றூர் நம்பியைப்போலே**

திருவாய்மொழில் ஆழ்வார் எம்பெருமானை எப்போதும் மனதில் கொண்டு நினைக்கப் பார்க்கிறார், *கண்ணபிரான்தன்

மலரடிப்போதுகளே எப்போதும் மனத்து ஈங்கு நினைக்கப்பெற வாய்க்குங்கொல்? (7-10-4) என்று பாசுரம். கண்ணபிரானுடைய மலர்ந்த திருவடித்தாமரைகளை இடைவீடின்றி இங்கேயிருந்து மனதில் நினைக்கும்படியான பாக்யம் எப்போது வாய்க்குமோ என்று பொருள் அநுபவத்தைப் பெறுதலைவிட அதற்கு மநோரதிப்பதே-பாரிப்பதே போக்யமாம். அக்ரூரர் மதுரைக்குப் போகும்போது கண்ணனை நாம் காணப்போகிறோம். இப்படியிப்படியெல்லாம் பறிமாற்றம் கிடைக்கும் என்று மநோரதித்தாற்போலேயாம் (1ம்வார்த்தை). இப்பாசுர ஈடுகொண்டின். : மனத்து ஈங்கு நினைத்துப் பெற-முற்காலத்திலே இடையாற்றுக்குடி நம்பியென்பாரொருவருண்டு; அவர் திருநாட்கள்தோறும் பெருமாளை (ஸ்ரீரங்கம்) வந்து ஸேவித்துப் போனால் மறித்துத்திருநாள் வருந்தனையும் இது தன்னையே போதுபோக்காக ஸ்மரித்துக் கொண்டிருப்பாராயிற்று (ஸ்மரிக்கை—நினைக்கை). ஒரு நாள் திருநாள்வ்ருத்தாந்தம் அநுஸந்தியா நிற்கச்செய்தே அமுது செய்தற்குப்போது வைகிற்று என்றார்களாய், "ஆகில் வருகிற திருநாள் அணித்தாயிற்று" என்றாராம். அவர் நூறு வயஸ்ஸும் புகுகையாலே பலஹாமபிலந்துதிருமுளைத்திருநாளில் பெருமாள்புறப்பட்டருளுகைக்கு உதவவநது புகுரப் பெற்றிலர். பெருமாளும் தேடியருளிக் காணாமையால் நம் இடையாற்றுக்குடியான் வந்திலன் நங்கண்ணுலமன்றோ? என்று கேட்டருள திருவுள்ளமானாராம். அவர்தாம் ஆறுந்திருநாளிலே வந்து ஸேவித்திருக்கச் செய்தே "நாம் உமக்குச் செய்யவேண்டுவதென்?" என்று கேட்டருள "தேவரீர் தந்தருளின சரீரத்தைக் கொண்டு போராகாரியங் கொண்டேன்; இனிப்போக்குவரத்துக்கு யோக்யமாகாதபடி போரஜரித்தது" என்ன, "வாராய்! மெய்யே இளைத்தாயாகில் இங்ஙனேயிரு" என்றருளிச் செய்தார். பெருமாள் நடுவிற்றிரு வாசலுக்கு அவ்வருகே யெழுந்தருளுங்காட்டில் திருநாட்டுக் கெழுந்தருளினார்."

இதைச் சிறிது விவரிப்போம் ஸ்ரீரங்கத்தில் பெருமாள் ஆண்டுதோறும் நாலு ப்ரம்மோத்ஸவம் கண்டருளுகிறார். இடையாற்றுக் குடியிலிருந்து ஒவ்வொரு உத்ஸவத்துக்கும் திருமுளைக்கே (அங்குரார்ப்பணம்) வந்து தீர்த்தவாரி முழுதுமாக ஸேவித்துப் போய் தாம் ஸேவித்தபடிகளையெல்லாம் இடைவிடாமல் மனதில் நினைத்திருப்பதே போது போக்காக இருப்பாராம். இதுவே அவருக்கு உணவு சாப்பிட நேரமாயிற்றே என்றால் மீண்டும் திருநாள் நெருங்கிற்றோ? என்பாராம். அவருக்கு 100 வயதாகி மூப்பினால் தம்மூர் விட்டு கோயில் செல்ல சிரமப்பட்டு

ஒரு பிரம்மோத்ஸவத்துக்கு முதல் நாளே செல்ல இயலாமல் ஆறுந்திருநாளன்று சென்று பெருமாளை ஸேவித்தாராம். முதல் நாளனறே இவர் வத்துள்ளாரா என்று பெருமாள் தேடிக் காணுமல் "நம் கண்ணுலத்துக்கு இடையாற்றுக் குடியான் வந்திலனே" என்று குறைபட்டாராம். ஆறுத் திருநாள் இவரைக் கண்டு மகிழ்ந்து "நான் உமக்கு வரம் தருகிறேன் கேளும்" என்ன, நம்பி ஒன்றும் கேளாமல், "நீ தந்த இவ்வாக்கை கொண்டு பல திருநாள்கள் ஸேவித்தேன், அநுபவித்தேன். மூப்பு வந்து இவ் வுடல் போக்குவரத்துக்குத் தக்கதாக இல்லை" என்று மட்டும் சொன்னுர். பெருமாளும் "அத்ரைவ ஸ்ரீரங்கே ஸுகமாஸ்வ" என்பது போலே "இங்கேயே இரு" என்ன, பெருமாள் அடுத்த வீதிக்கு எழுந்தருளும்போது நம்பி திருநாடலங்கரித்தாராம்.

இடையாற்றுக் குடி நம்பியைப் போல் திருநாள் ஸேவிப்பதும் அதையே நினைத்திருப்பதும் செய்து பெருமாளிடம் பரிசு பெற் றேனே? என்கிருர் அம்மையார். (இளையாற்றுக்குடி, இடை யாற்றுக்குடி என்றும் வழங்கும்.)

**69. நெடுந்தூரம் போனேனே நாதமுனியைப் போலே?**

நமது தர்சநத்துக்கு "லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமு நமத்யமாம்" என்கிறபடி பெருமாள், பிராட்டி, சேனையர்கோன், ஆழ்வார் இவர்களுக்குப் பின் **பெரிய முதலியார்** என்று ப்ரதமா சாரியாய்த் திகழ்பவர் ரங்கநாதமிஸ்ரர் என்ற திருநாமமுள்ள நாதமுனிகள், இவர் அஷ்டாங்க யோகம் கைபுகுந்தவர். திருக்குரு கூரில் நம்மாழ்வாரை யோக முறைப்படி ஸாக்ஷாத்கரித்து "நாதனுக்கு நாலாயிரமுரைத்தான்" என்று ஆழ்வாரைப் போற்றும்படி ஆழ்வாரிடமிருந்து நாலாயிர திவ்யப்ரபந்தம் முழுவதையும் பெற்று நமக்குதவிய மஹோபகாரகர். யோகத்தி லாழ்ந்து ஸதா எம்பெருமானை அநுபவித்துப் பழுத்தபடியால் இவர் உலகமெங்கும் எம்பெருமானைக் கண்டார். *திருவுடை மன்னரைக் காணில் திருமாலைக் கண்டேனே என்னும் (திருவாய். 4. 4. 8) என்பது ஆழ்வாரின் அநுபவம். ஒரு நாள் இவர் யோகத் திலிருக்குமிருப்பை சோழவரசன் தனது ஸ்த்ரீகளுடன் வந்து ஸேவித்துப் போக, இவர் விழித்தெழுந்து நெடுந்தூரம் அவர்கள் பின்னே சென்று தமதூரிலிருந்து ராஜதானியான கங்கை கொண்ட சோழபுரத்தளவும் சென்ருர். இவரைத்தேடி இவர் சிஷ்யர்கள் பின்சென்று அவ்வூரையடைந்து ஆசார்யரைக் கண்டு "இப்படி செய்தருள்வதே!" என்ன, 'க்ருஷ்ணனும் கோபிகளு மாகக் கண்டு பின் தொடர்ந்தேன்" என்ருர்.

திருக்கோளூரம்மாள் வார்த்தை—9

பின்னுமொருமுறை இவர் நெடும்போது யோகத்திலிருந்து விழித்தபோது இவரகத்துப் பிள்ளைகள் "இரண்டு வில்லிகள் ஒரு பெண் பிள்ளையுடனும் ஒரு குரங்குடனும் வந்து உம்மைத் தேடி விட்டுப் போனார்கள்" என்று சொல்ல, இவரும் பெருமாளும் பிராட்டியும் பின்சென்ற இளைய பெருமாளும், ஐந்த்ரவ்யாகரண பண்டிதனுமாக (அனுமானும்) வேண்டும் என்று அவர்கள் சென்ற திசையிலேசென்று "இன்னபடி போவாரைக்கண்டதுண்டோ?" என்றுவழியில் விசாரிக்க, "ஆம், கண்டோம்" என்று எதிர்ப்பட்டவர்கள் சொல்ல, 'அப்படியே கங்கை கொண்ட சோழபுரத்தளவில் வர, அங்குள்ளார் இப்படி ஒருவரையும் காணோம் என்ன, இவர் ஏக்கத்தினால் வாடி விழுந்து மோஹித்து அதுவே ஹேதுவாக திருநாட்டையடைந்தார்.

இப்படி பெருமாளைத்தேடி நெடுந்தூரம் நடந்தேனோ? என்று கேட்கிறார் திருக்கோளூரம்மையார்.

**69. அவன் போனானென்றேனோ மாருதியாண்டான் போலே?**

உடையவர் மேல் நாட்டில் சோழன் வ்யாஜமாய் நீண்ட காலம் எழுந்தருளியிருந்தார். (57ம் வார்த்தை காண்க). அடிக்கடி கோயில், நம்பெருமாள், கூரத்தாழ்வான் நினைவு வந்து அங்குச் செல்லத் துடித்து, சோழன் மாளும்படி அபிசாரப்ரயோகம் செய்த தாகவும் கூறுவர். அச்சோழ அரசனை ஒருவன் கழுத்தில் சொட்டையால் குத்த, அப்புண் புழுத்து அவ்வரசன் மாண்டான். அவனை அவ்யபதேச்யன் (பெயர் சொல்லத்தகாதவன்) என்றும், கருமிகண்டன் (புழுக்கழுத்தன்) என்றும் புழுவன் என்றும் நமதாசாரியர்கள் இகழ்வர் மாறொன்றில்லா மாருதிச்சிறியாண்டான் என்று ஒரு சிஷ்யர் உடையவருக்கு உண்டு அவரையழைத்து நீர் கோயிலேறச் சென்று அங்கு பெரியநம்பி, ஆழ்வான் மற்று முள்ளார் நலம் கண்டு வாரும் என்றனுப்ப, அவரும் கோயிலேற வந்து ஆழ்வானிடம் உடையவர் நல்லைச் சொல்லி இங்குள்ள செய்திகளை விசாரித்து ஆழ்வான் கண்ணிழந்ததையும் பெரியநம்பி உயிரிழந்ததையுமறிந்து மிகவும் சோகித்திருந்தவளவிலே சோழன் கருமிகண்டனாய் மாண்டான் என்பதறிந்து மிகவும் சந்தோஷப் பட்டு அப்போதே புறப்பட்டுக் கடுநடை நடந்து உடையவரிடம் முதலில் சோழன் மாண்ட நற்செய்தியை "அவன் போனான்" என்று விண்ணப்பம் செய்தார். உடையவருமதைக்கேட்டு ஆநந்தநிர்பரராய் ஆண்டானையும் அவருடன் வந்த அம்மங்கி

யம்மாள் என்பவளையும் அணைத்து அவ்விருவருக்கும் த்வயத்தை யே மீண்டும் உபதேசித்தருளினர். அதுவே அவர்களுக்கு ஈடான பரிசு என்பது ஸ்வாமியின் திருவுள்ளம். பின்னர் பெரியநம்பி, ஆழ்வான் இவர்களுக்கு நேர்ந்ததை அறிந்து மிகவும் சோகித்து ஒருவாறு தேறி மேல்நாட்டை விட்டு கோயிலுக்கே மீண்டதாக வரலாறு.

இப்படி நெடுந்தூரம் நடந்து ஆசார்யனுக்கு இனிய செய்தி சொன்னேனோ? என்று அம்மையார் கேட்கிறார்.

### 61. அவன் வேண்டா என்றேனோ ஆழ்வானைப்போலே?

சோழ அரசனுடைய சபைக்குச் சென்ற கூரத்தாழ்வானை "இவர் ராமாநுசர் அல்லர்" என்று கண்டு கொண்ட நாலூரான் என்பவன் அதை அரசனிடம் சொன்னான். அரசன் கோபங் கொண்டு ஆழ்வானை "சிவாத்பரதம் நாஸ்தி—சிவனுக்கு மேலான தெய்வம் ஒன்றும் கிடையாது" என்று எழுதிய ஓலையில் கையெழுத்திடும்படிக் கட்டளையிட்டான். ஆழ்வான் சாஸ்த்ரப்ர மாணங்களைக் காட்டி ஸ்ரீமந் நாராயணனே பரம்பொருள் என்று உபன்யஸித்தார் ராஜா அதை ஒவ்வாமல் கையெழுத்திடும் என்று நிர்பந்திக்க "த்ரோணமஸ்திதத: பரம்" என்றெழுதிக் கை யெழுத்திட்டார். சிவம் என்றால் ஒரு சிறு முகத்தலளவு. த்ரோணம் என்பது சிவத்தைவிட மிகப்பெரிய அளவு. கால்படியை விட மரக் கால் மிகப்பெரியதல்லவா? இதைக் கண்ட அரசன் மேலும் கோபங் கொண்டு "இந்த ப்ராம்மணன் கண்ணைப் பிடுங்கி விடுங் கள்" என்றுகட்டளையிட, ஆழ்வான் "மாபாபியான உன்னைக்கண்ட கண் எனக்கு வேண்டாம்" என்று தமது நகங்களால் கண்களைத் தாமே குருடாக்கிக் கொண்டார். ராஜசேவகர்கள் செய்த வதை தாளாது உயிர்நீத்த பெரியநம்பிக்கு அங்குள்ளார்களைக் கொண்டு சரமஸம்ஸ்காரங்களைச் செய்வித்து ஆழ்வான் கோயிலுக்கு மீண்டார்.

ஒருநாள் ஆழ்வான் ஆசாரியனைப் பிரிந்திருந்த துக்கம் தாளாமல் கோவிலுக்குச் சென்று பெருமாளைத் திருவடிதொழலாம் என்று தக்கதுணையுடன் சென்றார். கோவில் காப்பானான ஊழியனுக்கு அரசன் "ராமாநுஜரைச் சேர்ந்தவர்கள் யாரையும் கோவிலினுள் விடாதே" என்று கட்டளை பிறப்பித்திருந்தான். ஆழ்வானிடம் அவ்வாயில் காப்பான் ராஜகட்டளையைத் தெரி வித்து, "நீர் ராமாநுஜரைச் சேர்ந்தவராயினும் குணபூர்ணர், உமக்கு விரோதி என்று எவருமில்லை என்று தெரிகிறது. நீர்

உள்ளே சென்று இருவடி தொழும்' என்ன "எனது குணபூர்த்தி ஆசார்ய ஸம்பந்தத்தை மீறி பெருமாள் ஸேவிக்க உதுவுகிறதோ? அப்படி உடையவர் சம்பந்தத்தை இல்லைசெய்து கொண்டு பெருமாள் ஸேவிக்கத் தேவையில்லை —"அவன் வேண்டாம்" என்று உள்ளே புகாமலே திரும்பி விட்டார். திருப்பாவை 15 எல்லே— உனக்கென்ன வேறுடையை—வியாக்யானத்தில் இவ்வைதிஹ்யம் காணலாம்.

இப்படி பெருமாளும் வேண்டாம் என்னும்படி ஆசார்யஸம்பந்தத்தில் ஆழ்வானைப்போலே ஊற்றமுடையளோ நான்? என்று கேட்கிறுர் அம்மையார்.

## 62. அத்வைதம் வென்றேனோ எம்பெருமானைப் போலே?

எம்பெருமானுரிடம் நேரே விண்ணப்பம் செய்யும் வார்த்தைகளில் ஒரு வார்த்தையைக் காண்பது—அதாவது "எம்பெருமானுரைப் போலே" என்று மூன்றும் மனிதரைக் குறிப்பது போலே கேட்பது ஒரு மாதிரியாக இருக்கிறது. உபநிஷதங்களை விளக்குகையில் மூன்று முக்கிய மதங்கள் தோன்றின. ஒன்று: பரப்ரஹ்மம் ஒன்றே உண்மை. மற்றெதுவும் இல்லை-எல்லாம்பொய்த் தோற்றம் மாயை என்னும் மதம். இது அத்வைதமெனப்படும். பரம்பொருள் என்று சொல்லப்படும் பரமாத்மா ஒன்றேஉள்ளது. ஜீவாத்மா என்பது நமதநுபவத்தில் வேருகத் தோன்றினும் அது பரமாத்மாவினின்றும் உண்மையில் வேறுபட்டதல்ல பரமாத்மாவும் ஜீவாத்மாவும் ஒன்றே என்பது அத்வைத மதம். இது ஆதிசங்கராசாரியர் கண்ட மதம். "தத் த்வம் அஸி" என்ற ப்ரஸித்தமான சந்தோக்ய உபநிடத வாக்யத்தை நீ அதாக இருக்கிறுய்—நீ என்று சிஷ்யனைப் பார்த்து ஆசாரியன் சொல்வது, அது என்பது ஒரே உண்மையான பரம்பொருளைக் குறிப்பது; இது அத்வைத விளக்கம்.

ஜீவபரபேதமே உண்மை; இரண்டும் எப்போதும் ஒன்ருகாது என்பது த்வைதமதம். பேதத்தை ஸ்பஷ்டமாகச் சொல்லும் ப்ரமாணங்களும் உபநிடதங்களில் உண்டு. பூர்வர்கள் காட்டிய வழி சென்று எம்பெருமானுர் பேதத்தையும் அதின்மையான ஒருமையையும் ஒருங்கவிடுவர். இந்த மதம் விசிஷ்ட அத்வைதம் என்று அழைக்கப்படுவதாயிற்று. *உடன்மிசையுயிரெனக் கரந்தெங்கும் பரந்துளன் (திருவாய் 1-1-7) என்பது வேதவாக்கு. எல்லாப் பொருள்களிலும் - சேதநம் (அறிவுள்ளது) அசேதநம் (அறிவற்றது) வாசியில்லாமல் பரமாத்மா அவைகளுக்கும்

உயிராய் அவற்றை இவனிடமிருந்து பிரிக்கமுடியாதபடி சேர்ந்திருப்பதால் ஒவ்வொரு பொருளும் பரம்பொருளின் உருவமாகிறது. *நீராய் நிலனாய்த் தீயாய்க் காலாய் நெடுவானாய் சீரார்சுடர்களிரண்டாய்ச் சிவனாய் அயனாய் (திருவாய் 6-9-1) என்கிறார் ஆழ்வார். இதுவும் வேதவாக்யமே-வேதம் தமிழ்செய்த மாறன உரை. ''அந்தர் பஹிஶ்ச தத்ஸர்வம் வ்யாப்ய நாராயண: ஸ்தித:'' என்கிறபடி நாம் காணும், அறியும் எல்லாப் பொருள்களிலும் நாராயணன் உள்ளும் புறமும் ஒக்க வ்யாபித்துள்ளான். உயிரும் உடலும் வெவ்வேறாயினும் எம்பெருமானை உயிரும் ஜீவாத்மாவான அவன் உடலும் ஒன்றியுள்ளன. ''யஸ்ய ஆத்மா சரீரம், யம் ஆத்மா நவேத'' என்பது உபநிடத வாக்யம், எவனுக்கு ஜீவாத்மா உடலோ எவனை ஜீவன் உள்ளபடி அறியாதோ—என்று பொருள். ஜீவன்—அதன் உயிரான பரமன் இருவரும் அழியாத நித்யதத்வங்கள். இவருள் உள்ள உயிர்-உடல் உறவும் அழியாததே. இந்த உறவை உணர்ந்தால் இரண்டும் ஒன்றே, ஒன்று உண்மை, இரண்டாவது பொய்த்தோற்றம் என்ற வாதம் ஏலாது.

ஸ்ரீபாஷ்யத்தில் மற்றமதத்தினர் கொள்கைகளைக் கண்டித்துள்ளார் பாஷ்யகாரரான ராமாநுஜர், இவர் முக்கியமாக கண்டிப்பது மாயாவாதம் என்ற சங்கர-அத்வைதத்தையே. ''மாயாவாதிபுஜங்கபங்க கருட'' என்று ஸ்வாமி போற்றப் படுகிறார், மாயாவாதம் எனும் பாம்பை ஒடுக்கிய கருடன் என்றபடி. *சாருவாக மதம் நீறு செய்து— குறுகி மாய வாதியரை வென்றிட — மிக்கயாதவமதத்தை மாய்த்த பெருவீரர் நாளுமிக வாழியே [ஆர்த்தி-29] என்று போற்றினர் பின்புள்ளோர். *உயிர்கள் மெய்விட்டு ஆதிப்பரனோடு ஒன்றாமென்று சொல்லும் அவ்வலெல்லாம் வாதில் வென்றான் எம்மிராமானுசன் [இரா. நூற். 58] என்பர் அமுதனார்.

ராமாநுஜர் முதலில் வேதாந்தம் பயின்றது யாதவப்ரகாசன் என்ற அத்வைத ஸந்யாசியிடம். மாணவராயிருந்து பயின்ற போதே குரு சொன்னவைகளை கண்டித்துப்பேசி வேறு நற்பொருள் கூறும் துணிவு இவரிடம் இருந்தது. மஹாவித்வானை யஜ்ஞமூர்த்தி என்ற அத்வைத ஸந்யாஸியை வாதில் வென்று கொண்டு அவரை ஸ்ரீவைஷ்ணவஸந்யாஸியாக ஆக்கின பெருமை ராமாநுஜரையே சாரும்.

இப்படி கூர்மையான அறிவுண்டோ எனக்கு? உலகப்ரஸித்தி பெற்ற அத்வைதமதத்தைக் கண்டிக்கவில்லையே? என்று கேட்கிறாள் அம்மையார்.

63. அருளாழி (முங்) கண்டேனோ நல்லானைப் போலே?

காவேரிக்கரையில் வாழ்ந்து வந்த பிராம்மணோத்தமரான ஒரு ப்ரபு ஒரு நாள் வெள்ளத்தில் ஒரு சவம் அடித்துத்தள்ளப்பட்டு தமது ஊர் கரையில் ஒதுக்கப்பட்டது கண்டார். அச்சவத்தின் புஜத்தில் ஆழி-சங்க இலச்சினைகள் ப்ரகாசிக்கக் கண்ட அந்த அந்தணர் அந்த சவம் வைஷ்ணவன் ஒருவன் திருமேனியெனக் கண்டு என்ன ஜாதி—குலம் என்று ஆராயமல் தாமே ப்ரேதஸம்ஸ்காரத்தைச் செய்தார். அவ்வூரார் அச்சவம் தாழ்குலத்தோன் ஒருவனது; இவர் அதற்கு ஸம்ஸ்காரம் பண்ணினது தவறு என்று அவரை இகழ்ந்து அவரை ஸமூகத்திலிருந்து ஒதுக்கிவைத்தனர். அப்பெரியவரும் அவ்வூரார் மனதைத் திருத்தும்படி பெருமானை வேண்டினர். மறுநாள்கோவிலில் ஸ்ரீ வைஷ்ணவர்கள் குழுவாய் இருந்த போது ஒலக்கத்தில் அர்ச்சகர் மேல் ஆவேசித்து "அந்த ப்ராம்மணோத்தவர் உங்களுக்குப் பொல்லாறாயினும் நமக்கு நல்லானே. நீங்களும் நல்லானாகக் கொள்ளுங்கோள்" என்று அருளிச் செய்தார். எம்பெருமானின் திருச்சக்கரத்தை அருளாழி என்பதுண்டு. அந்த ஆழி இலச்சினை ஒன்றயே கண்டார் நல்லான். மற்றெதையும்காணவில்லை எம்பெருமானின் அருளாழத்தையும் கண்டார்

இவருடைய வேலையாட்களுக்கும் இவர் திருவிலச்சினை ஸாதித்து "எம்பெருமானர் திருவடிகளே சரணம்"! என்றிருக்கும் படி உபதேசித்திருந்தார். உடையவர் மேல் நாட்டுக்கு எழுந்தளிய போது வழிதவரித் தவித்தபோது வேடஜாதியைச் சேர்ந்த இவர்கள் அந்த கோஷ்டி வைஷ்ணவர்கள் என்றறிந்து அவர்களை உபசரித்தனர். எம்பெருமானர் அக்கோஷ்டியில் உள்ளதறிந்து மட்டற்ற மகிழ்ச்சியுடன் வணங்கி சைத்யோபசாரம் செய்து தேனும் தினைமாவும் கொண்டுகொடுத்து உபசரித்தனர். தாங்கள் நல்லானுடைய அடிமைகள் என்றும் அவர் எம்பெருமானர் திருவடிகளே தஞ்சம் என்று தமக்கு நல்வார்த்தை சொல்லியுள்ளதையும் சொல்லிக் காட்டினர். "நல்லான் என்று ஒரு காளமேகம் இப்படி வர்ஷிப்பதே!" என்று ஸ்வாமி உகந்தருளினர். இன்றும் ஸ்ரீபெரும்பூதூரில் சித்திரையில் ஆறும் உத்ஸவத்தன்று உடையவர் ஊருக்கு வெளியில் எழுந்தருளும் போது தினைமா அமுது செய்வது வழக்கத்திலுள்ளது

இந்த வைஷ்ணவ நல்லானுக்கு நல்லான் சக்ரவர்த்தி என்று திருநாமம். இவர் சந்ததியினர் பலகிளைகளாக நல்லான் சக்ர வர்த்தி என்ற பிருதலங்க்ருதராய் இன்றும் பல விடங்களில் வாழக் காண்கிறோம்

வைஷ்ணவன்— திருவாழிபொறிக்கப்பெற்றவன் என் பதையே கண்டு பிறர் என் சொல்வரோ என்பதை நினையாமல் செயல் பட்டேனோ நான் என்று கேட்கிறார் அம்மையார்.

**64. அநந்தபுரம் புக்கேனோ ஆளவந்தாரைப் போலே?**

நாதமுனிகளின் திருப்பேரனான ஆளவந்தார் உத்தமாச்ரமம் ஸ்வீகரித்து ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீவைஷ்ணவர்களுக்கெல்லாம் தலைவராய், ஆசார்யராய் தர்சநம் நிர்வஹித்தருளும் காலத்தில் ஒரு திருவாய்மொழித்திருநாள் முடிவில் திருவரங்கப்பெருமாளரையர் இசை அபிநயங்களுடன் திருவாய்மொழி விண்ணப்பஞ்செய்ய, நம்பெருமாளை ஸேவித்திருந்தார். அப்போது *கெடுமிடராய வெல்லாம் (10-2) எனும் திருப்பதிகம் ப்ராப்தமாக "கெடுமிட ராயவெல்லாம்— அனந்த புரநகர் புகுதும் இன்றே" என்று பாடி, மேலே "கடுவினைகளையலாகும் — எழிலணியந்தபுரம் –நடமினோ நமர்களுள்ளீர் (10-2-8) என்று பாடுகையில் ஆளவந்தார் திரு முகத்தைநோக்கி "நடமினோ—நடமினோ—நடமினோ" என்று மும்முறை பாடினார். இதன் குறிப்பறிந்த ஆளவந்தார் "ஆழ்வாரின் அடியார் குழாத்தில் ஒருவனும்போது திருவநந்தபுரம் புக்கு படமுடையரவில் பள்ளி பயின்றவன் பாதம் காண வேண்டியிருந்தது" என்று அப்போதே பெருமாளை ஸேவித்து அவரநுமதி கொண்டு மடத்திற்கு தெய்வாரியாண்டான் எனும் தம் சிஷ்யரை நோக்கும்படி நியமித்து, தாம் திருவநந்தபுரத்தம்மானைத்திருவடி தொழுது அங்கு சில நாட்கள் எழுந்தருளியிருந்தார்.

நாதமுனிகளின் சிஷ்யரான குருகைக் காவலப்பனுக்குத் அவர் தமது யோக ரஹஸ்யத்தை உபதேசித்திருந்தார். ஆளவந்தார் அப்பனைக் கிட்டி அந்த ரஹஸ்யத்தை உபதேசிக்கும்படி வேண்ட அவரும் தைமாதம் குருபுஷ்யயோகத்திலே வாரும் என்று நாளிட்டுத்தர ஆளவந்தார் திருவநந்தபுரத்திலிருந்தபோது அந்த நாள் ப்ராப்த மானபடியாலே அப்பனிடம் உபதேசம் பெற முடியாமல் போய்விட்டது.

ஆளவந்தார் போல பெருமாள் குறிப்பால் நியமிக்கப் பெற்று திருவநந்தபுரம் புகுந்து ஸேவித்தேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 65. ஆரியனைப் பிரிந்தேனோ தெய்வாரியாண்டானைப் போலே?

ஆளவந்தார் கோஷ்டியாக திருவநந்தபுரம் எழுந்தருளும் போது தெய்வாரியாண்டானை மடத்தை நோக்கிக் கொண்டிருக் கும்படி நியமித்துச் சென்றார். அண்டான் "ஆசாரியனைப் பிரிந் திருப்பாரார்?" என்றிருந்தவர். பிரிவில் மிகவும் நோவுபடும் மென்மையான இதயம் படைத்தவர் ஆயினும் ஆசார்ய நிய மனத்தை சிரமேற்கொண்டு ஆசாரியனைப் பிரிந்திருந்தவர் அப் பிரிவைப் பொறாமல் இவர் உடல் வெளுத்து இளைத்து வந்தது. மற்ற முதலிகள் பயந்து வைத்யம் செய்யப்புக, இவருக்கு இந்த நோய் ஆசாரியனைப் பிரிந்ததால் வந்தது என்றறிந்தனர். அவர் உடல்நிலை நாளுக்கு நாள் க்ஷீணமடைந்து வரவே மடத்திலி ருந்தமற்ற சிஷ்யர்கள் அவரை ஒரு கட்டணத்தில் ஆளவந்தாரிடம் கொண்டுசென்றனர். செல்லச் செல்லஆசாரியனை ஸேவிக்கும் நாள் அணித்தாகிறது என்ற எண்ணத்தில் உடல்நிலை படிப்படியாக குணமாகி, திருவநந்தபுரத்தருகே செல்லும் போது நல்லகுணம் பெற்று தானே நடந்து செல்ல, எதிரே ஆளவந்தார் கோஷ்டி திரும்பும்பயணகதியில்ஒரு ஊரில் தங்கியிருக்க, அங்குஆளவந்தார் திருவடிகளில் ஆண்டான்சென்று தெண்டனிட்டார் ஆளவந்தார் "பெருமாள் சொற்படி பரதன் வைத்த விடத்தே இருந்தார் (16ம் வார்த்தை). பெருமாளைப்போல் நான் ஸ்வதந்த்ரனும் சூரனும லாமையாலே இவர் அப்படியில்லாமல் இங்கு வந்தார்" என் றருளிச்செய்ய, ஆண்டான் ஸ்வரூபஹாநியாயிற்றே என்று பயந்து எழுந்திராமலிருக்க, "என்னை ஸ்வதந்த்ரனுக்கினுலொழிய எழுந்திரேன் என்று கிடக்கிறீரோ?" என்ன மேலும் பயப்பட்டு எழுந்து நின்றார். வந்த சிஷ்யர்கள் நடந்ததை விவரமாகச் சொல்லக், கேட்டஆளவந்தாரும்உகந்து 'மிகவும்மெலிந்தீரே! திரு வநந்தபுரம் போய் பெருமாளை ஸேவித்துவாரும்மென்ன, இவரும் "அடியேனது திருவநந்தபுரம் எதிரே வந்திருக்க அங்குப் போவானேன்?" என்று ஆசாரியரை மீண்டும் தண்டனிட்டார். ஆளவந்தாரும் அவருடைய ஆசார்யநிஷ்டைகண்டு உகந்து அவரையும் கூட்டிக்கொண்டு கோயிலுக்கு மீண்டும் எழுந் தருளினார்.

இப்படி ஆரியனைப்பிரிந்தேனோ? பிரிவினால் மெலிந்தேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 66. அந்தாதி சொன்னேனோ அமுதனாரைப் போலே?

இதுவும் 62 போல எம்பெருமானார் விஷயமான வார்த்தையே· உடையவர் காலத்தில் பெரியகோயில் நம்பி என்பார் நல்ல சாஸ்த்ர அறிவுள்ளவராய் ஸந்நிதியில் பௌரோஹித்யம், புராணபடநம், திறவுகோல் வைப்பு முதலான பல கௌரவங்களையுடையராய் உடையவரை மதிக்காமல் செருக்கராய் இருந்தார். இவர் தம்முடன் ஒத்துழையாமல் எதிரியாய் உள்ளது பற்றி ஸ்வாமி க்லேசப்பட ஆழ்வான் இவரை அநுவர்த்தித்து ஸ்வரூபவுணர்த்தியைப் பிறப்பிக்க, அவரும் திருந்தி ஆழ்வானிடமும் உடையவரிடம் விசேஷ பக்தியுடையவரானார். அழகாகக் கவிப்பாட வல்லவராகையால் அவருடைய அமுதவாக்கையிட்டு அவருக்கு அமுதனார் (திருவரங்கத்தமுதனார்) என்று பெயராயிற்று.

அவர் உடையவர் விஷயமாக ஒன்றிரண்டு ப்ரபந்தங்கள்பாடி அவரிடம் ஸமர்ப்பிக்க, அவை ஸ்வாமி திருவுள்ளத்துக்கு இசைவாக இல்லாமையால் அவரிடம் "உமக்கு ப்ரபந்தம் பாட ஆவல்மிக்கிருந்தால் நமக்கு உத்தேச்யரான உகந்தருளின நிலங்கள், ஆழ்வார்கள், ஆளவந்தார், ஆழ்வான் முதலான விஷயங்களில் நமக்குள்ள ப்ரேமம் விளங்கும்படி ஒருப்ரபந்தம் செய்யும்" என்று நியமித்தார். அப்படியே பாசுரந்தோறும் இராமானுசன் என்ற பெயர் வருமாறு அமைத்து *மாறனடி பணிந்துய்ந்தவன், *குறையல்பிரானடிக்கீழ் விள்ளாத அன்பன், *தென்னரங்கமென்னில் மயலே பெருகுமிராமானுசன் என்பன பல அமைத்து தமக்கு அவ்விராமானுசன் பாலுள்ள ஆராதகாதலையும், கூரத்தாழ்வானருளால் இதுஸாத்யமாயிற்று என்பதனையும் பாசுரங்களில் அமைத்து 108 பாசுரங்களாக அந்தாதித்தொகையாகப் பாடினார். உடையவர் இந்த இராமானுச நூற்றந்தாதியைத் திருச்செவி சாத்தியருளி ப்ரபந்த ஸாவித்ரியாக இது யாவருக்கும் நித்யாநுஸந்தேயமாகக் கடவது என்று நியமித்தருளினார். ஆழ்வார்களுடைய அருளிச் செயல்களுடன் இந்த நூற்றந்தாதி இயற்பா ஆயிரத்தில் இறுதி ப்ரபந்தமாய் சேர்க்கப்பட்டு விளங்குவது ப்ரஸித்தம். *சயந்தரு கீர்த்தி இராமானுச முனி தாளிணை மேல் உயர்ந்த குணத்துத் திருவரங்கத்தமுதோங்கும் அன்பால் இயம்பும் கலித்துறையந்தாதி என்று இப்ரபந்தம் போற்றப்படுவது காணலாம்.

ஆசார்யாபிமானத்துக்குப் போக்குவீடாய் அமுதமென்ன ஒரு நூற்றந்தாதி பாட வல்லேனோ என்று கேட்கிறார் அம்மையார்.

திருக்கோளூரம்மாள் வார்த்தை—10

## 67. அநுகூலஞ் சொன்னேனோ மால்யவானைப் போலே

ராவணனுக்கு நன்மை கூறியவர்கள் பலர். மாரீசன், பிராட்டி, விபீஷணன், கும்பகர்ணன், மால்யவான் இப்படிப் பலர் அவனுக்கு நன்மை பயக்கும் நீதியான வார்த்தைகளைச் சொல்லினர். இவர்களில் மால்யவான் ராவணனுடைய பாட்டனாய் வயதிலும் உலக அநுபவத்திலும் உயர்ந்தவனாய், அறிவாளியாய், ராவணனுக்கு புத்திசொல்லத்தகுதிஉள்ளவனுமானவன். "அரக்கர்க்கரசே! ராமனின் பலமறியாமல் அவனை எதிர்ப்பது நல்லதல்ல. நீ பெற்ற வரங்களில் மனிதராலும் குரங்குகளாலும உனக்குக் கேடு வாராமை சேரவில்லை. மனிதர்களும் குரங்குகளும் இப்போது உனக்கு எதிரிகளாக நிற்கின்றனர். மேலும் இந்த ராமன் சாமானிய மானிடனல்லன். மஹா விஷ்ணுவே மனிதனாக வந்துப் பிறந்திருக்கிறான். யுத்தத்தில் நம் குலமே அழிந்துவிடும். சீதையைத் திருப்பிதந்து சமாதானம் செய்து கொள்" என்று ராவணன் பிழைத்துப் போகும் அநுகூலத்தைச் சொன்னான்.

இப்படித் தீய குணமுடையவரையும் நல்லது சொல்லித் திருத்த முயன்ற மால்யவானைப் போல அநுகூலம் [வாழ்ந்து போகும் வழி] சொன்னேனோ என்கிறார் அம்மையார்.

## 68. கள்வனிவனென்றேனோ லோககுருவைப் போலே?

கள்வன் என்றால் வஞ்சிப்பவன், பிறர் சொத்தை வஞ்சனையால் அபஹரிப்பவன் என்று பொருள். தன் உண்மையை மறைப்பவனும் கள்வனே. பகவான் ஆச்ரிதர்க்கருள் புரிவதற்காகப் பலகளவுகளைச் செய்ததுண்டு; அவனைக் கள்வன் என்று வாக்யம் அமைந்துள்ளமையால் அதற்குச் சேர விளக்கம் தர வேண்டியுள்ளது.

மஹாபலியின் யாகசாலையில் எம்பெருமான் குறள்மணியாய் வந்து மூவடிமண் யாசித்தது பெருங்கள்வம், வாமனனைக் 'கள்வன்' என்று காட்டி பங்கப்பட்டுப் போனான் அசுரகுருவான சுக்ராசாரியன் சுக்ராசாரியரை லோககுரு என்பது உசிதமாகத் தோற்றவில்லை.

ஆழ்வார்கள் அதிலும் குலபதியான நம்மாழ்வார் எம்பெருமானைக் கள்ளனென்பர். ப்ரபந்நஜந கூடஸ்தரான் இவரைலோக

குரு என்பது மிகவும் உசிதம் *கள்ளவேடத்தைக் கொண்டு போய் புரம் புக்க வாறும் (திருவாய் 5-10-4). இங்கு எம்பெருமான் புத்தனாய் அரக்கரை வஞ்சித்து அவர்களுக்கு வேதத்தில் நம்பிக்கையைப் போக்கியதைப் பேசுகிறார். புத்தவேடம் கள்ள வேடமாம். *கொள்வன் நான்மாவலி மூவடிதா என்ற கள்வனே! (3-8-9) என்ற பாசுரத்தையும் நினைக்கலாம்.

*கள்வா எம்மையும் ஏழுலகும் நின்னுள்ளே தோற்றிய இறைவ என்று வெள்ளேறன்—புள்ளூர்திகழல் பணிந்தேத்துவரே (2-2-10) சிவன் எம்பெருமானைக் கள்வா! என்பன் என்று ஆழ்வார் அருளிச் செயல் இதைச் சொன்ன சிவபிரானையும் லோககுரு எனத்தட்டில்லை. *நுண்ணுணர்வின் நீலார்க்கண்டத்தம்மான் (6-10-8) என்று ஆழ்வார் சிவபிரானுடைய ஞானப்பெருமையைச் சொல்வது காண்க. "ஆரோக்யம் பாஸ்கராதிச்சேத் தநமிச்சேத் ஹுதாஶநாத் | ஈஶ்வராத் ஜ்ஞாநமந்விச்சேத் மோக்ஷமிச்சேத் ஜநார்த்தநாத்" என்ற பிரஸித்தமான ப்ரஹ்மாண்ட புராண சுலோகத்தில் ஈஶ்வரன் எனப்படும் சிவனிடமிருந்து ஞானத்தை வேண்டிப் பெறக்கடவன் என்று சொல்வது காணலாம். பகவான் விஷ்ணு சிவனுக்குத்தான் கைலாஸம் வந்து ஒருவரம் பெற்று சிவனும் ஒருமதிக்கத் தக்க தெய்வம் என்று காட்டுவதாக வரம் தந்தான். அந்த நிறைவேற்ற க்ருஷ்ணவதாரத்தில் கைலாச யாத்ரை சென்றான் (6ம் வார்த்தை காண்க). அப்படி வந்து நின்ற க்ருஷ்ணனைப் பார்த்து சிவன், "கள்வா! நீ என்னை ஸ்ருஷ்டித்த இறைவனன்றோ? நான் வேண்டினேன் என்று உன் பெருமைகளை மறைத்து என்னிடம் அர்த்தியாய் வந்து நிற்பதே! இது என்ன கள்ளத்தனம்!" என்று ஈடுபட்டதாக ஹரிவம்சம் சொல்லும. இதை இப்பாசுரத்தில் ஆழ்வார் அருளிச் செய்வதாகக் கொள்ளலாம்.

திருநெடுந்தாண்டகத்தில் (8) திருமங்கையாழ்வார் எம்பிரானை நீரகத்தாய்! நெடுவரையினுச்சிமேலாய்! — கார்வானத்துள்ளாய்! கள்வா! என்று அழைக்கிறார். அவன் தன்னைக் காட்டாமல் ஒளிப்பது கள்ளத்தனம் என்று ஆழ்வார் கருத்து என்று இங்கு வ்யாக்யானம் காணலாம். புள்ளூரும் கள்வா! நீபோகேல் [23] என்பதும் ஒரு இடம். இவ்வாழ்வாரையும் லோககுரு எனத்தட்டில்லை. * கண்ணா! நின்தனக்கும் குறிப்பாகில் கற்கலாம் கவியின் பொருள் என்று எம்பெருமானையே தன்னிடம் கற்கும்படி அழைத்தவரிறே இவர். அடியேன் இறைவனைக் கள்வன் என்றேனே லோககுரு என்னத்தக்கவரான ஜ்ஞாநாதிகர் போலே? என்று கேட்கிறார்.

## 69. கடலோசை என்றேனோ பெரிய நம்பியைப் போலே!

ஆளவந்தாருடைய சிஷ்யர்களில் மாறனேரி நம்பி என்பவர் ஒருவர். இவர் தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவர், ஆளவந்தாருடைய பரிபூர்ணக்ருபைக்குப் பாத்திரரான ஞானி. உடையவருக்காசாரியரான பெரிய நம்பி இவரிடம் மிகவும் அன்பு பூண்டிருந்தார். மாறநேரிநம்பி ஸ்வரூபமுணர்ந்த வைஷ்ணவராகையால் அப்படியல்லாத தமது தேஹபந்துக்களுடன் சேராமல் விலகித்தனியாக வாழ்ந்து வந்தார் ஆளவந்தார் திருநாடலங்கரித்த பின்னர் இவர் நோய்வாய்ப்பட்டுத் தனியாக சிரமப்பட்ட போது பெரியநம்பி இவர் குலத்தைப்பாராதே ஆளவந்தாருடைய க்ருபைக்குக் கொள்கலம், வைஷ்ணவோத்தமர் என்பதை மட்டுமே நோக்கி இவருக்கு வேண்டிய அந்தரங்க சுச்ருஷைகளைச் செய்து தமது அகத்திலிருந்து ப்ரஸாதமும் கொண்டு வந்து ஊட்டி வந்தார். மாறநேரி நம்பி தமது அந்திமதசையில் ''ஆளவந்தார் அபிமானித்த இந்த ஶரீரத்தை தாழ்ந்தவர்களான எனது தேஹபந்துக்களிடம் காட்டித்தர வேண்டாம்'' எனற திருவுள்ளக் கருத்துடன் ''புரோடாசத்தை நாய்க்கிடாதே நோக்கியருள வேணும்'' என்று வேண்டிக் கொண்டார். அதன்படி பெரிய நம்பி மாறநேரி நம்பியின் சரமதிருமேனியை உயர்ந்த ப்ரபந்நாதிகாரிகளுக்குத்தகபடி தாமே புத்ர க்ருத்யம் பண்ணியருளினார். பிராம்மணோத்தமரும் ஆசாரியருமான பெரியநம்பி ஒரு தாழ் குலத்தவருக்கு புத்ரக்ருத்யம் (ஒரு பிள்ளை தனது தகப்பனுக்குச் செய்யும் ஈமச்சடங்கு) செய்தது பற்றி பல அந்தணர்கள் அவரை வெறுத்து விலக்கினர். ஜந்மோத்கர்ஷம் பற்றியருளிச் செய்யும் தொடர்பில் ஆசார்ய ஹ்ருதயம் (85)ல் ''ஐவரில் நால்வரில் மூவரில் முற்மட்டவர்கள் ஸந்தேஹியாமல் ஸஹஜரோடே புரோடா சமாகச் செய்த புத்ரக்ருத்யமும்'' என்ற ஸ்ரீஸூக்தியைக் காணலாம். இந்த புத்ரக்ருதயங்கள் ஜந்மோத்க்ருஷ்டம் (பிறப்பில் மேன்மை) அறிந்து செம்யப்பட்டதால் சிறந்தவை என்பது கருத்து.

ஐவரில்—பஞ்சபாண்டவரில் முதல்வரான தர்மபுத்ரர். ஜாதியில் தாழ்ந்தவரான, ஆனால் ஞானபக்திகளில் சிறந்த விதுராழ்வானுக்கும், நால்வரில்-சக்ரவர்த்தி பெற்ற நால்வரில் முதல்வரான ராமபிரான். பக்ஷியான பெரியவுடையாருக்கு (ஜடாயுவுக்கும்). ஆளவந்தார் சிஷ்யர்களான மூன்று நம்பிகளில் முதல்வரான பெரிய நம்பி மாறநேர் நம்பிக்கும் செய்ததுமான புத்ர க்ருதயங்கள்.

உடையவர் ஆசார்யரான பெரிய நம்பியைக் கிட்டி "சிறியவர் பலரிருக்க இதை தேவரீரே செய்ய வேணுமோ? பலர் வெறுக்கிறார்களே!' என்று அந்தரங்கமாக விண்ணப்பம் பண்ண அவரும் "வாரீர் உடையவரே! இக்ஷ்வாகு வம்சத்திலவதரித்து தர்ம ஸ்வரூபனாய் விளங்கிய பெருமாளைவிட (ஸ்ரீராமனைவிட) நான் பெரியவனோ? பெரியவுடையாரிலும் மாறநேர் நம்பி தாழ்ந்தவரோ? தர்மநிஷ்டரான தர்மபுத்ரரைவிட நான் உயர்ந்தவனோ? விதுராழ்வானைவிட இவர் தாழ்ந்தவரோ? ஆளிடட்டந்தி தொழுவோ? ஆழ்வாரருளிச் செய்த *பயிலுஞ்சுடரொளியும் *நெடுமாற்கடிமையும் கடலோசையோ? [இவ்விரு பதிகங்களும் அடியார் பெருமையைப் பேசுமவை. திருவாய்மொழியில் ஸாரமானவை. கடலோசை—பொருளற்ற ஓசை. ஆளிட்டந்தி தொழுதல்—ஸந்த்யாவந்தனத்தை தனக்காக பிறரைச் செய்யச் சொல்வது]. இவை அடியேன் சொல்லி தேவர் அறியவேண்டிற்றோ?" என்ன, உடையவரும் உகந்து ஸம்மதித்தார். (6000ப்படி குருபரம்பரா ப்ரபாவம்).

ஆழ்வாரின் ஸாரமான அருளிச்செயல் பொருளற்ற வெறும் ஓசையாகப் போகவோ? சிறிதானும் அநுஷ்டிக்கவேண்டாமா? என்பது கருத்து. எம்பெருமானடியார் எம்கோக்கள் என்றார் ஆழ்வார் (கோ–நியமிக்கும் ஸ்வாமி).*நின் திருவெட்டெழுத்தும் கற்று நான் உற்றது முன்னடியார்க்கடிமைஎன்று திருகண்ணபுரத்தம்மானிடம் கலியன் விண்ணப்பித்தார். *உன்னடியார்க்கென்னையாட்படுத்தாய் என்று வேண்டினார் துன்னுபுகழ்மாமறையோனை தொண்டரடிப் பொடியாழ்வர். இவையாவும் பொருளற்ற ஓசையாகவோ? என்று பெரியநம்பி கேட்டுள்ளார். இப்படி தான் மருமறிந்து அநுட்டித்த இவை வெறுங்கடலோசையாகாதே! என்றேனோ பெரியநம்பியைப்போலே? எம்பெருமானார் தம்மிடமே பெரியநம்பி அருளிச்செய்ததை அவரிடமே சொல்லிக் காட்டுகிறார் அம்மையார்.

70. **கற்றிக்கிடந்தேனோ (திரு) மாலையாண்டான் போலே?**

69, 70, 71, 72 இவை நான்கு வார்த்தைகளும் எம்பெருமானார் சரித்திர நிகழ்ச்சிகளை உட்கொண்டவையாக உள்ளன. "பஞ்சாசார்யபதாச்ரய:" என்று உடையவருக்கு ஒருதிருநாமம். ஐந்து ஆசாரியர்களை அடிபணிந்தவர் ஸ்வாமி என்றபடி. பெரியநம்பி ஸமாச்ரயண ஆசார்யனாகையால் முதல்வர். பெரியநம்பி நியமனப்படி திருக்கோட்டியூர் நம்பி பக்கல் ரஹஸ்யார்த்தங்களை அறிந்தார். திருக்கோட்டியூர் நம்பி நியமனப்படி திருமாலை

யாண்டானிடம் பகவத்விஷயம்[திருவாய்மொழியின் ஆழ்பொருள் கேட்டார். ஆளவந்தாரருளிச்செய்த அர்த்தங்களை ஆண்டான் முறையாக அருளிச்செய்துவர, சிற்சில இடங்களில் உடையவர் ''இப்படி இருந்தாலோ? இப்படிச் சொன்னால் நன்றாயிருக்குமே'', என்று வேறு பொருள் கூற (ஈடுமுப்பத்தாறாயிரப்படியில் 15 இடங்களில் இவ்வேறுபாடுகள் காட்டப்பட்டுள்ளன] ஆண்டான் சீறி ''ஆளவந்தார் இப்படி அருளிச் செய்யக் கேட்டிலோம்; நீர் செய்வது விச்வாமித்ர ச்ருஷ்டி'' என்று வெறுத்து காலக்ஷே பத்தையே நிறுத்திவிட்டார். ஒரு உதாரணம்·

* அறியாக்காலத்துள்ளே அடிமைக்கண் அன்பு செய்வித்து அறியாமாமாயத்து அடியேனை [2-3-3] என்னும் பாசுரத்துக்கு ஆளவந்தாரருளிச் செய்தாராய் திருமலையாண்டான் அருளிசெய்த படி — ''அறிவுநடையாடாத பருவத்தில் ஸம்பந்தஜ் ஞானத்தைப் பிறப்பித்து[ஆத்மபரமாத்மஉறவின் உண்மையறிவு] பின்னர் அந்த ஸம்பந்தஜ்ஞானத்தை அழிக்கவல்லதான ஸம்ஸாரத்திலே வைத்தாயே என்று இழவுபடுகிறார்—என்று இத்தை உடையவர் கேட்டு, இவ்வர்த்தம் முன் பின்பாடல்களிலுள்ள ப்ரீதிக்குச்சேரவில்லையே; அறியாதன அறிவித்த அத்தா; [2-3-2] என்று நன்றிப்பெருக் குடன் கூப்பிட்டார் முன்பு; எனதாவியுள் கலந்தபெரு நல்லுதவி [2-3-4] என்று ப்ரீதியுடன் அருளுகிறார் மேலே; இங்கே இப்படி யாக வேண்டும்: அறியாமமாயத்து அடியேனை அறியாக்காலத் துளளே அடிமைகண் அன்பு செய்வித்து வைத்தாயால் என்று உபகாரநினைவுடன் பேசுவதாகக் கொள்ள வேண்டும். இதைக் கேட்ட ஆண்டான் ''இப்படி ஆளவந்தார் அருளிச்செய்யவில்லை. இது விச்வாமித்ர ச்ருஷ்டி'' என்று காலக்ஷேபத்தை நிறுத்தி விட்டார்

காலக்ஷேபம் நின்று விட்டதையறிந்த திருக்கோட்டியூர் நம்பி ஸ்ரீரங்கம் வந்து ஆண்டானிடம் விசாரிக்க, அவர் நடந்தபடியைச் சொல்ல, ''ஆண்டான்! இவ்வர்த்தம் ஆளவந்தார் அருளிச்செய்ய நாம் கேட்டதுண்டு சாந்தீபன் பக்கல் க்ருஷ்ணன்வித்யாப்யாஸம் பண்ணினாப் போலே காணும் உம்முடைய பக்கலிலே எம்பெரு மானார் திருவாய்மொழி கேட்பது; ஆளவந்தார் திருவுள்ளத் திலுள்ள அர்த்தமொழிய வேறு இவருக்கு ப்ரகாசியாது. அவரறி யாததை நீர் சொல்வதாக எண்ண வேண்டாம். காலக்ஷேபம் தொடர்ந்து நடக்கட்டும்'' என்று சொல்லி தாமும் பெரிய நம்பியும் கூடவிருந்து காலக்ஷேபத்தை மீண்டும் ஆரம்பித்து வைத்தார். ஆண்டானும் இது ஒரு அவதாரவிசேஷம்

என்று கண்டு கொண்டு "ஆளவந்தார் பக்கல் கேட்காத அர்த்தமெல்லாம் இங்கே கேட்டோமாளேம்" என்று ப்ரீதராய் "போதயந்த: பரஸ்பரம்" என்ற க்ரமத்தில் மேலும் நடத்தி முடித்நார். உடையவரை அநுவர்த்தித்தாகிலும் காலக்ஷேபத்தை நடத்தி முடிக்கும்படி திருக்கோட்டியூர் நம்பி நியமித்தபடி ஆண்டான் செய்ததை சுற்றிக்கிடந்ததாக இங்கு சொல்லுகிறது. திருமாலையாண்டான் தமது குமாரரான சுந்தரத்தோளுடையாரை உடையவருடைய சிஷ்யராக ஆக்கிவைத்தார்.

எம்பெருமானுர் ஒரு அவதார விசேஷமென்றறிந்து அவரை சுற்றிக்கிடந்தேனே? என்று அவரையே கேட்கிருர் அம்மையார்.

## 71. சூளுறவு கொண்டேனே திருக்கோட்டியூரார் போலே?

உடையவரிடம் விசேஷ அபிமானமுடைய பெரியநம்பி அவரிடம் "திருக்கோட்டியூர் நம்பியிடம் உமக்காக ஆளவந்தார் சில ரஹஸ்யார்த்தங்களை வைத்துப் போயிருக்கிருர், அவர் ஸ்ரீபாதத்தே சென்று கேளும்" என்று நியமிக்க இருவரும் திருக்கோட்டியூர் சென்று நம்பியை தண்டனிட்டு "அடியேனை கடாக்ஷித்து ஆளவந்தார் திருவுள்ளத்திலான ரஹஸ்யார்த்தங்களை அடியேனுக்கு உபதேசிக்க வேணும்" என்று வேண்ட, அவர் முகங்கொடாமலே இருந்து விட்டார். பின்பொரு சமயம் நம்பி ஸ்ரீரங்கம் வந்துப்பெருமாளைத் திருவடி தொழுதபோது பெருமாள் அர்ச்சகர் மூலம் "உடையவருக்கு ரஹஸ்யார்த்தங்களை ப்ரஸாதியும். அவற்றைக்கேட்கததக்க அதிகார பூர்த்தியுள்ளவர் அவர்" என்று நியமித்தார். இருந்தும் உடையவர் மறுமுறை திருக்கோட்டியூர் சென்று வேண்டினபோது மனமிறங்கவில்லை. அர்த்தத்தின் சீர்மையொன்றையே பார்த்து, தகுதியில்லாதவர்க்கு சொல்லுகிருமோ என்று பயந்து மேலும் மேலும் உடையவருடைய அத்யவஸாயத்தை சோதித்து 18 தடவை அவரை ஸ்ரீரங்கத்திலிருந்து திருக்கோட்டியூருக்கு நடக்க வைத்து [ஒரு மாதம் உபவாஸம் இருக்க விட்டதாகவும் கூறுவர்] கடைசியில் இறங்கி, "தண்டும் பவித்திரமுமாக தாமொருவர் மட்டிலே வருவது" என்று நியமிக்க, உடையவரும் முதலியாண்டானையும் கூரத்தாழ்வானையும் (இவர்களே முறையே திரிதண்டமும் ஜல பவித்திரமும்) அழைத்துச் சென்றுர். நம்பியை தண்டனிட்டு "தண்டும் பவித்திரமுமாக வந்தேன்" என்று விண்ணப்பஞ் செய்து வேண்ட, "இவர்களுக்குத் தவிர வேறொருவர்க்கும் சொல்லாதே கொள்ளும்" என்று தம் திருவடியைத் தொடுவித்து சூளுறவு

கொண்டு பெரிய திருமந்த்ரத்தின் ஆழ்பொருளை உபதேசித்தருளி ஞர் [சூளுறவு—ஆணையிட்டு அதை மீற மாட்டேன் என்று சபதம் பெறுவது]. பின்னர் எம்பெருமானாரைத் தனியாக வரச்சொல்லி மீண்டும் சூளுறவு கொண்டு சரமச்லோகார்த்தத்தை உபதேசித்தார்.

பின்னர் திருமந்த்ரார்த்தத்தை நரசிங்கப்பிரான் திருவோலக் கத்தில் ஸ்ரீவைஷ்ண கோஷ்டியில் உடையவர் க்ருபையுடன் வெளி யிட்டார். திருக்கோட்டியூர் நம்பி அர்த்தத்தின் சீர்மை யொன்றையே நோக்கி அதைப் பரம ரஹஸ்யமாகப் பேணிப் போந்தார். உடையவர் மக்கள் துர்க்கதியை ஒன்றையே நோக்கி யாவரும் வாழவேண்டும் என்ற பரந்த இதயத்துடன் பாருலகில் ஆசையுடையோர்க்கெல்லாம் தாம் சொல்லியும், தமது சிஷ்யர் களைச் சொல்லச்செய்தும் நாட்டை வாழ்வித்தார். திருக்கோட்டியூர் நம்பி அநுவ்ருத்தி ப்ரஸன்னாசாரியர். தம்மை மீண்டும் மீண்டும் அநுவர்த்தித்து ஆர்த்தியுடன் கேட்டவர்க்கு மட்டும் அவர் தகுதி சோதித்தறிந்து இரங்குமவர். எம்பெருமானார் க்ருபாமாத்ர ப்ரஸந்நாசாரியர்—கேவல க்ருபையாலே வந்து செவிதாழ்த்தார்க் கெல்லாம் சொன்னார்.

இப்படி அர்த்தத்தின் சீர்மையையே மனதில் கொண்டு அவதார புருஷரையும் சூளுறவு கொண்டார் திருக்கோட்டியூர் நம்பி அந்த உறைப்பு அடியேனுக்குண்டோ? ஸ்வாமி போல் யாவரும் வாழவேண்டுமென்ற பரந்த உள்ளம் தானுண்டோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 72. உயிராயப் பெற்றேனோ ஊமையைப்போலே

உடையவர் மடத்தில் ஒரு ஊமை ஸ்ரீவைஷ்ணவர் வாய்த்த கைங்கர்யங்களைச் செய்து கொண்டு எம்பெருமானாரை அன்புடன் நோக்குவதையே போதுபோக்காக் கொண்டு வாழ்ந்து வந்தார். உடையவருக்கு இவர்பால் அருள்சுரந்து ஒருநாள் இவரை அந்த ரங்கமாக அழைத்து அரைக்கதவை அடைத்துக்கொண்டு தம் திருவடிகளை அவர் திருமுடிக்கணியாக வைத்து அநுக்ரஹித்து, செய்கை மூலம் "இத்திருவடிகளையே தஞ்சமாகப்பற்றியிரு" என்று உபதேசித்தார். இதை ஜன்னல் கம்பி வழியே பார்த்த கூரத்தாழ் வான் சதுஷ்சாஸ்த்ரவித்வானாய் கெட்டேனே; ஒன்றுந்தெரியாத ஊமையாயிருந்தால் இப்படி அருள்புரிந்திருப்பாரே என்றுதம்மை

வெறுத்துக் கொண்டதாகக் கூறுவர். அந்த ஊமை வைஷ்ணவரும் உடையவர் திருமேனி சேவையும் திருவடிகளையுமே ப்ராப்யமாக எண்ணியிருந்தார். உயிராய-மிகவும் அவசியமானது; அதில்லாமல் வாழமுடியாத முக்கியமான விஷயம்]. அமுதனாரும் நிரயத்தொய்யில் கிடக்கிலும் சோதிவிண்சேரிலும உன் தன் மெய்யில் பிறங்கிய சீரன்றி வேண்டிலன்யான்—இராமானுசா! என் செழுங்கொண்டலே! [ரா.நூ 104] என்று அநுஸந்தித்தார். (மெய்யில் பிறங்கிய சீர்—திருமேனியழகு முதலான குணங்கள்).

அந்த ஊமையைப் போலே தேவரீது நிர்ஹேதுக கடாக்ஷத்துக்கிலக்காகி உயிரான—இன்றியமையாத—உபதேசம் பெற்றேனோ? என்று ஸ்வாமியையே கேட்கிறார் அம்மையார்.

73. உடம்பை வெறுத்தேனோ திருநறையூரரைப் போலே.

பிள்ளை திருநறையூரரையர் என்று ஒரு ஆசாரியர் ஞானபக்திகளில் மிக்கவராய் பட்டர் காலத்தில் வாழ்ந்திருந்தார். உடையவர் காலத்திலுமிருந்தவராகக் கொள்ளலாம். அருளிச் செயல் வ்யாக்யானங்களில் இவரை பட்டருக்கு பூஜ்யர் எனத்தெரிகிறது. இவர் உடம்பை வெறுத்துத் திருநாடலங்கரித்தது. உடையவர் காலத்துக்குப் பின்னர் நடந்த நிகழ்ச்சியாயிருக்கவேணும். இவ்வாக்யம் எம்பெருமானாரிடம் விண்ணப்பம் பண்ணப்படுவது உபபந்தமாகத் தோற்றவில்லை. ஆயினும் விஷயத்தை கவனிப்போம்.

ஸ்ரீவசநபூஷணம் (80) **உபேயத்துக்கு இளையபெருமாளையும் பெரியவுடையாரையும் பிள்ளை திருநறையூரரையரையும் சிந்தியந்தியையும் போலே இருக்க வேணும்; (84) பெரியவுடையாரும பிள்ளை திருநறையூரரையரும் உடம்பையுபேக்ஷித்தார்கள்; சிந்தியந்திக்குடம்பு தன்னடையே போய்த்து. (உபேக்ஷிக்கை—வேண்டாமென்று விடுகை).

பிள்ளை திருநறையூரரையர் கீழ்நாட்டில் (தொட்டியம்) திருநாராயணபுரம் என்ற தலத்தில் கோயில் கொண்டுள்ள வேதநாராயணப் பெருமாளை ஸேவிப்பதற்காகக் குடும்பத்துடன் சென்றிருந்தபோது புரசமயிகள் சிலர் அக்கோயிலுக்கு நெருப்பு வைத்தனர். இது கண்டு உளளிருந்தவர் யாவரும் வெளியே ஓடிவிட்டனர். அந்த எம்பெருமான் திருமேனிக்கு அழிவு வருகிறபடியைக் கண்டு பொறுக்க மாட்டாத அரையர் அத்யந்த ப்ரேமாதிசயத்தாலே பெருமாளுடன் தாமும் ஒக்க முடிவதாக முடிவுசெய்து கொண்டு நிற்க, பிள்ளைகளும் இவரை விட்டுப் போவோம் என்று நிற்க, எல்லாருமாகப் பெருமாள் திருமேனியைச் சுற்றிக் கொண்டு கிடந்து உடம்பை விட்டனர். இது வ்யாக்யானத்தில் மணவாள மாமுனிகள் அருளியுள்ள விவரணம்.

**திருக்கோளூரம்மாள் வார்த்தை—11**

இப்படி அர்ச்சா மூர்த்தியின் திருமேனியில் தம்முடம்பை உபேக்ஷித்து அத்திருமேனியைப் பேணுமளவுக்கு விச்வாஸமும் ப்ரேமையும் எங்கும் காணக்கிடைக்காது என்பதைஇவ்வார்த்தை வலியுறுத்துகிறது.

## 74. என்னைப்போல் என்றேனோ உபரிசரனைப்போலே?

உபரிசரவஸு என்பவன் தனது நாட்டை தருமநெறிப்படி ஆண்டு வந்த ஒரு அரசன். தருமமறிந்தவன், அதன்படி நடப்பவன் என்று ப்ரஸித்தனாயிருந்தான். இவனுக்கு தருமதேவதையருளால் பூமிக்குமேலே சஞ்சரிக்கும் ஆற்றல்இருந்ததால்உபரிசரவஸு எனப் பெயர் பெற்றான். ஒருசமயம் தேவர்களுக்கும் ரிஷிகளுக்கும் யாகபசு பற்றி ஒருவிவாதமெழுந்தது. ஜீவஹிம்ஸை செய்யாதே என்று வேதத்தில் ஸாமாந்யவிதி உண்டு. ஆனால் யாகத்தில் பசு வதைசெய்யலாம் என்பது விசேஷவிதி. இங்கு பசு என்பது நாலு கால் ம்ருகஸாமான்யத்தை ஆட்டைச் சொல்வது. யாகபசுவை (ஆட்டை) இன்னின்னபடி அபிமந்த்ரித்து கொன்று அதன் வபையை ஹோமம் செய்ய வேண்டுமென்று வேதவிதி. இது ஜீவ ஹிம்ஸை கூடாது என்ற ஸாமாந்ய தர்மத்துக்கு முரணானதால் ரிஷிகள் ஜீவஹிம்ஸையைத்தவிர்த்து தானியத்தை அறைத்த, மாவினால் யாகபசுபோல் உருசெய்துஅதை முறைப்படி அபிமந்த்ரித்து அதன் வபை பாகத்தை எடுத்து ஹோமம் செய்யலாம் என்று சொல்லி அதன்படி செய்தனர். இதை தேவர்கள் ஒப்பவில்லை. நிஜமான (உயிர்வாழும்) பசுவைக் கொண்டு யாகம் பண்ணினால்தான் தங்கள் ஹவிர்பாகங்களை ஏற்போம் என்று கூறினர். இந்த வழக்கை உபசரவஸுவிடம் தர்மம் சொல்லும்படி இருகக்ஷியினரும் எடுத்துச் சென்றனர்.

உபரிசரவஸு தன்னுயிர்போல பிற உயிர்களையும் மதிப்பவனானதையால் ரிஷிகள் கூற்றையே ஆமோதித்தான். இதனால சீற்றங் கொண்ட தேவர்கள் நீ பூமியில் விழக் கடவாய் என்று சபித்தனர்.

என்னைப்போல்தானே இந்த யாகபசுவும் உயிர்வாழத்தக்கது? அதை வதை செய்தால் தகாது என்பது உபரிசரவஸுவின் பக்ஷம்.

தேவர்கள் பக்ஷம் தீர்ப்பு சொன்னதால் ரிஷிகள் சபித்தனர் என்று சொல்வாருமுண்டு. ரிஷிகள் அவனிடம் ஜாபாலி ராமனிடம் பேசியது போல நாத்திகம்பேசி அவனைக்கலக்கி தருமநெறியினின்றும் பிழறவைக்க முயன்றனர்; ஆனால் அவன் அவர்களை "ஊரும் நாடும் உலகமும் தன்னைப்போல் என்கிறபடி திருத்தி வாழ்

வித்தான். இதைத்தான் ''என்னைப்போல்'' என்பது குறிக்கிறது என்பது இந்த சரித்திரம்.

இப்படிவேறுபட்ட இரண்டு விளக்கங்களிலும் உபசரவஸு தன்னலமற்ற பெரியவனாகவே காணப்படுகிறான். இவன் வளர்ப்புப் பெண் பதுமினியை திருக்கண்ணபுரம் சௌரிபெருமாள் மணந்தார் என்று திருக்கண்ணபுரத்தல வரலாறு கூறும். தேரழுந்தூர் தலமாஹாத்ம்யத்திலும் உபசரவஸு பேசப்படுகிறான். சரியான சரித்திரத்தை வல்லவர் வாய்கேட்டுணர்க

உபரிசரவஸுபோல உயர்ந்தேனோ என்று கேட்கிறார் அம்மையார்.

**75. யான் சிறியனென்றேனோ திருமலை நம்பியைப்போலே?**

திருமலை நம்பி என்பவர் ஆளவந்தாருடைய சிஷ்யர்களில் ஒருவர்; உடையவருக்குத் தாய்மாமன் உறவாகவேண்டும், உடையவருடைய பஞ்சாசார்யர்களில் இவரும் ஒருவர்.

உடையவர் முதல்தடவையாக திருமலைக்கெழுந்தருளி அப்பனை மங்களாசாஸனம் பண்ணவேணும், அநந்தாழ்வான் அமைத்த நந்தவனத்தை கடாக்ஷிக்கவேணும் என்று திருமலையாத்ரையாக எழுந்தருளினார். அப்போது திருமலை திருவநந்தாழ்வானின் திருமேனியானதால் ஏறிச்செல்ல விருப்பமில்லாவிடினும் சிஷ்யர்களுடைய நிர்ப்பந்தத்தின்பேரில் மலை ஏறி திருப்பரியட்டப்பாறையளவிலே எழுந்தருள, உடையவரின் அம்மானும் ஆசாரியருமான பெரியதிருமலை நம்பி பெருமாளுடைய தீர்த்தம் முதலான ப்ரஸாதங்களை எடுத்துக் கொண்டு ஸ்ரீவைஷ்ணவகோஷ்டியுடன் எதிர்கொண்டார். உடையவரும் ப்ரசாதங்களை ஸ்வீகரித்து ''ஸ்வாமீ! இச்சிறியேனுக்காக தேவரீர் இவ்வளவு தூரம் எழுந்தருள வேணுமோ? வேறுயாராவது சிறியாரை வரவிடலாகாதோ?'' என்ன, ''நம்பி இத்திருமலையில் எங்கு ஆராய்ந்தாலும் என்னிலும் சிறியார் யாரையும் காணேன்'' என்றருளிச் செய்தார் ''பரஸ்பர நீச பாவை:'' என்று சொல்லுகிறபடியே ஒவ்வொருவரும் தானே சிறியவன் என்று மனதில் கொள்வது ஸ்ரீவைஷ்ணவஸ்வரூபம். ஆழ்வாரும் ''சீலமில்லாச் சிறியன்'' (திருவாய்) என்று தம்மைக் கூறிக் கொள்வது காண்க.

இந்த ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் அடியேனிடமுள்ளதோ? என்று கேட்கிறார் திருக்கோளூரார்.

## 76. நீரில் குதித்தேனோ கணபுரத்தாளைப் போலே?

பலருக்கும் ஆசாரியராய், அழகாக திவ்யப்ரபந்தங்களுக்குப் பொருள் சொல்லக்கூடிய வாக்மியான ஒரு மஹான் ஸ்ரீ ரங்கத்தருகில் திருக்காவேரியைக் கடக்க ஒரு தாழியில் சென்று கொண்டிருந்தார். தாழி என்பது ஒரு விதமான தெப்பம்; பரிசில் போன்றது. இருட்டுவேளை; தூரல் தூரிக்கொண்டிருந்தது. ஆற்றிலும் வெள்ளம் கோத்துக் கொண்டிருந்தது. இப்படிப்பட்ட நிலையில் தாழி சென்று கொண்டிருக்கையில் தாழிக்காரன் "தாழி கனத்தினால் நீரில் அமுங்குமோ என்று பயமாயிருக்கிறது. நன்கு நீந்த வல்லவர் ஓரிருவர் தாழியை விட்டிறங்கினால் தாழியைப் பத்திரமாகக் கரைசேர்க்கலம். இல்லாவிட்டால் எல்லாரும் அமிழ்ந்து போவோம்" என்றான். ஒருவருமே இறங்க முன்வரவில்லை. கணபுரத்தாள் என்னும் ஸாத்விக அம்மையாரொருத்தி தாழிக்காரனைப்பார்த்து "நீ நூறுபிராயம் புகுவாய்; நலத்தோடு வாழ்வாய், எங்களாசாரியரைக் கரையிலே கொண்டுவிடு" என்று சொல்லி நீரில் குதித்தாள். தாழியும் ஒருவழியாய்க் கரைசேர்ந்தது. அந்த ஆசாரியஸ்வாமி "வீணே ஒரு அம்மையார் நீரில் விழுந்தாளே" என்று பல முறை சொல்லி வருத்தப்பட, அந்த அம்மையார் காதில் அதுகேட்டு "ஸ்வாமீ! அடியேன் ஒரு மேட்டில் இருக்கிறேன். தேவரீர் வருத்தப்பட வேண்டாம்" என்று குரல் கொடுத்தாள். அதுகேட்ட ஆசாரியர் உகந்து தாழிக்காரனைக் கொண்டு அவ்வம்மையாரைக் கரைசேர்த்தார். அவளும் ஆசாரியரைத் தெண்டனிட்டு "அடியேன்ஆற்றில் மூழ்கிவிடாமல் அங்கு ஒரு கோரைமேடாய் வேரீர் வந்து ரக்ஷித்தருளிற்றே" என்று விண்ணப்பிக்க "உமது விஸ்வாஸம் இது வானால் அப்படியே ஆகாதோ" என்று உகந்து அருளிச் செய்தார்.

ஆசாரியனை எல்லாவுறவுமாக எண்ணி அவர் நலனுக்காகத் தன்னுயிரையும் பேணாத கணபுரத்தாள் போலே ஆசார்யபக்தியுடையேனோ நரன்? என்று அம்மையார் கேட்கிறார். [இந்த நிகழ்ச்சி குருபரம்பரை நூல்களில் நம்பிள்ளை விஷயமாகக் கூறப்பட்டுள்ளது. எம்பெருமானார் பட்டர் போன்ற மற்ற ஆசாரியர்கள் விஷயத்திலும் பொருந்தும்].

## 77. நீரோருகங் கொண்டேனோ காசிசிங்கனைப் போலே?

காசி மாநகரில் சிங்கன் என்ற பெயருள்ள ஒரு ப்ரபு வாழ்ந்து வந்தான். பரமவிஷ்ணுபக்தனான அவன் தினமும் அவ்வூரிலுள்ள நீர் நிலைகளுக்குச் சென்று தாமரை மலர்களைத் தானே பறித்து

அவற்றை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து பூசித்து வந்தான். நீரில் நீந்துவதில் அவனுக்கு நல்ல தேர்ச்சி உண்டு. ஒரு சமயம் நீந்துவதில் தனது வல்லமையை நினைத்து செருக்குற்று கங்கை வெள்ளத்தில் இக்கரைக்கும் அக்கரைக்குமாகப் பலமுறை நீந்துவதாகப் பறைசாற்றி அப்படியே செய்கையில் திடீரென்று பெருவெள்ளம் வந்து அவனை அடித்துப் போய் 'ஒரு சுழலில் சிக்க வைத்து விட்டது. தன்னால் ஆன மட்டும் முயன்றும் அவனால் அச்சுழலினின்றும் தப்பி வெளிவர முடியவில்லை. தான் அஹங்காரப் பட்டது பெரியதவறு என்பதை உணர்ந்து வருந்திய அவனுக்கு முன்பு எம்பெருமான் ஒரு யானைக்கு அருள்சுரந்த சரித்திரம் நினைவுக்கு வர, "ஆதிமூலமான பிரானே! அன்று பேராபத்தில் சிக்கிய ஒரு யானை உயிர் போகும் தருவாயில் உன்னை நினைத்து அழைக்க, உடனே மடுக்கரைக்கு ஓடோடி வந்து ரக்ஷித்தனையே! அப்படியே இவ்வேழையையும் இவ்வாபத்தினின்றும் ரக்ஷித்தருள வேண்டும்; உன்னையன்றி வேறுபுகல் அறியேன்" என்று ஆர்த்தியோடு வேண்டினான். அப்போது திடீரென்று பெருங்காற்று ஒன்று வீசிற்று அதன் விளைவாய் ஒரு பெரிய அலை வந்து அவனை அந்த நீர்ச்சுழிலிருந்து வெளியிலிழுத்து கரையில் கொண்டு தள்ளிற்று. சிங்கனும் இப்படித்தன்னை ஆபத்தினின்றும் மீட்ட எம்பெருமானருளை நினைத்துருகி, அஹங்காரம் முழுதும் நீங்கப் பெற்றவனாய் நூற்றுக்கணக்கில் தாமரை மலர்களைப் பறித்துவந்து எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்து பூசித்து மன நிம்மதி பெற்றான் [நீரோருகம் = தாமரை].

இந்த நிகழ்ச்சியை மனதில் கொண்டே திருக்கோளூரம்மாள் "நீரோருகங் கொண்டேனோ காசிசங்கனைப் போலே?" என்று கேட்டிருக்கிறார்.

### 78. வாக்கினால் வென்றேனோ பட்டரைப்போலே?

கூரத்தாழ்வான் திருக்குமாரரான ஸ்ரீபராசபட்டர் சிறு பிள்ளைப் பருவத்தில் ஸ்ரீரங்கத்தில் வீதியில் பிள்ளைகளுடன் விளையாடிக் கொண்டிருந்தபோது ஸர்வஜ்ஞபட்டன் என்ற மாயாவாதி வித்வானொருவன் தண்டிகையிலேறி சிஷ்யர் புடை சூழ காளமூதல், கட்டியங்கூறல் முதலான ஆடம்பரங்களுடன் வீதியில் செல்வதைப் பார்த்தார். உடன் "இவன் யாரடா? உடையவர், ஆழ்வான், ஆண்டான், எம்பார் முதலான பல பெரியோர்களிருக்கத் தெருவே விருதூதி வருவது? இவன் ஸர்வஜ்ஞதையை நான் ஆராய்ந்து விடுகிறேனிப் போதே" என்று கையில் ஒரு பிடி மண்ணெடுத்துக் கொண்டு போய் அந்த

வித்வானெதிரில் நின்று, "நீர் ஸர்வஜ்ஞனென்பது உண்மையானால் இது எவ்வளவென்பதைக கூறவேண்டும். இல்லாவிடில் விருது ஏதும் ஊதக் கூடாது' என்ன அவ்வித்வானும் என்ன சொல்வ தென்று தோன்றாமல் ப்ரமித்திருக்க, பட்டர், 'இது ஒரு கை மண்' என்று சொல்லத் தெரியவில்லையே! உமக்கு விருதூதுவது ஏன்?'' என்ன, அம்மாயாவாதியும் இவருடைய மழலைகேட்டு இக்குழந்தை யார் குமாரர்? என்று விசாரித்து ஆழ்வான் குமாரர் என்பதறிந்து ''அம்மம்ம! பறப்பதன் குஞ்சு தவழுமோ?'' என்று ஆச்சரியப் பட்டு பட்டரைத் தனது தண்டிகையில் ஏற்றி வைத்துக்கொண்டு ஆழ்வான் திருமாளிகை வாசலிலே விட்டான். அங்கிருந்த பொன்னாச்சியார் இவர் செய்த சேவகத்தைக் கேட்டுகந்து த்வயாநுஸந்தாநத்தாலே ரக்ஷையிட்டு ஆண்டாளிடம் ''இவரைத் திருவீதியில் கண்ணெச்சிற்படும்படிப் போகவிடுவதே!'' என்று கொடுத்தார்.

பின்னர் எம்பெருமானார் நியமனப்படி (அவர் காலத்துக்குப் பிறகு] பட்டர் மேல் நாடு சென்று மாதவர் என்ற பெயருடைய வராய் வேதாந்தி என்று கொண்டாடப் பெற்ற மஹாவித்வானைத் தனது வாக்குவல்லமையால் வெற்றி கொண்டு தம் சிஷ்யராக்கிக் கொண்டார். இந்த மாதவாசாரியர் பின்னர் நஞ்சீயர் என்ற புகழ் பெற்ற ஆசாரியராகத் திகழ்ந்தார் என்ற வரலாறு அறியத் தக்கது.

சிறுபருவத்திலே பட்டர் பெரியவித்வானை வாக்கினால் வென்றது போலே அடியேன் செய்யவல்லலேனோ? என்று கேட்கிறார் அம்மையார்.

## 79. வாயிற்கையிட்டேனோ எம்பாரைப் போலே?

எம்பார் என்று ப்ரஸித்தமான ஆசாரியரின் முன் திருநாமம் வட்டமணி கோவிந்த பட்டர் என்பது. உடையவரின் சிறிய தாயார் குமாரர். இவர் காசியில் கங்கையில் நீராடினபோது கையில் சிவலிங்கமகப்பட, அந்த நிகழ்ச்சியினால் சைவப்பற்றுடை யராய் ஸ்ரீகாளஹஸ்தியில் வாழ்ந்திருக்க, உடையவரின் வேண்டு கோளின்படி பெரியதிருமலை நம்பியால் திருத்திப்பணிகொள்ளப் பட்டு நம்பியுடன் திருப்பதியில் அவருக்குப் பணி செய்து வாழ்ந் திருந்தார். அச்சமயத்தில் உடையவர் ஸ்ரீராமாயணத்தின் ஆழ்பொருள்களை நம்பி ஸ்ரீபாதத்தில் கற்கும் பொருட்டு திருப்பதி யில் தங்கியிருந்தார். அப்போது எம்பாரின் தன்மைகளைக் கூர்ந்து நோக்கும் வாய்ப்பு கிட்டிற்று.

பிறர் துக்கம் கண்டால் "ஐயோ" என்று இரங்குபவனே ஸ்ரீ வைஷ்ணவன் என்று ஆட்கொண்டவில்லி ஜீயர் வார்த்தை. இந்த ஸ்ரீவைஷ்ணவலக்ஷணம் எம்பாரிடம் நிறைந்திருந்தது. திருவாய் மொழிப்பாசுரங்களை இவர் நிர்வஹிப்பதில் இந்த இயல்பு அங் கங்கே தலைகாட்டும். ஒருசமயம் உடையவர் நந்தவனத்தில் எம்பார் ஒருபாம்பின் வாயில் கையிட்டுவிட்டு நீராடிவந்து தமது ஆசாரியகைங்கர்யங்களில் தொடர்ந்து ஈடுபடுவதைக் கண்டு "கோவிந்தரே! அந்த பாம்பிடம் என்ன செய்தீர்?" என்று கேட்டார். அதற்கு அவர், அப்பாம்பு நாக்கை வெளியே நீட்டிக் கொண்டு நோவால் துடித்துக் கொண்டிருந்தது. அருகில் சென்று பார்த்ததில் அதன் நாக்கில் ஒரு முள் பொத்திக் கொண்டிருக்கக் கண்டு அதைப்பிடுங்கிப்போட்டேன் நோவிலிருந்து விடுபட்ட அப்பாம்பு உடனே ஓடிவிட்டது. என்றார் "இப்படியும் ஒரு பூத தயையா?" என்று உடையவர் மிகவும் வியந்து அவரை ஆசீர்வதித தார்.

"பாம்பென்றால் படையும் நடுங்கும் என்பது பழமொழி. தமக்கு என்ன தீங்கு வருமோ என்று பயப்பட்டு விலகிப் போகா மல் பாம்பு பட்ட நோவையே நினைத்து அதற்கு உதவியது ஆச்ச ரியமான செயலாம். இப்படி நான் செயல்பட வல்லேனோ என்று கேட்கிறார் அம்மையார்.

## 80. தோள்காட்டிவந்தேனோ பட்டரைப்போலே?

இவ்வாக்கியத்தின் அடிப்படை நிகழ்ச்சியாதென்று நிச்சய மாகத் தெரியவில்லை. இப்படி இருக்கலாம்; நம்பெருமாள் புறப் பாடுகண்டருள எழுந்தருளுகையில் கூட்டமாயிருக்க, பெருமாள் புறப்பாட்டுக்காக கூட்டம் விலக்குமவர்கள் மான்தோல் பட்டை யால் தரையில் அடிப்பர்கள் சிலசமயம் சேவார்த்திகள் மேல்பட வாய்ப்புண்டு. ஒருசமயம் பட்டர் எழுந்தருளும் போது கூட்டம் விலக்குமர்கள் பட்டையால் தரையைத்தட்ட, அந்த அடிபட்டர் தோள்மேல் பட்டதென்றும் கூறப்படுகிறது கூட்டம் விலக்கும் கைங்கர்யபரர் புதியவராகையால் பட்டரை இன்னாரென்றறியா மல் நடந்துவிட்ட காரியமிது. பட்டரின் சிஷ்யர்கள் அந்த பட்டை யடிப்பவரைக் கடிந்துபேசியதறிந்து "அவர்கள் தங்களுக்கிட்ட பணியைச் செய்தனர். இதில் தவறேதுமில்லை. ஸந்நதி கைங்கர்ய பரர்களால் அடிக்கப்பட்டதால் என்ன குறைவு வந்து விட்டது" என்று சமாதானப்படுத்தி அந்த கைங்கர்யபரரிடம் "உங்கள் கடமையை நீங்கள் செய்தது சரியே. அடியேன் ஒருதோளில் அடி

பட்டபோது இன்னொரு தோளையும் காட்டியிருக்கவேணும். அப்படி உடனே செய்யாததற்கு வருந்துகிறேன். இப்போது காட்டுகிறேன். என்னிடம் எந்தத் தவறு இருந்தாலும் தக்கபடி தண்டிக்கலாம்'' என்றார். அந்த கைங்கர்யபரர் வெட்கித் தனது முரட்டுத்தனத்திற்கு வருந்தி பட்டரிடம் க்ஷமை வேண்டினார்.

குற்றம் புரிந்தவர் பக்கல் க்ஷமையும் பொறையும் இருப்பது ஸ்ரீ வைஷ்ணவலக்ஷணம். இப்படி பொறையும் க்ஷமாகுணமும் அடியேனிடம் எப்போதாவதுண்டோ? என்கிறார் அம்மையார்.

## 81. துறை வேறு செய்தேனோ பகவரைப் போலே?

அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் அருளிச் செய்த ஆசார்ய ஹ்ருதயத்தில் ஒரு ஸூத்ரம்: 'ஸாதநஸாத்யங்களில் முதலும் முடிவும் வர்ணதர்மிகள் தாஸவ்ருத்திகளென்று துறை வேறிடுவித்தது'' [32] இதை ஸாதனத்தில் முதல் வர்ணதர்மிகள் என்று துறைவேறிடுவித்தது; ஸாத்யத்தில் முடிவு தாஸவ்ருத்திகளென்று துறைவேறிடுவித்த்து என்று பிரித்துக் கொள்ள வேணும். ஸாதநமாவது ஒரு பலனையடைய நாம் கடைப்பிடிக்கும் வழி. ஸாத்யமாவது பலன். பகவத் விஷயத்தில் ஸாதநத்தில் முதல்படி கர்மம். இது வர்ணாச்ரம தர்மாநுஷ்டானத்தில் தொடங்கும். ஸாதநத்தில் முதல்படியிலுள்ளவர்களை வர்ணதர்மிகள் என்று சொல்லிற்று. இங்கு ஸாத்யம். *உமக்கே நாமாட் செய்வோம் என்னும் தாஸவ்ருத்தி கைங்கர்யம்; இது எல்லை நிலமாம். ஆகையால் ஸாதநத்தில் முதல்நிலையிலுள்ளவர்ண தர்மிகள் ஒரு துறையினர், ஸாத்யத்தின் முடிவில்—எல்லை நிலத்திலுள்ள தாஸவ்ருத்திகள் வேறு துறையினர். முதலவர் தர்மாநுஷ்டானத்துக்கு உதாரணமாக ஸந்த்யாவந்தனத்திற்கு இன்னின்ன காலத்தில் செய்ய வேண்டுமென்று விதி உண்டு. பகவத் பாகவத கைங்கர்யங்களில் ஈடுபட்டுள்ளவருக்கு இந்த விதியை முழுதாகக் கடைபிடிக்க முடியாது. வேளை தவறிவிட்டது என்று இவர்கள் கவலைப்படுவதில்லை கைங்கர்யத்தை முடித்துப்பிறகே ஸந்த்யாவந்தநாதிகளைச் செய்வார்கள். இந்த ஸூத்ர வ்யாக்யானத்தில் காணும் ஒரு ஐதிஹ்யம்:-

திருவயிந்திரபுரத்தில் **வில்லிப்புத்தூர்பகவர்** என்பாரொருவர், மற்றவர் எல்லாரும் ஒரு துறையிலே அநுஷ்டாநம் பண்ண, தனியே ஒரு துறையிலே அநுஷ்டாநம் பண்ணுவார். ஒருநாள் இவர் அநுஷ்டாநம் பண்ணி மீளாநிற்கச் செய்தே முன் துறையிலிருந்த ப்ராஹ்மணர் [கேவலம் வர்ணதர்மிகள்] ''ஜீயரே! எங்கள் துறையிலே

அநுஷ்டானம் பண்ணவராதொழிகிறதென்? என்ன ''விஷ்ணு தாஸா வயம், யூயம் ப்ராஹ்மணா: வர்ணதர்மிண:; அஸ்மாகம் தாஸவ்ருத்திநாம் யுஷ்மாகம் நாஸ்தி ஸங்கதி:'' என்று துறை வேறிட்டுப் 'போனாராய்த்து'' பகவர் வார்த்தை—நாங்கள் எம் பெருமானாரடியாரான ஸ்ரீவைஷ்ணவர்கள் நித்யகர்மாநுஷ் டானங்களை கேவலம் பகவத் கைங்கர்யமாக அநுஷ்டிப்பவர்; நீங்களோ வர்ண தர்மத்தில் ஊன்றின பிராம்மணர்கள்; ஆகவே உமக்கும் எமக்கும் சேர்த்தி பொருந்தாது'' என்று. பகவர்— ஸ்வரூபமுணர்ந்த ப்ராஹ்மணோத்தமர், ஸந்யாஸி என்னவுமாம்.

இப்படி கைங்கர்யத்தின் பெருமையை அறிந்து தர்மாநுஷ்டா னத்தை மட்டுமே செய்பவரிடமிருந்து வேறுபட்டேனோ? என்று திருக்கோளூரம்மையார் கேள்வி.

**திருக்கோளூரம்மாள் வார்த்தை விவரணம் முற்றிற்று**

**முடிவுரை** : இதிஹாஸ புராணங்கள், ஆழ்வாராசாரியர் களின் திவ்ய சரித்திரங்கள் மற்றும் நாட்டில் நடையாடும் கதை கள் இப்படிப் பலவிதமான ஞானமுடையவரே இவ்வார்த்தை களைச் சொல்லியிருக்க முடியும் இவ்வார்த்தைகளை **''திருக்கோளூர் பெண்பிள்ளை ரஹஸ்யம்''** என்றே சொல்லி வருகின்றனர். முன் னுரையில் கூறியபடி இவற்றுக்கு விவரணமாக அடியேனறிந்த வரை வெளிவராத நூல் [Unpublished] ஒன்றும் வெளிவந்துள்ள [Published] நூல் ஒன்றும் உள்ளன. வெளிவராத நூலுள்ளது வெளிவந்த நூலில் குறிப்பிடப்பட்டு அதற்கு நன்றியும்தெரிவிக்கப் பட்டுள்ளது. அடியேன் இதை இன்னும் விரிவாக, காலக்ஷேபத் துக்குப் பயன்படுமாறு எழுதவேணுமென்ற நோக்கத்துடன்எழுதி யுள்ளேன். வெளியிடப்படாத அடியேனுடைய தாயாரின் நூலே இதற்கு அடிப்படை, ஆதாரம். அதை விரிவாக்கி மாற்றவேண்டிய இடங்களில் மாற்றியமைத்து எழுதியுள்ளேன். இந்நூலை அடியேன் தாயார் **ஸ்ரீமதி வெங்கடாபுரம் ரங்கநாயகி அம்மாள் (ரங்கப்ரியா)** திருவடிகளில் அன்புக்காணிக்கையாக ஸமர்ப்பிக்கிறேன். இந்த விவரணத்தின் தரமறிந்து ரஸிப்பதை வாசகர்பங்குக்கு விட்டு விடுகிறேன்.

**தாஸன் V V ராமாநுஜன்.**

எம்பெருமானார் திருவடிகளே சரணம்